
# மூன்றாம் உலகில் பெண்ணியமும் தேசியமும்

குமாரி ஜயவர்த்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் பாகம்

**குமாரி ஜயவர்தன** அவர்கள் தனது இரண்டாம் நிலைக் கல்வியை இலங்கையில் பெற்றுக் கொண்டதுடன், பின்னர் லண்டன் பொருளியல் பள்ளியிலும் (London School of Economics), பாரிஸிலுள்ள அரசியல் விஞ்ஞான நிறுவனத்திலும் (Institut de Science Politique) கல்வி கற்றார். அவர் 1985 ஜுலை வரையில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் விஞ்ஞானத் துறையில் இணைப் பேராசிரியராகக் கடமையாற்றினார். மேலும், 1981 -1982 இல் ஹேக் நகரில் அமைந்துள்ள சமூக கற்கைகள் நிறுவனத்தின் (Institute of Social Studies) பெண்கள் ஆய்வுகள் நிகழ்ச்சித் திட்டத்தில் போதனாசிரியராக அவர் செயற்பட்டார். ஆங்கில மொழியில் *இலங்கையில் தொழிற்சங்க இயக்கத்தின் எழுச்சி (Rise of The Labor Movement in Ceylon* -Duke University Press) மற்றும் *இலங்கையில் இனத்துவ மற்றும் வர்க்கப் போராட்டங்கள் (Ethnic and Class Struggles in Sri Lanka* -Colombo, 1985) போன்ற நூல்களினதும், சிங்கள மொழியில் பல நூல்களினதும் ஆசிரியராவார். அவர், இலங்கையின் பெண்கள் இயக்கத்திலும் சிவில் உரிமைகளுக்கான இயக்கத்திலும் முனைப்பான விதத்தில் செயற்பட்டு வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகில் பெண்ணியமும் தேசியமும்

## இரண்டாம் பாகம்

(மூன்றாம் உலகில் பெண்ணியமும் தேசியமும் என்ற ஆங்கில நூலின் துருக்கி, எகிப்து, ஈரான், ஆப்கானிஸ்தான் ஆகிய பகுதிகளின் தமிழாக்கம்)

குமாரி ஜயவர்த்தன

வெளியீடு
சமூக விஞ்ஞானிகள் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | : | மூன்றாம் உலகில்<br>பெண்ணியமும் தேசியமும்<br>இரண்டாம் பாகம்<br>(மூன்றாம் உலகில் பெண்ணியமும் தேசியமும் என்ற நூலில் துருக்கி. எகிப்து. ஈரான். ஆப்கானிஸ்தான் ஆகிய பகுதிகளின் தமிழாக்கம்) |
| ஆசிரியர் | : | குமாரி ஜயவர்த்தன |
| தமிழாக்கம் | : | பி.முத்தையா |
| மூலம் | : | Feminism and Nationalism in the Third World<br>By Kumari Jayawardena |
| பதிப்புரிமை | : | குமாரி ஜயவர்தன. 2003 ஓகஸ்ட் |
| வெளியீட்டாளர் | : | சமூக விஞ்ஞானிகள் சங்கம்<br>425/15. திம்பிரிகஸ்யாய வீதி<br>கொழும்பு — 05 |
| அச்சிட்டோர் | : | ஈகுவாலிற்றி கிராபிக்ஸ்<br>315, ஜம்பெற்றா வீதி<br>கொழும்பு —13 |
| விலை | : | ரூபா 200 |
| ISBN | : | 955-9102-63-X |


*எனது தாயார் எலினோர் (ஹட்டன்) டி சொய்சா,*
*சிற்றன்னை டொரிஸ் ஹட்டன்,*
*டொரீன் விக்ரமசிங்க*
*ஆகியோரின் நினைவாக இவ்வாக்கத்தை*
*வெளியிடுகின்றேன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


முன்னுரை vii

1. அறிமுகம் 1

2. துருக்கியில் நாகரிகத்தின் மூலம் பெண் விடுதலை 16
டான்ஸிமெட் (மறுசீரமைப்பு) 20
இளம்துருக்கியர் இயக்கம் 25
கெமல்வாதிகளின் புரட்சி 31
முடிவுரை 46

3. எகிப்தில் சீர்திருத்த வாதமும் பெண்களின் உரிமைகளும் 50
எகிப்தில் சீர்திருத்தவாதம் 52
ஆண் சீர்திருத்தவாதிகளும் பெண்களின் உரிமைகளும் 59
தேசியவாதமும் பெண்களின் ஆர்ப்பாட்டமும் 64

4. ஈரானில் பெண்கள் போராட்டமும் "மேல் மட்டத்திலிருந்து வந்த விமோசனமும்" 74
பெண் தலைவர்கள் 80
ஆண் சீர்திருத்தவாதிகளும் பெண்களின் உரிமைகளும் 82
ரெஷாகானின் கொள்கைகள் 91

5. ஆப்கானிஸ்தானில் பெண் விடுதலைக்கான முயற்சிகள் - ஒரு குறிப்பு 100




# முன்னுரை

இந்நூல் நெதர்லாந்து சமூக கற்கைகள் நிறுவனத்தின் பெண்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 1982 இல் வெளியிடப்பட்ட *19ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மூன்றாவது உலகில் பெண்நிலைவாதமும் தேசியவாதமும்* என்ற நூலின் திருத்தப்பட்ட, விரிவாக்கப்பட்ட ஒரு பதிப்பாகும்.

இந்நூலில் பெண்நிலைவாதத்தின் ஆரம்ப வருடங்களையும், பல கீழைத்தேச நாடுகளில் "புதிய பெண்ணின்" எழுச்சியையும் நான் எடுத்து விளக்கியுள்ளேன். பின்னைய கால கட்டங்கள் தொடர்பாகவும் இந்நூலில் குறிப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், இவ்வாய்வு அடிப்படையில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியையும், 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியையும் பின்புலமாகக் கொண்ட ஒரு வரலாற்று ஆய்வாகவே இருந்து வருகின்றது. மூன்றாவது உலக நாடுகளில் பெண்நிலைவாதம் என்ற விடயம் தொடர்பான ஓர் அறிமுகத்தை வழங்குவதே எனது நோக்கமாகும். மூன்றாவது உலகில் வாழும் பெரும்பாலான மக்கள் தமது நாடுகள் முனைப்பான பெண்நிலைவாதத்துடன் கூடிய ஒரு வரலாற்றைக் கொண்டுள்ளன என்பதனையோ, அல்லது அந்நாடுகளில் பெண்களின் எழுச்சிக்கான ஆரம்ப கால இயக்கங்கள் பெண்களினதும் ஆண் சீர்திருத்தவாதிகளினதும் ஆதரவைப் பெற்றுக் கொண்டிருந்தன என்பதையோ, அறியாதவர்களாக இருந்து வருகின்றனர். அது மட்டுமன்றி, காலனித்துவ பாணியிலான கல்வியின் விளைவாக பெரும்பாலான மக்கள் ஏனைய மூன்றாவது உலக நாடுகளின் வரலாற்றுடனும் கூட பரிச்சயமற்றவர்களாக இருந்து வருகின்றனர். எனவே, ஒவ்வொரு நாடு தொடர்பான ஆய்விலும் ஓரளவுக்கு அந்நாட்டின் வரலாற்றுப் பின்னணியையும் நான் சேர்த்துக் கொண்டுள்ளேன். புரட்சிகர இயக்கங்களிலும், ஜனநாயக இயக்கங்களிலும் பெண்களின் பங்கேற்பும் இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த விடயங்களில் அதிகமானவை வரலாற்று நூல்களில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள போதிலும், அத்தகைய போராட்டங் களில் பெண்கள் வகித்த பாத்திரம் குறித்து போதிய அளவில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. பொதுவாக நாங்கள் "கதாநாயகர்களைப்" பற்றி மட்டுமே கேள்விப்படுகின்றோம். ஆசியாவின் எண்ணற்ற "கதாநாயகிகள்" குறித்து எமக்கு எதுவும் தெரியாது.

சமகால ஆசியப் பெண்கள் இயக்கங்களை பகுப்பாய்வு செய்வதற்கு ஆசியாவின் பெண்நிலைவாதத்தின் இயல்பு மற்றும் உள்ளடக்கம் குறித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரளவிலான புரிந்துணர்வு அவசியமாகும். எமது நாடுகளைச் சேர்ந்த பெண்களைத் தொடர்ந்தும் அடிமை நிலையில் வைத்துக் கொள்ள விரும்புபவர்கள் பெண்நிலைவாதத்தை ஒரு வெளிநாட்டுச் சித்தாந்தமாகக் காட்டி, உதாசீனப்படுத்த முயன்று வரும் சூழ்நிலைகளில் இப்புரிந்துணர்வு முக்கியத்துவம் பெறுகின்றது. எனவே, பெண்நிலைவாதம் சோஷலிசத்தைப் போலவே எந்தவொரு குறிப்பிட்ட இனத்துவ அடையாளத்தையும் கொண்டிருக்கவில்லை என்ற விடயத்தை இங்கு வலியுறுத்துவது அவசிய மாகும். மேலும், மூன்றாவது உலகின் விடுதலை மற்றும் சமூக மாற்றம் என்பவற்றுக்கான எந்தவொரு இயக்கமும் அனைத்து மட்டங்களிலும் பெண்களின் பங்கேற்பினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் மட்டுமே பலப்படுத்தப்பட முடியும். அவ்வாறு பங்கேற்பதன் மூலம் அவர்கள் தம்மை சுரண்டலிலிருந்தும், அடக்குமுறையிலிருந்தும், தந்தை வழிச் சமூகக் கட்டமைப்புக்களிலிருந்தும் விடுவித்துக் கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

தமது நாடுகளில் நிலவி வந்த காலனித்துவ ஆட்சியாளர்களின் ஆதிக்கத்துக்கு எதிராக ஆசிய மக்கள் அதிகரித்த அளவில் அணி திரண்டு வந்த பின்புலத்தில், பெண்நிலைவாதம், பெண்களின் எழுச்சி மற்றும் அரசியல் போராட்டங்களில் பெண்களின் பாத்திரம் போன்ற பொதுவான பிரச்சினை களை இந்நூல் கலந்துரையாடுகின்றது. பெண்களின் எழுச்சி தொடர்பாக இக்காலப் பிரிவின் போது இடம்பெற்ற போராட்டம் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் தவிர்க்க முடியாத விதத்தில் பின்னிப் பிணைந்திருந்ததுடன், அக்கால கட்டத்தின் ஜனநாயகப் போராட்டங்களின் அத்தியாவசியமான ஒரு கூறாக, இருந்து வந்தது. மற்றொரு விடயத்தையும் இங்கு வலியுறுத்துதல் வேண்டும். அதாவது, ஒரு சில காலனித்துவ நாடுகளில் அல்லது அரைக் காலனித்துவ நாடுகளில் பூர்ஷுவா பிரிவினர் மிக முக்கியமான ஒரு பாத்திரத்தினை வகித்து வந்த ஒரு கால கட்டம் குறித்து இந்நூல் கவனத்தில் எடுக்கின்றது. அக்கால கட்டத்தின் போது பூர்ஷுவா வகுப்பைச் சேர்ந்த பெண்கள் குட்டி பூர்ஷுவா வகுப்பைச் சேர்ந்த பெண்களுடனும், உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்களுடனும் இணைந்து ஜனநாயக உரிமைகளுக் கான பல்வேறு போராட்டங்களில், பங்கேற்றுப் போராடுவதற்கு முன் வந்தார்கள். எனினும், காலனித்துவத்துக்கு பிற்பட்ட அரசிலும், ஒரு முதலாளித்துவ கட்டமைப்புக்குள்ளும் பூர்ஷுவாக்கள் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொண்டிருந்த சூழ்நிலையில் இந்தக் கால கட்டத்தைச் சேர்ந்த "புதிய பெண்கள்" துரதிர்ஷ்டவசமாக மீண்டும் தமது குடும்பப் பாத்திரங்களுக்குள் தஞ்சம் புகத் தொடங்கினர் அல்லது "சம உரிமைகள்" என்ற விடயம் தொடர்பாக மட்டும் கவனம் செலுத்தத் தொடங்கினர். எனினும்,





ஏனையவர்கள் இப்போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றதுடன், சமூக மற்றும் பொருளாதார மாற்றங்களை வேண்டி நின்ற புரட்சிகர இயக்கங்களில் தம்மை இணைத்துக் கொண்டனர். இந்தச் செயன்முறைக்கூடாக அவர்கள் அரசியல் இயக்கங்களுக்குள் புரட்சிகரமான பெண்நிலைவாதக் கண்ணோட்டம் ஒன்றை எடுத்து வந்தார்கள். அத்தகைய பெண்களின் போராட்டம் பல நாடுகளில் இன்றும் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது. இந்நாடுகளைச் சேர்ந்த பெண் போராளிகள் தேசிய விடுதலை, பெண் விடுதலை மற்றும் சோஷலிசம் என்பவற்றிற்கான இயக்கங்களில் பங்கேற்று வருகின்றனர்.

இந்த ஆய்வுக்கான ஆதாரங்கள் பரந்த வீச்சிலான மூலங்களிலிருந்து திரட்டப்பட்டதுடன், அவை நூற் தொகுதியில் தரப்பட்டுள்ளன. இந்த நூலுக்கான விடயங்களைத் தொகுப்பதில் (எதியோப்பியாவைச் சேர்ந்த) அலம் தேஸ்தாவின் அளப்பரிய உதவி எனக்குக் கிடைத்தது. அவர் நெதர்லாந்தின் அம்ஸ்டர்டாம் நூலகத்திலிருந்தும் ஏனைய நூலகங்களிலிருந்தும், பெண்கள் சுவடிக் கூடப் பிரிவுகளிலிருந்தும் பல அரிய நூல்களைத் தேடிப் பெற்றுத் தந்தார். இந்த ஆய்வின் பாகங்கள் குறித்து தமது கருத்துக்களை தெரிவித்தவர்களுக்கும், பெறுமதிமிக்க யோசனைகளை முன் வைத்தவர் களுக்கும். விடயங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு உதவியவர்களுக்கும் நான் நன்றிக் கடன்பட்டுள்ளேன். குறிப்பாக, சமூக கற்கைகள் நிறுவனத்தின் பெண்கள் ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னோடியாகச் செயற்பட்டு, மூன்றாவது உலக நாடுகளின் பல பெண்நிலைவாதிகளுக்கு உத்வேகத்தைப் பெற்றுத் தந்த மேரியா மைஸ் அவர்களுக்கு இங்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். மேலும் கம்லா பாசின், சுஸான் எக்ஸ்டீம், சுவர்ணா ஜயவீர, டெனோவன் மோல்ட்ரிச், சிசிலியா நாங், சித்ரா மௌனகுரு, ஹொவார்ட் நிக்கலஸ், ரோடா ரெடொக், ரொஸலின் டிபல்கோ, என். சண்முகரட்ணம் ஆகியோருக்கும், வேறு பல நண்பர்களுக்கும், சமூக கற்கைகள் நிறுவனத்தின் பெண்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மாணவர்களுக்கும், பெண்நிலைவாதம் குறித்தும் மூன்றாவது உலகப் பெண்கள் குறித்தும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக என்னுடன் பல கலந்துரையாடல்களை நடத்திய இலங்கைப் பெண்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். எனினும், இந்நூலில் காணப்படும் பிழைகளுக்கு அவர்கள் பொறுப்பாக மாட்டார்கள். Zed Books நிறுவனத்தைச் சேர்ந்த ரொபர்ட் மொல்டெனோ அவர்களுக்கும், அவர் எனக்கு வழங்கிய ஊக்குவிப்புக்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இந்நூலை பதிப்பிப்பதிலும் வெளியிடுவதிலும் எனக்குப் பல்வேறு வழிகளில் உதவிய அனைவருக்கும் குறிப்பாக ஜீன்ஸ் அன்டர்ஸ், ஹொசலின் பேயின்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். ஜேகப் ஆகியோருக்கும் Zed Books நிறுவனத்தின் ஏனைய ஊழியர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூலின் தமிழ்ப் பதிப்பிற்கு நிதியுதவி வழங்கிய CIDA நிறுவனத்திற்கும் இதன் தமிழாக்கத்திற்கு உதவிய பி.முத்தையா அவர்களுக்கும், அதனை அச்சிட்டு உதவிய சிவகுமார் அவர்களுக்கும் (நிகரி வெளியீட்டாளர்கள்) எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக இத்தமிழ்ப்பதிப்பு வெளிவருவதற்கு மொழிபெயர்ப்பிலிருந்து அச்சுப்பதிப்பித்தல் ஈறாக அனைத்துக்கும் இணைப்பாளராகச் செயற்பட்ட மோகனா பிரபாகரன் அவர்களுக்கும் என்நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**குமாரி ஜயவர்தன**

இல. 69, கிரகரீஸ் வீதி,

கொழும்பு 7,

இலங்கை.



# 1.அறிமுகம்

எகிப்தின் அரைவாசி மக்களது பிரதிநிதிகளையே நான் இங்கு பார்க்கிறேன். ஏனைய அரைவாசிப் பேர் எங்கே என்று நான் கேட்கலாமா? எகிப்தின் புதல்வர்களே. எகிப்தின் புதல்விகள் எங்கே? உங்களின் அன்னையரும். சகோதரிகளும். உங்களின் மனைவியரும். புதல்வியரும் எங்கே?

*(1910ம் ஆண்டு பிரசல்சில் நடைபெற்ற எகிப்திய தேசியக் காங்கிரசின் கூட்டத்தில் இந்தியாவைச் சேர்ந்த பிக்காய்ஜி காமா ஆற்றிய உரையில் இருந்து)*

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் கீழைத்தேயத்தைச் சேர்ந்த ஒரு சில குறிப்பிட்ட நாடுகளில் பெண்ணியத்தின் ஆரம்ப வளர்ச்சி பற்றியும், அரசியல் போராட்டங்களில் பெண்கள் இயக்கங்களின் பங்கேற்புப் பற்றியும் இந்த ஆய்வு விளக்குகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளான துருக்கி, எகிப்து, ஈரான் ஆகியவை ஏகாதிபத்திய வல்லரசுகளின் நேரடி ஆக்கிரமிப்பிற்கும் ஆதிக்கத்திற்கும் பாத்திரமாயிருந்தன அல்லது தம் உரிமை நலன்களைப் பேணிக்கொள்ளும் பொருட்டு ஏகாதிபத்திய வல்லரசுகளுடன் தொடர்பு கொண்டிருந்தன என்ற வகையில் அவை தம்மிடையே ஓர் பொதுப் பண்பைக் கொண்டிருந்தன. எனினும் பண்பாடு, கருத்தியல் கொள்கைகள் என்பனவற்றில் அவற்றிடையே வேறுபாடுகள் காணப்பட்டன. இத்தகைய வேறுபட்ட கருத்தியல் கொள்கைகள் அந்நாடுகளிலுள்ள - பெண்களின் நிலை, பெண்களின் பங்கு, பெண்கள் இயக்கங்களின் தனிச்சிறப்புப் பண்புகள், அணுகுமுறைகள் என்பவற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்தின. இதை நாடுகள் ரீதியாக இந்த நூல் விபரமாக எடுத்துக் காட்டுகின்றது.

பெண்ணியம், பெண்ணியலாளர் என்ற சொற்பதங்கள் மனக் கிளர்ச்சியையும், ஒருவித வெறுப்புணர்வையும் தூண்டுகின்றன. பெண்ணியம் என்பது ஓர் அண்மைக்காலக் கருத்தியல் அல்ல. அது 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளின் போது ஐரோப்பாவிலும் ஏனைய பகுதிகளிலும் வேரூன்றிய ஓர் வாதவிடயம் என்பதை அனேகர் கவனிக்கத் தவறியுள்ளனர். அது பெண்கள் மீதான அடக்குமுறைகள், பெண்கள் (குடும்பத்துள், வேலைத் தளத்துள், சமூகத்துள்) சுரண்டப்படுதல் போன்ற விடயங்கள் பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, அந்நிலையை மாற்றியமைப்பதற்கான உணர்வுபூர்வ செயல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதையும் பொருள் படுத்துகின்றது.

இது, சீர்கேடுற்ற மேற்கத்தேய முதலாளித்துவத்தின் விளைபொருள் எனவும், உள்நாட்டு பூர்ஷுவா (முதலாளித்துவப்) பெண்களின் கருத்தியல் கொள்கை எனவும், அது பண்பாடு, சமயம், குடும்பப் பொறுப்பு, தேசிய விடுதலை, சோஷலிஸம் என்பவற்றிலிருந்து பெண்களை அந்நியப்படுத்தித் திசை திருப்புகின்றது எனவும் மரபுவாதிகள், பழமை பேணும் அரசியல் வாதிகள், ஏன் ஒரு சில குறிப்பிட்ட இடதுசாரிகள் கூடச் சாடியுள்ளனர். மூன்றாம் உலகில் பெண்களின் விமோசனம் அல்லது பெண்களின் போராட்ட இயக்கங்கள் மேற்கத்தேய மாதிரிகளின் வெறும் பின்பற்றுதலே என்பது அவர்களின் கருத்தாகும்.

பெண்ணியமானது, மேற்கினால் மூன்றாம் உலகின் மேல் திணிக்கப்பட்ட ஒன்றல்ல என்பதையும், வரலாற்றுச் சூழ்நிலைகள் ஏற்படுத்திய கருப்பொருள், கருத்தியல் மாற்றங்கள் தான் பெண்களின் மீது தாக்கத்தை உருவாக்கியது என்பதையும் ஆராய்ந்து எடுத்துக் காட்டுவது அவசியம், என எனக்குத் தென்பட்டது. குறிப்பிடப்பட்ட நாடுகளில் ஏகாதிபத்தியத்தையும் மேலாதிக்கத் தையும் உதறித் தள்ளுவதற்கு முற்பட்ட முயற்சிகளாக - உள்நாட்டு சீர்திருத்தங்களைக் கொண்டு சமூகத்தை நவீனமயமாக்கல், உள்நாட்டு சீர்திருத்தங்களுக்கு தடங்கலாக விளங்கும் ஆளும் வம்சாவழி யினரையும் சமயமரபுக் கோட்பாடுகளையும் அழித்தொழித்தல், ஓர் தேசிய தனித்துவ அடையாளத்தை வலியுறுத்தி மக்களை அணிதிரட்டல் ஆகியவற்றின் பின்னணியில் இயங்கிய பெண்கள் விமோசன இயக்கங்கள் பற்றி இந்நூல் விபரமாக ஆய்வு செய்கின்றது.

மேற்கத்தேய மாதிரிகளைப் பின்பற்றுதல் மூலம், மேற்கத்தேய ஆக்கிரமிப்பை முறியடித்து, நாட்டைப் பலப்படுத்தி, தனித்துவப் பண்பாட்டு அடையாளத்தை நிலை நாட்டக் கையாண்ட யுக்தி, முரண்நகையானதொன்று எனக் கருதியாக வேண்டும். சர்வாதிகார ஆட்சிகளைக் கொண்ட துருக்கி, ஈரான் போன்ற நாடுகள், தேவைப்பட்ட நவீனமயமாக்கும் சீர்திருத்தங்களை தமது மக்கள் மீது திணித்தன. எனினும், எகிப்தில் சீர்திருத்தவாதம், தேசியவாதம் என்பன அக்காலகட்டத்தில் நிலவி வந்த வர்க்கக் கட்டமைப் புகள், முடியாட்சி அமைப்பு முறை என்பனவற்றின் வரையறைக்குள் வளர்ச்சியடைந்தன.





தேசியவாதம் ஓங்கி வளர்ந்ததும் உள்நாட்டு பூர்ஷுவாக்களின் போராட்டங்கள் உள்வாரி, வெளிவாரி என இரு முனைகளில் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது தேசிய, பண்பாட்டுத் தனித்துவத்திற்கான அடையாளங்களை வலியுறுத்தி, தேசபக்த அழைப்புகளை விடுக்க வேண்டியிருந்தது. கல்வி, விஞ்ஞானம், தொழில்நுட்பம், கைத்தொழில் என்பவற்றில் சீர்திருத்தங்களை ஊக்குவித்து, பிரதிநிதித்துவம் வாய்ந்த அரசாங்கம், சர்வஜன வாக்குரிமை, மனிதஉரிமை, தேசங்களின் உரிமை எனத் தாராளவாத கொள்கைக் குரல்கள் போராட்டங்களின் போது எழுப்பப்பட்டன. இதில் உள்நாட்டு பூர்ஷுவாக்கள் பொருள்முதல்வாதத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல், பொருளாதார பலத்தை அடைய முயன்றமை தென்படுகின்றது.

பண்பாட்டுத் தனித்துவ அடையாளத்தை உருவாக்குவதற்கும், அதை வலியுறுத்துவதற்கும் ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சியே ஓரளவு காரணமாக அமைந்ததெனக் கூறலாம். 18ஆம் நூற்றாண்டின் போது, கீழைத்தேயத்தின் பண்பாடு, கட்டமைப்பு என்பன பற்றித் தெரிந்து கொள்வதில் ஐரோப்பாவில் பெரும் ஆர்வம் ஏற்பட்டது. அதன் விளைவாகப் புதிய கண்டுபிடிப்பு களுக்கான பயணங்களும் தொல்பொருள், வரலாற்று ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. இதனால் ஐரோப்பியப் பண்பாடு, புலமைத்திறன், என்பவற்றின் கண்ணோட்டங்களூடாக, ஐரோப்பியரல்லாதோரின் பண்பாடுகளை ஆராயும் ஓர் புதுக் கருத்துப் படிவம் உருவாகியது. காலப் போக்கில் இக்கருத்துப் படிவம் பண்பாட்டு ஆதிக்கம் செலுத்தும் கருவியாகவும் மாறியது.

பண்பாடுகளுக்கிடையிலான பிணைப்புகள் இருவழிச் செயற்பாடுகளாய் இருந்தன. பண்டைய கிழக்கின் பண்பாடே, நாகரிகத்தின் தோற்றுவாய் என்பதுவும் கீழைத்தேய மொழியான சமஸ்கிருதத்திற்கும் ஐரோப்பிய மொழிகளுக்கும் தொடர்புண்டு என்பது போன்ற எண்ணக்கருத்துக்களும் 19ஆம் நூற்றாண்டு மேற்கத்தேய அரசியல் சிந்தனைகள் மீது ஆழ்ந்த செல்வாக்கைச் செலுத்தின. இதே மாதிரியாக, மேற்கத்தேய பண்பாட்டின் விழுமியங்களான இயற்கையான உரிமைகள், தாராளவாதம், பாராளுமன்ற ஜனநாயகம் என்பவை ஆசிய, ஆபிரிக்க நாடுகளைக் கவர்ந்தன.

தெளிவான அறிவூட்டலுக்குத் தடங்கலாக இருப்பவரை (obscurantism)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்த்துப் போராடி நடைமுறையிலிருக்கும் கட்டமைப்புகள், சமயப் பண்பாட்டு மரபுகள் போன்றவற்றைப் பகுத்தறிவிற்குப் பொருத்தமாக மாற்றியமைப்பதற்குத் தேசியவாதிகள் எடுத்த சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு, ஐரோப்பாவிலுள்ள கீழைத்தேய நாகரிகப்பற்றுடையோரின் செல்வாக்கும், பிரெஞ்சுப் புரட்சிச் சிந்தனையாளர்களின் கருத்துகளும் மக்களுக்கு பிரக்ஞையை ஏற்படுத்தத் துணைபுரிந்தன.

புனித மார்க்க விரிவுரை விளக்கங்களுக்கு, புதியதாய் பொருள் விளக்கம் காணுதலையும், சமயகுரு மரபைச் சார்ந்த கட்டமைப்புகளை சீர்திருத்தம் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு, சமயப்புத்தெழுச்சி இயக்கம் செயற் பட்டது. அந்தக் காலகட்டத்தில் மத்திய கிழக்கில் நிலவிய சூழ்நிலைகளில், அரசியல் பொருளாதார வளர்ச்சிக்கு, இஸ்லாம் ஒரு தடங்கலாகக் கருதப் பட்டது. எனவே, இஸ்லாத்திற்கு புதிதாகப் பொருள் விளக்கம் தேடி அதை சமூக முன்னேற்றத்திற்கு ஒத்திசைவாக்கும் ஓர் பகுத்தறிவு வாய்ந்த சமயமாக உணரச் செய்வது பற்றியும் பெருமளவில் எழுதப்பட்டுள்ளன.

தேசியவாதத்தின் வளர்ச்சியை நிறைவேற்றுவதற்கோ, பெண்களின் விமோசனம் குறித்த செயல்முறைகளைக் கொண்டு சமூக மேற்கட்டமைப்பு களை சீர்திருத்தவோ, சமய குருமரபைச் சார்ந்த அதிகாரத்துவம் துணை புரிந்ததாக இல்லை. எனவே அவர்களின் அதிகாரத்தைக் குறைப்பதற்கு பெருமளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தின் போது மதச்சார்பின்மை கொண்ட அரசியல் முறையொன்றை ஸ்தாபிப்பதற்கு இளம் துருக்கியர் மேற்கொண்ட முயற்சியை இங்கு விசேஷமாகக் குறிப்பிடலாம். இது அண்டைய இஸ்லாமிய நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

பிரக்ஞை ஒன்றை உருவாக்கி, கட்டமைப்புகளைத் திட்டமிட்டு, மேற்கத்தேய மேலாதிக்கத்திலிருந்து தப்பிக் கொள்வதற்கு மேற்கத்தேய மதச்சார்பின்மைச் சிந்தனைகள் ஒரு முக்கிய பங்கு வகிப்பதை இங்கு நாம் காண்கிறோம். பூர்ஷுவாக்கள் இந்த எண்ணக்கருத்தை உள்வாங்கி - ஓர் புதிய தேசியப் பிரக்ஞை, நவீனமாக்கம், மதச்சார்பின்மை கொண்ட அரசியற் கட்டமைப்புகள் ஆகியவற்றைப் படிப்படியாகக் கட்டியெழுப்ப அதைப் பிரயோகித்தனர். எனினும், இந்த உணர்ச்சி வேகம் குன்றி அதன் பின்னர், ஆணவப் பிடிவாதக் கருத்துரைகளும், மதங்களும் வியக்கத்தக்க வகையில் நீடித்து நிலைத்து நின்றன.

பிரக்ஞையை உருவாக்கிய மற்றுமொரு முக்கிய ஆக்கக் கூறு





கல்வியாகும். ஆரம்பத்தில் அது, சமூகப்படி முறையில் உயர்மட்டத்தை வகித்தோர், சமயப்பற்றுடையோர் என்பவரிடையே மட்டுப்படுத்தப் பட்டிருந்தது. வெகுஜனக் கல்வியென்பது காலனித்துவ ஆதிக்கங்களால் பின்னொரு காலத்தில் இந்நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட ஓர் பூர்ஷுவா உலகைச் சார்ந்த கருத்துப் படிவமாயிற்று. இதன் ஆரம்ப நோக்கம் மதமாற்றத்தை ஊக்குவிப்பதாகவும், நிர்வாகத் தொழிற்துறைக்கு உகந்தோரை உருவாக்குவதுமாகும். எனினும் பின்னர் இது வெகுஜனங்களிடையே எழுத்தறிவு பரவியதற்குக் காரணமாகி, செய்தித்தாள்கள், சஞ்சிகைகளின் விஸ்தரிப்பிற்கான அடித்தளத்தையும் இட்டது.

எழுத்தறிவு, செய்தித்தாள்கள் என்பன விரிவடைந்ததன் காரணமாக ஒரு நாட்டின் அரசியல் நிகழ்வுகள் பற்றி மற்றைய நாடுகளில் தெரிவிக்கப் பட்டதனால், அது தேசியவாதிகள் மீதும் புரட்சியாளர்கள் மீதும் ஓர் துரிதமான தாக்கத்தை ஏற்படுத்திற்று. 1908இல் இளம் துருக்கியரின் புரட்சி, 1922இல் முஸ்தாபா கெமாலினால், துருக்கிய அரசு பிரகடனப்படுத்தப்பட்டமை ஆகியன இவற்றுள் சிலவாகும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக 1917இன் ரஷ்யப் புரட்சியையே மேலோங்கிய செல்வாக்கைச் செலுத்திய நிகழ்வாகக் கருதலாம்.

குறிப்பிட்ட நாடுகளில் - ஏகாதிபத்தியவாதம், அந்நிய மேலாதிக்கத்திற்கு எதிரான பலவகையான இயக்கங்கள் என்பவற்றை ஒரு பக்கமாகவும், சுரண்டல் போக்குக் கொண்ட உள்நாட்டு ஆட்சியாளர்கள், மரபார்ந்த ஆணாதிக்க மேலாட்சி முறை, சமயக் கட்டமைப்புகள் ஆகியனவற்றை மறுபக்கமாகவும் நாம் காணலாம். இதன் பின்னணியில் எழுந்த பெண்ணியப் போராட்டங்களில் நாம் கவனம் செலுத்துதல் அவசியம். அந்தந்த நாட்டுக்குரிய ஆய்வுகளை நோக்குகையில் தேசிய எதிர்ப்பு இயக்கங்களை முழுமைப் படுத்துவதற்கு பெண்கள் விமோசனம் இன்றியமையாதது என்பதைக் கண்டு கொள்ளலாம். பெண்களின் பங்கேற்பு, பெண்களின் அந்தஸ்து போன்ற வாதவிடயங்கள் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியின் போது தோன்றிய போதிலும் ஏகாதிபத்தியவாதம், முதலாளித்துவம் என்பன பரவிய வரலாற்றுக் காலகட்டத்தின் போது இந்த விடயம் புதிய பரிமாணங்களைக் கொண்டிருந்தது. எனவே, பெண்கள் பழைய வினாக்களுக்குப் புதிய இயங்கியலின் தோற்றநிலைக்கு ஏற்ப பதில் தேட வேண்டியிருந்தது. சுருங்கக் கூறின் அது ஒரு ஜனநாயக உரிமை பற்றிய விடயமாய் மாறியது.

சமூகத்தில் பெண்களின் பங்கு மூன்று வகையாக எதிர்பார்க்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது - அந்நிய, உள்நாட்டு முதலாளித்துவவாதிகள், நிலஉரிமையாளர்கள் ஆகியோருக்கு மிக மலிவாகவும் எளிதாகவும் பெற்றுக் கொள்ளக் கூடிய தொழில் அணியினாரகவும், காலனித்துவ பொருளாதாரத்தை நிர்வகிக்கும் உள்நாட்டு அதிகாரிகள். உள்நாட்டுத் தொழில் வல்லுனர்களுக்கு நல்ல மனைவியராய் அல்லது தாய்மார்களாகவும், உள்நாட்டு பூர்ஷுவாக்களுக்குத் தமது நாடு, தமது நவீனத்துவம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையிலும் (மேலைத்தேயமயமாக்கப்பட்ட கல்வியறிவு பெற்றோராக) அவர்கள் விளங்க வேண்டி இருந்தது.

ஆசியாவில் முதலாளித்துவம் வளர்ச்சியுற்றதும், பெண் தொழிலாளர் அணியின் முக்கியத்துவம் மேலோங்கியது. எனவே அந்நாடுகளில் பெண்களின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தும் மரபுசார்ந்த வழக்கங்கள் அதன் வளர்ச்சிக்கு கெடுதல் விளைவிப்பதாகவே கருதப்பட்டது. எனவே கைத்தொழில் அதிபர்கள், தோட்டத்துரைமார்கள், விவசாயிகள் ஆகியோருக்கு, பெண்களின் மேலதிக தொழிற்சேவையை வழங்கும் பொருட்டு, பெண்களின் விமோசனம் சார்பான எதிர்பார்ப்புக்கள் மேலும் அதிகரித்தன.

முடிக்குரிய பேரரசின் நிர்வாகத் தேவைகள், அந்நிய முதலீட்டுக்கு ஏற்ப புதுஉருவம் கொண்ட பொருளாதார அமைப்பின் தேவைகள், முதலாளித்துவத்தின் விஸ்தரிப்பு என்பவற்றை நிறைவேற்றுவதற்கென உள்நாட்டு நிர்வாகிகள், தொழில் சார் நிபுணர்கள் அடங்கிய ஒரு பூர்ஷுவா வர்க்கம் வெளிப்பட்டது. இவர்கள் பெண்ணியம் பற்றிய வாதவிடயங்களை ஐரோப்பிய அளவுகோல் கொண்டு நோக்கினர். எகிப்து, ஈரான், துருக்கி என்ற நாடுகளில் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் கொடூரமான துஷ்பிரயோகங்களான முகத்திரை அணிதல், பலதாரமணம், வைப்பாட்டி முறை, பெண்கள் ஒதுக்கப்பட்டுத் தனிமைப்படுத்தப்படல் என்பவற்றிலிருந்து பெண்கள் விடுவிக்கப்பட வேண்டியது பற்றி அவர்கள் எடுத்துக் காட்டினர். இப்பேர்ப்பட்ட சமூகத் தீங்குகள், தம் பூர்ஷுவா வாழ்க்கை முறையின் திடநிலைக்கு அச்சுறுத்தலாகலாம் என்பதை உணர்ந்து அவர்கள் சமூகக் கட்டமைப்புகளை பலப்படுத்துவதற்கான சீர்திருத்தங்கள் பற்றி பிரசாரம் மேற்கொண்டனரே தவிர, அவற்றை மாற்றியமைக்க முனையவில்லை. எனவே அநேக சீர்திருத்த இயக்கங்களில் ஓர் பழமை பேணும் பக்கச் சார்பு உள்ளார்ந்து இருப்பதைக் காணலாம்.

முதலாளித்துவ விஸ்தரிப்புக் காரணமாக உருவாகிய சக்திகளின்





சமநிலைத்தன்மையைப் பொறுத்து, இந்த நாடுகளில் எதிர்ப்பு இயக்கங்கள், அதிலடங்கியுள்ள பெண்ணியப் போராட்டங்கள் என்பவற்றின் இயல்புகள், வேறுபட்டிருந்தன. அநேக நாடுகளில் உள்நாட்டு பூர்ஷுவாக்களே அவ்வியக்கங்களில் பிரதான பங்கை வகித்தனர். இதிலும் இரண்டு வகையினர் காணப்பட்டனர். ஒரு வகையினர் எதிர்ப்புப் போராட்டங்கள் சார்பாக மக்களை அணிதிரட்ட வேண்டியிருந்தவர்கள், மற்றைய வகையினர், படிப்படியான சீர்திருத்தங்கள் மேற்கொண்டு ஆட்சியாளர்களின் இடத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தவர்கள். இந்த எதிர்ப்பு இயக்கங்களுடன் இணைந்திருந்த பெண்களின் போராட்டங்கள் ஓர் குறிப்பிட்ட தலைப்புகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கும் அப்பால் செயற்படவில்லை. இவர்கள் தேர்ந்தெடுத்த தலைப்புகள், பெருமளவிலான பெண்களின் அன்றாட வாழ்க்கை முறையில் சிறிதளவேனும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்திருக்கவில்லை.

சில நாடுகளில் உள்நாட்டு பூர்ஷுவாக்கள் பேரரசு ஆட்சிக்காலத்து அதிகாரிகளின் இடங்களை ஏற்றுக் கொள்வதில் மட்டும் நின்று விடாது சோஷலிச சமூகத்தை ஸ்தாபிப்பதற்கான அடிப்படை நிலைமாற்றத்தை மேற்கொள்ளுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தனர். இந்த இயக்கங்களின் பெண்ணியம் சார்ந்த பகுதி, ஓர் புரட்சிகர சக்தியாகி, அதன் உடன் நிகழ்வான சமுதாய நிலை மாற்றம், பெண்கள் அந்தஸ்தை மேம்படுத்துதல் போன்றவற்றிற்கும் துணைபுரிந்தது. பெண்ணியமென்பது வெறும் பொழுது போக்கோ அல்லது பூர்ஷுவாக்களின் மனமாறாட்டமோ அல்ல என்பதையும், மாறாக போராட்டத்தின் சகல கட்டங்களும் தொடர்ச்சியான உறுதியான செயல்முறையாக அமைந்திருந்தன என்பதற்கு இப்பேர்ப்பட்ட நிகழ்வுகள் சான்று பகர்கின்றன.

பெண்களின் இயக்கங்கள் ஒரு வெற்றிடத்தில் செயற்படாது பரந்த சமூக இயக்கங்களின் ஒரு பகுதியாகவும், அதனுடன் ஒத்திசைந்து அதன் இயங்கியலுக்கு உட்பட்டதாகவும் அமைகின்றன. சமூகத்தின் பொதுவான பிரக்ஞைநிலை, அதன் எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்பு, அதன் கட்டமைப்பு, அதில் ஆண், பெண்களின் பங்களிப்பு என்பன அவ்வியக்கங்களைக் கட்டுப்பாடு செய்கின்றன. எனினும் தம் நோக்குகளை அடையும் பொருட்டு அக்கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து செயற்பட்ட துணிச்சல்மிகு பெண்கள் பற்றி இவ்வாய்வில் பெயரிட்டுக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் பற்றிய பொது அறிவு குறைவாக இருந்த காரணத்தால் அவர்கள் தோற்றுப் போனவர்களானார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து சமயக் கருத்தியல்களிலும் இஸ்லாமிய மதமே ஐரோப்பாவுடன் நீண்ட காலத் தொடர்பைக் கொண்டிருந்தது. இஸ்லாம், அதன் ஆரம்ப காலம் தொட்டு கிறிஸ்தவத்துடன் தொடர்ச்சியாக மோதிய போதிலும், ஐரோப்பாவில் நிலவிய மதச்சார்பின்மைக் கொள்கையே அதற்கு உண்மையான சவாலாக விளங்கியது. ஐரோப்பாவில் பெண்கள், சமயக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களாகவும் சமூகத்தில் மதிக்கப் பட்டவர்களாகவும் நடாத்தப்படும் விதம், அங்கு நிலவும் ஒருதார மணம், மற்றும் அங்கு குடும்பம் தான் சமூகத்தின் அடிப்படை அலகு என்ற உண்மைநிலை ஆகியவை, ஐரோப்பாவில் பயணம் மேற்கொண்ட இஸ்லாமியர்களிடையே, மதச்சார்பற்ற சமூகம் பற்றிய புது எண்ணக் கருத்தையும் ஆர்வத்தையும் ஊட்டியது.

இக் காலகட்டத்தின் போது தம் நாட்டில் இஸ்லாமிய உயர் குழாத்தினர் கூடத் தம் பெண்களைத் தனிமைப்படுத்தி வைத்திருக்கும் வேளையில், ஐரோப்பாவில் சமூகக் கூட்டுறவு முயற்சிகளில் ஆண்களும் பெண்களும் இலகுவாக ஈடுபடுவதற்கு இடமளிக்கும் ஐரோப்பியரின் திறந்த மனப் பான்மையானது அப் பயணிகளை மிகவும் கவர்ந்தது. அதைத் தொடர்ந்து மேற்கத்தேய சமூகத்தில் வெளிப்படையாகக் காணப்படும் பெண்கள் சார்பான உரிமைகள் தான் அந்நாடுகளின் முன்னேற்றத்திற்கான திறவுகோலெனும் கருத்தும், "கீழைத்தேயத் தன்மைக்கு" பெண்களின் தாழ்த்தப்பட்ட அந்தஸ்தே ஓரளவு காரணம் என்ற விடயமும் ஆவலுடன் அவர்களால் வாதத்திற்கு உட்படுத்தப்பட்டன.

பெண்களின் அந்தஸ்து என்பதை ஓர் அளவுகோலாகக் கொண்டு நாகரிகத்தை மதிப்பீடு செய்யும் முறை பரவலாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தமையால் அநேக சீர்திருத்தவாதிகள் அப்பெண்களின் நிலைமையை மேம்படுத்தக்கூடிய சட்டவாக்கவியல் மீது கவனம் செலுத்தினர். துருக்கியானது வருங்காலத்தில் தேசியவாதம், தேசப்பற்று, உழைப்பு, உறுதியான குடும்ப அமைப்பு என்பவற்றுடன் ஜனநாயகம், பெண்ணியம் என்பதையும் அடித்தளமாகக் கொண்ட ஓர் ஒழுக்கவியல் கோவையை நிர்ணயித்தல் வேண்டும் என்பது அந்நாட்டின் சமகாலத்து ஆண்சீர்திருத்தவாதிகளின் அபிப்பிராயமாகும். நவீனத்துவம், அபிவிருத்தி, நாகரிகம் என்பவற்றிற்கான அடையாளமாகப் பெண்களுக்கு மதச்சார்பற்ற கல்வி, நடமாடும் சுதந்திரம், ஒருதார மணம் அவசியமென்பதை அவர்கள் அரசியல் மேடைகளில் எடுத்துரைத்தனர். அவர்களது மனைவியர், புதல்வியர்களை அக்கருத்துக்களைப் பின்பற்றச் செய்வதன் மூலம் அக்கருத்துக்களுக்கு புறவடிவத்தைக் கொடுக்க அவர்கள் கடும் முயற்சி மேற்கொண்டனர்.





ஓர் "தெளிந்த அறிவூட்டப்பட்ட பெண்" அவசியம் என்பதை இந்தப் புதிய பிரக்ஞைநிலை உணர்த்தியது. இந்தப் புதுமைப்பெண் மேற்கத்தேய கல்விமுறையில் கற்பிக்கப்பட்டவளாய் அல்லது மறைபரப்புவோரின் செல்வாக்கிற்கு உட்படுத்தப்பட்டவளாய், புதுவகையான பூர்ஷுவா ஆணுக்கு இசைவுபடக் கூடிய வகையில் புதியபாணிகளில் உடையணிந்தவளாய் இருப்பினுங்கூட, இல்லத்தில் பிரதான பங்கைப் பொறுப்பேற்று நடத்தக் கூடியவளாயும், தான் பழைய சமூகத்தின் பிற்போக்குச் சிந்தனைகளுக்கு முரணானவள் என்பதையும் நிரூபித்துக்காட்ட வேண்டியிருந்தது. புதுமைப் பெண் என்ற சொற்பதம் வெவ்வேறு பிராந்தியங்களில் ஒரேமாதிரியாக பயன்படுத்தப்பட்ட போதிலும் அதன் எண்ணக்கரு பிராந்தியத்திற்குப் பிராந்தியம் வேறுபட்டிருந்தது. இஸ்லாமிய நாடுகளில் அது, பெண்ணின் பிற்போக்கான தன்மையையும் தனிமைப்படுத்தும் இயல்பையும் அடையாளப்படுத்தும் முகத்திரை அணிதலை, அகற்றும் நடிவடிக்கைகளை சிறப்புக்குரிய நிகழ்வாகக் குறித்தது.

மற்றைய ஆசிய கலாசாரங்களில் பெண்களின் நடத்தை, நடையுடை பாவனை என்பன பற்றி மரபுபேணுவோர் கொண்டிருந்த கருத்திற்குச் சவால் விடுக்கும் விதத்தில் பெண்கள் ஆண்மையைப் பிரதிபலிக்கும் உடை அணிந்து அழகின் சின்னமான தலைமுடியை நவீனபாணியில் குட்டையாக வெட்டிக் கொண்டனர். எனினும் பழைய மரபுகளை உதறித் தள்ளிய பெண்கள், ஈரானில் இடம்பெற்ற எதிர்ப்புரட்சியின் போது, உடல்சார் வன்முறைகளுக்கு ஆளாக்கப்பட்டமை குறிப்பிடக் கூடியதொன்றாகும்.

ஆனால், இதுதான் முழுமையான தோற்றப்பாடு என்பதல்ல. ஓர் தனித்துவ தேசிய அடையாளத்தைத் தேடிக் காணும் பொருட்டு பூர்ஷுவாக்கள் புதிதான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த போதிலும் தேசியப் பண்பாடு என்ற விடயத்தைப் பொறுத்தமட்டில் அவர்களின் பார்வை பின்நோக்கியே இருந்தது. பழமை வாய்ந்த பண்பாட்டிற்கு முற்றுமுழுதாக முரண்படும் வகையில் புதுமைப் பெண் என்பவள் இருக்க முடியாதென்றும், பெண்களுக்கெதிரான வெளிப்படையான அநீதிகள், வழக்கங்கள் என்பன இல்லாதொழிக்கப்பட வேண்டிய அதேவேளை, அவர்கள் தேசியப்பண்பாடு, தொன்றுதொட்ட சமயம், குடும்ப மரபுகள் என்பவற்றைப் பேணும் காப்பாளர்களாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. வேறுவகையில் கூறப்போனால், அவர்கள் நவீனமானவர்களாகவும் மரபுமுறை பேணுபவர்களாகவும் முரண்பட்ட இருவகைப் பங்கை வகிக்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டுமென்ற எதிர்பார்ப்பு இருந்தது.

நிலையான ஒருதார மணம் கொண்ட குடும்ப அமைப்பு முறையை மையக்கருவாக உருவாக்கி, அதில் முதலாளித்துவ வளர்ச்சி, பூர்ஷுவா கருத்துப்போக்கு என்பவற்றிற்கு ஒத்திசைவான கல்வியறிவு ஊட்டப்பட்ட, தொழிலாற்றலுடைய பெண்களை உள்ளடக்கிக் கொள்வதை முதல் நோக்கமாக சீர்திருத்தவாதிகள் கொண்டிருந்தனர். இரண்டாவதாக, அப் பெண்கள் குடும்பத்துக்குரிய மரபு வழக்கங்களுக்கு கீழ்ப்படியும் நிலையைப் பேணிக் கொள்வதையும் அவர்கள் ஆர்வமாக உறுதிப்படுத்தினர். ஐரோப்பாவில் முதலாளித்துவத்திற்கு முற்பட்ட காலத்தில் உற்பத்தித் துறையின் மையமாக விளங்கிய இல்லம், குடும்பம் என்பவை கைத்தொழில் புரட்சியின் போது பெருவளர்ச்சி கண்ட தொழிற்சாலை அமைப்பு முறைகளால் சீர்குலைக்கப்பட்டதன் எதிரொலியை இங்கு நாம் காண்கிறோம். முதலாளித்துவம் வறிய பெண்களை ஊதியம் உழைப்பவர்களாக இல்லங்களிலிருந்து தொழிற்சாலைகளுக்கு இடம்பெயர்த்தெடுத்த அதேவேளை, பூர்ஷுவாப் பெண்கள் இல்லங்களில் தத்தமது குடும்பங்களைப் பராமரிக்கும் செயல்களில் ஈடுபட்டிருந்தமை பற்றி பூர்ஷுவா ஊடகங்களினால் போற்றப்பட்டனர்.

இதன்பின்னர், கல்வி ஓர் முக்கிய பிரச்சினையாகியது. பொதுவாகப் பெண்களுக்கு முறைசார்ந்த கல்விக்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு விதிவிலக்காக மேட்டுக்குடிச் செல்வந்தர்கள், பெருஞ் செல்வந்த வணிகர்கள் என்ற வர்க்கங்களைச் சேர்ந்த அநேக பெண்கள் அறிவுசார் வட்டாரங்களில் தம்மை உறுதியாக நிலை நாட்டினர். உள்நாட்டு பூர்ஷுவாக்களின் வளர்ச்சி, தேசியவாதத்தின் எழுச்சி என்பவை காரணமாக பெண் விமோசனம், பெண்களுக்கான கல்வி என்ற வாதவிடயங்கள் திறனறிவாளர்களுக்கும் தேசியத் தலைவர்களுட்பட பூர்ஷுவாக்களின் பெண்களுக்கும் முதன்மையாகியது. ஆண்சீர்திருத்தவாதிகளின் நோக்கங்கள் பலவகைப்பட்டவையாய் இருந்த போதிலும் பெண்கல்வியைப் பொறுத்த அளவில் அவர்கள் ஒருமித்த கருத்தைக் கொண்டிருந்தனர். கல்விக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டதன் காரணமாக பெண்கள் தொழில், வருமானம், சமூக அங்கீகாரம் அற்றவர்களாக இருப்பதுடன் அவர்கள் அறிவுத்துறையில் ஆண்களுக்குக் கீழ்ப்படுத்தப்பட்ட நிலையையும் கொண்டிருந்தனர் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவர்கள் கருதினர்.

"பெண்" என்ற புது எண்ணக்கருத்தில் தெளிவின்மை உள்ளார்ந்து கிடந்ததன் காரணமாக பெண்களுக்கான கல்வியின் பொருளடக்கம், அதன் பண்பு என்பனவும் தெளிவற்றிருந்தது. மதமாற்றம் பெற்ற ஆண்கள் தாம் முன்னர் பின்பற்றிய சமய நம்பிக்கையை நோக்கி பின்நடை போடுவதைத் தடுக்குமுகமாக சமய அக்கறை கொண்ட மனைவிமார்களையும் தாய்மார்களையும் உருவாக்குவதையே மறைபரப்புவோர் பெண்கல்வியின் முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்தனர். தேசியவாதிகளும் சீர்திருத்த வாதிகளும் - சகலருக்கும் பால்சார்பற்ற கல்வி வாய்ப்புகள், அதை எட்டுவதற்கான ஜனநாயக உரிமைகள் என்பன பற்றி ஊன்றியுரைத்தனர்.

சமஅடிப்படையிலான உயர்கல்வி சார்பாக ஐரோப்பியப் பெண்கள் கோரிக்கை விடுத்தது போன்றே, ஆசியாவைச் சேர்ந்த பூர்ஷுவாப் பெண்களும் வருமானத்துடன் இணைந்த புதிய வாய்ப்புகள், கூடிய சுதந்திரம் என்பவற்றிற்கு தமக்கு வழிதிறந்து விடும்படி கோரினர். ஐரோப்பாவின் அறிவொளியூட்டுபவர்களால் முதன்மை வாய்ந்ததாகக் கருதப்படும் ஜனநாயக உரிமைகளானது, சகலருக்கும் உரியதென் ஆசியநாடுகளில் வெளி வேஷமாகக் காட்டப்பட்ட போதிலும், அது தொழிலாளர்கள், காலனிய மக்கள், பெண்கள் ஆகியோரை விலக்கி பூர்ஷுவா ஆண்களுக்கென்றே திட்டமிடப் பட்டிருந்தது (Mies and Jayawardena 1981:5). அதேமாதிரியாக, சொந்த நாட்டில் பிறந்து வளர்ந்த பூர்ஷுவாக்கள், தம் சொந்த வர்க்கத்தைச் சேர்ந்த பெண்களுக்கு சில சலுகைகளை வழங்க இணங்கிய போதிலும், தம்சொந்த நாட்டின் மற்றைய பெண்கள், பெருந்திரளான தொழிலாளர் அணியினர், ஆகியோருக்குரிய இயற்கையான உரிமைகள், சுதந்திரம், சமத்துவம், சுயநிர்ணயம் என்பவை அடங்கிய எண்ணகருவை பயன்படுத்திக் கொள்ளும் நோக்கம் அவர்களுக்கு இருக்கவில்லை.

எல்லோருக்கும் எல்லாச் சூழ்நிலைக்கும் பொருந்தும் எனக் கூறப்படும் சுலோகங்களை புதுமுயற்சியாக விடுப்பதைத் தவிர்த்து, அடக்கப்பட்ட குழுவினர்கள் தாமாகவே தம் சார்பான வாதவிடயங்களின் மேல் கவனத்தை ஈடுபடுத்தி, மக்களை அணிதிரட்டுவதென்பது நடைமுறையில் சாத்தியமான தொன்றாகும். உதாரணமாக, தாம் கல்விகற்ற நிலையை அடைந்திருந்த போதிலும் தம்மைக் கீழ்மைப்படுத்தி வைத்திருக்கும் சமூக வழக்கங்கள், கட்டுப்பாட்டு விதிகள் கொண்ட சட்ட, பொருளாதார, அரசியல் செயல் முறைகள் என்பவற்றிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதில் பெண்கள்

ஆர்வம் காட்டி வந்தனர். சில தீவிர போக்குக் கொண்ட பெண்கள் அரசியல், சமூக நிலை மாற்றத்திற்கான யோசனைகள் சார்பாகவும் வாதாடினர்.

கல்வி, எழுத்தறிவு என்பவை பரவிய காலத்தைத் தொடர்ந்து பெண்ணியம் சார்பான நூல்கள், சஞ்சிகைகள், இதழ்கள் என்பன பெண்கள் இயக்கத்தில் ஓர் முக்கிய பங்கை வகித்தன. இவற்றுள் அநேக பிரசுரங்களில் "பெண்கள் பற்றிய" வழமையான தலைப்புகள் கலந்துரையாடப்பட்ட போதிலும், பெண்களைக் கீழ்மைப்படுத்தல் என்ற விடயத்தை வாதத்திற்கு எடுத்துக் கொள்ள இப்பிரசுரங்கள் தவறியதில்லை. மற்றைய நாடுகளில் இடம்பெறும் பெண்விமோசனம், வாக்குரிமை பற்றிய நிகழ்வுகளும் இவ்விதழ்கள் மூலம் தெரிவிக்கப்பட்டன. 1914 இல் எகிப்தில், பெண்கள் சார்பான 15 இதழ்கள் அரபுமொழியில் பிரசுரிக்கப்பட்டன.

பெண்களுக்கான சஞ்சிகைகளும் எழுத்தாக்கங்களும் பெண்கள் என்ற பிரக்ஞைநிலையை விழிப்படையச் செய்தது. ஆண் நாவலாசிரியர்கள், அறிஞர்கள், செய்தியாளர்களும் கூட பெண்கள் தொடர்பான வாதவிடயங்கள் பற்றி எழுதினர். அநேக நாடுகளில் மரபுமுறைக்கு அடிமைப்பட்ட சமூகங்களில் பெண்களின் பங்குபற்றி முதன்முறையாக அக்கறை வெளிப்படுத்திய ஆண்களின் எழுத்தாக்கங்கள் பிரபல்யமடைந்தது மட்டுமன்றி சில வேளைகளில் வசைப் பெயரையும் வாங்கிக் கொண்டது. தாராள கருத்துப் போக்கைக் கொண்ட காசீம் அமீனுடைய நூல்கள் பெண்ணியத்தின் வித்து என அராபிய உலகில் கருதப்பட்டதன் காரணமாக அது பழமைபேணுவோர், சமய அடிப்படைவாதிகள் என்போரின் விரோதத்தை இன்னமும் சம்பாதித்து வருகின்றது. எனினும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மூன்றாம் உலக நாடுகளில் பெண் எழுத்தாளர்கள், கவிஞர்கள் எனப் புதிய தலைமுறை ஒன்று தோன்றியதை விஷேடமாகக் குறிப்பிடலாம். அவர்கள் 19ஆம் நூற்றாண்டின் கல்விச் சீர்திருத்தங்களின் விளைவாக உருவாகியவர்களாதலால் அக்காலத்துக்குரிய பெண்ணியத்தின் நிலையை பிரதிபலிப்பதாக அவர்களின் எழுத்தாக்கங்கள் இருந்தன.

பெண்களின் கல்வி என்ற விடயம் வாக்குரிமை சார்பான போராட்டத்திற்கு ஓர் தூண்டுசக்தியாக உதவியது. இது ஜனநாயக உரிமைக்கான இயக்கத்திற்கு ஓர் முக்கிய வாதவிடயமாயிற்று. மூன்றாம் உலகைச் சேர்ந்த அநேக நாடுகளில், விசேஷமாக தேசியப் போராட்டங்களின் உச்சக்கட்டத்தின் போது சுயநிர்ணய உரிமை, சமத்துவம் என்ற வாத விடயங்கள் வாதத்திற்கு உட்படுத்தப்பட்ட வேளைகளில் பெண்களுக்கு வாக்குரிமை என்ற





கேள்வியும் எழுப்பப்பட்டது. இதன் சார்பாக அமைதியான போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் சில சந்தர்ப்பங்களில் இது வன்முறை சார்ந்ததாகவும் அமைந்தது. பெண்கள், ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு பண்ணித் தேசியப்பேரவையை முற்றுகையிட்டமையும் எகிப்தில் 1924இல் இடம் பெற்றிருந்தது.

ஐரோப்பிய பெண்ணியவாதிகள் தமது நாட்டுக்குள்ளேயும் வெளியேயும் பரவலாகப் பயணங்களை மேற்கொண்டனர் (Mies and Jayawardena 1981: 17 and 61). அது போலவே மூன்றாம் உலகைச் சேர்ந்த முன்னோடிப் பெண்ணியவாதிகளும் பயணம் மேற்கொள்ளுவதற்கு தம்மீது விதிக்கப் பட்டிருந்த கட்டுப்பாடுகளை மீறி, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பரவலாகப் பயணங்கள் மேற்கொண்டு, பெண்கள் சங்கங்கள், அரசியற் குழுவினர் என்போருடன் தொடர்பு கொள்ளுவதன் பொருட்டு போதியளவு வளங்களையும் வாய்ப்புகளையும் திரட்டிக் கொள்ளக் கூடியதாயிற்று. 1920 ஜுலையில் மொஸ்கோவில் நடந்த சர்வதேச கம்யூனிஸ்ட் கூட்டமைப்பு (Comintern) அமர்வின் போது, பெண்களிடையே எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த இயக்கத்தில் லெனினின் மனைவி க்ருப்ஸ்காயா உட்பட, பல முக்கிய கம்யூனிஸ்ட் பெண்களும் சில ஆசியப் பெண்களும் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

தேசியவாதப் போராட்டங்களில் முக்கிய பங்கு வகித்த அரசியல் குழுவினருடன் இணைந்து சுயாதீனப் பெண்கள் அமைப்புகள், சங்கங்கள் உருவாகியமை, அந்தக் காலகட்டங்களின் போது ஆசியப் பெண்ணிய வாதத்தின் மிக முக்கிய வெளிப்படுத்தல் எனலாம். துருக்கியில் பெண்களுக்கான முதற் கழகம் சிவப்பும் வெள்ளையும் (1928) என்ற பெயரில் இளம்துருக்கியர் இயக்கத்தின் அரசியல் செயற்பாடுகளுடன் இணைந்திருந்தது. 1911இல் அரசியல் கிளர்ச்சி உச்சக்கட்டத்தை அடைந்த வேளையில் பாரசீகப் பெண்கள் சங்கம் உருவாகியது.

எல்லா நாடுகளிலும் இடம் பெற்ற தேசிய வாத புரட்சிகர கிளர்ச்சிகளின் ஆரம்பத்தின் போது, சகல வர்க்கத்தினையும் சேர்ந்த பெண்கள், தேசியமட்டத்தில் அக்கறைக்குரிய வாதவிடயங்கள் சார்பாக போராட்டம் செய்யும் பொருட்டு வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்கள் செய்தனர். அக் காலகட்டத்தின் போது, மூன்றாம் உலக நாடுகளில் பல முன்னோடிப் பெண்கள் உருவாகினர். ஹுதா ஷராவி (எகிப்து), ஹாலிட் எடிப் (துருக்கி), அத்திக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தௌலதாபாடி, ஹனூம் அஸ்மேதே (ஈரான்) ஆகியோர் அவர்களுள் சிலராவர். அவர்களின் துணிச்சலான ஈடுபாடுகள், தகுந்த விதத்தில் அங்கீகரிக்கப்படவில்லை. வரலாற்றின் அடிக்குறிப்புகளுக்குள் மட்டுமே அவர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அநேக சந்தர்ப்பங்களில் அவர்களின் சாதனை பற்றி சொந்த நாடுகளிலேயே அறிந்திராதவர்கள் இருந்தார்கள். ஆண் தலைவர்களுடன் சேர்த்து அவர்களின் பெயர்கள் நினைவுகூரப்படுவது மிக அபூர்வமே.

ஆசியாவில் முதலாளித்துவம் வளர்ச்சி கண்டதன் விளைவாகத் தொழிலாளர் அணியில் பெண்கள் பங்கேற்பதற்கு அதிகரித்த வாய்ப்புகள் ஏற்பட்டன. பொருளாதாரத்தின் பெரும்பான்மைப் பகுதியில் அத்தகைய பங்கேற்பை ஏற்றுக் கொள்ளும் வகையில், பெண்கள் விமோசனம் சார்பான போராட்டங்களின் அங்கங்கள் இணைந்து இயங்கின. தொழிலாளர் அணியில் ஊதியம் பெறும் பெண்கள் இருந்ததன் காரணமாக, தொழிற் சங்கங்களிலும் மற்றைய தொழிலாளர் சங்கங்களிலும் அவர்கள் இணைந்து வேலை நிறுத்தங்கள், கைத்தொழிற்துறை சர்ச்சைகள் என்பவற்றில் ஈடுபடுவதற்கு வாய்ப்புகள் உண்டானது. ஈரான், எகிப்து, துருக்கி ஆகிய நாடுகளில் மக்களைப் போராட்டத்திற்குத் திரட்டுவதற்கு எதிராக அடக்குமுறைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பெண்கள் ஆண்களுடன் இணைந்து இடதுசாரி அரசியற் குழுக்கள், தொழிற் சங்கங்கள் என்பனவற்றை நிறுவினர்.

இறுதியாக, விமோசனம் சார்பான பெண்ணிய இயக்கங்களில், பெண்களின் பங்கேற்பும் அதன் உடன் நிகழ்வான தேசிய விடுதலை, சமூக நிலைமாற்றங்களுக்கான போராட்டங்கள் என்பவற்றைத் தொலைநோக்காகக் கொண்டு ஆசிய வரலாற்றின் ஓர் காலகட்டத்தை ஒப்பிட்டுக் காண இவ்வாய்வு முயற்சிக்கின்றது. "பெண்கள் உரிமைகள்" சார்பாக ஆதரவு வழங்கிய ஆண்சீர்திருத்தவாதிகள், அரசியற் தலைவர்கள் என்போரின் பங்கேற்பு, நோக்குகள் என்பவற்றை மதிப்பீடு செய்தலும் இதில் அடங்கியுள்ளது. தவிர்க்க முடியாக் காரணங்களுக்காக வரலாற்று ஆதாரங்கள் கிடைக்கப்பெற்ற நாடுகள் மாத்திரமே இந்த ஆய்வுக்குள் எடுக்கப்பட்டுள்ளது. அதனால் ஆய்வின் எல்லை மட்டுப்படுத்தப்பட்டதாகத் தென்படலாம். ஆசியாவில், வறுமையால் பீடிக்கப்பட்ட பெருந்திரளான பெண்கள், பலவகையான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டது பற்றி விரிவான வரலாற்று ஆய்வு ஒன்று இன்னும் முயற்சிக்கப்படவில்லை என்பதையும் நான் இங்கு வற்புறுத்திக் கூறவேண்டும். ஆசியாவின் பூர்ஷுவாக்கள், குட்டி பூர்ஷுவாக்கள் என்ற வர்க்கத்தைச் சார்ந்த பெண்கள் ஈடுபட்ட இயக்கங்கள் பற்றிய வரலாற்றா





தாரங்கள் கிடைக்கக் கூடியதாய் இருப்பினுங்கூட, உழைக்கும் வர்க்கத்தினர், விவசாயக் குடிமக்கள் என்போர் வர்க்கப் போராட்டங்களிலும் ஏகாதிபத்தியவாத எதிர்ப்புப் போராட்டங்களிலும் ஈடுபட்டமை பற்றி நுண்ணிய ஆய்வு மேற்கொண்டு, விரிவான தகவல்களை வெளிப்படுத்துவது அவசியமாகும்.

ஆசியாவில் காலனித்துவமும் முதலாளித்துவமும் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு முற்பட்ட காலத்தில் இருந்த சமூகங்களில் பெண்களின் பங்கு என்ற விடயத்தில் ஆய்வுகள் பற்றாக்குறையாக இருப்பதைக் காணலாம்.

பெண்கள் மீது கருத்தியல் கொள்கைகள் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றி சில ஆய்வுகள் வாதிக்கின்றன. இந்த ஆய்வுகளிலிருந்து பொருள் பிரித்தெடுக்கப்பட்டு முடிவுகள் எட்ட வேண்டியிருக்கும். நடைமுறை வாழ்க்கையில் கருத்தியல் கொள்கைகள் எந்த மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, அது எந்த மட்டத்தில் செயல்விளைவை ஏற்படுத்தும் என்ற விடயங்கள் பற்றி நமக்கு அறிவு போதாதிருக்கின்றது.

ஆசியாவின் அநேக நாடுகளில் பெண்கள் இயக்கங்கள், ஆண்களுக்குச் சமமாக அரசியல் சமத்துவம், நீதித்துறை, சட்டமன்ற நடவடிக்கைகளில் சமத்துவம் என்பவற்றை எட்டிய போதிலும், அது ஆணாதிக்கம் வாய்ந்த குடும்ப சமூகக் கட்டமைப்புக்குள் பெண்களைக் கீழ்மைப்படுத்தல் என்ற விடயம் மீது கவனம் செலுத்தத் தவறியுள்ளது. ஒருசில குறிப்பிட்ட விதி விலக்குகளைத் தவிர. பெண்ணியம் பற்றிய பிரக்ஞைநிலை, மரபுசார்ந்த ஆணாதிக்கக் கட்டமைப்புகளுக்கு சவால்விடும் அளவிற்கு வளர்ச்சி அடைந்திருக்கவில்லை. துருக்கி, எகிப்து, ஈரான் ஆகிய நாடுகளில் இடம் பெற்ற சூழ்நிலைகளையும், அவற்றில் பெண்களின் பங்களிப்புகள் செயற்பாடுகள் பற்றியும், அதன் வெற்றி தோல்விகள் பற்றியும் இனிவரும் கட்டுரைகளில் விரிவாக ஆராயப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2.துருக்கியில் 'நாகரிகத்தின்' மூலம் பெண்கள் விடுதலை

ஆண் ஒருவர் அருகில் வரும் போது பெண்கள் தமது பர்தாவினால் முகங்களை மூடிக் கொள்வதையோ, தமது முதுகைக் காட்டுவதையோ நான் பார்க்கிறேன். நாகரிகமடைந்த இனத்தின் அன்னையரும் புதல்விகளும் இவ்வாறு நூதனமாய் நடந்து கொள்வார்கள் என்றோ, இவ்வளவு பின்தங்கியவர்களாக இருப்பார்கள் என்றோ நீங்கள் உண்மையாகவே நினைக்கிறீர்களா?
*முஸ்தபா கெமால்* (Minai 1981 : 64 - 5)

துருக்கியில் பெண் விடுதலைக்கான இயக்கமானது, அடுத்தடுத்து அலைகளாக எழுந்த நவீனமயமாக்கல், மதச்சார்பற்றதாக்குதல் ஆகிய கொள்கைகளோடு, மேற்கு மயமாக்கற் சித்தாந்தம் மற்றும் சமூகச் சீர்திருத்தத்துடனும் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்திருந்தது. நாட்டின் அரசியல் சித்தாந்தம் பல கட்டங்களைக் கடந்து வந்திருந்தது. 19ஆம் நூற்றாண்டின் உதுமான் சாம்ராஜ்யத்து அறிவுத்துறையினரும் சீர்திருத்த வாதிகளும் பிரான்சுடன் தாம் கொண்டிருந்த பிணைப்புகள் காரணமாக, தாராளவாத, மேசோனிய (Masonic) மற்றும் சர்வதேசியக் கருத்துக்களினால் எழுச்சியூட்டப்பட்டார்கள். 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்துச் சீர்திருத்தவாதிகளான இளம் துருக்கியர்கள், பிரான்சில் நிலவிய அபிப்பிராய அலைகள் மூலமும் குறிப்பாக, மெய்மைவாதத்தில் (Positivism) விசுவாசமுள்ளவர்களது அபிப்பிராயத்தின் மூலமும் இஸ்லாமிய, துருக்கிய தேசியவாதத்தின் மூலமும் வலுவான செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். 1920ஆம் ஆண்டுகளில் முஸ்தபா கெமால் அதிகாரத்திற்கு வந்த பின் மதச்சார்பற்ற நவீனமயமாக்கமே, ஆதிக்கஞ் செலுத்திய சித்தாந்தமாகியது. இந்த மாற்றங்களுடன் பெண்களின் உரிமைகள் எவ்வழிகளில் நெருக்கமாக இணைந்திருந்தன என்பது இனிவரும் பக்கங்களில் பரிசீலிக்கப்பட விருக்கிறது.

ஒரு சமயத்தில் மத்திய ஐரோப்பாவை அச்சுறுத்திய உதுமான் சாம்ராஜ்யம், 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் சிதைந்து விடும் போக்கில் இருந்தது. வெளிவாரியாகப் பார்த்தால் மத்திய கிழக்கில் தமது செல்வாக்கை





விஸ்தரிக்க விரும்பிய ஐரோப்பிய வல்லரசுகளின் நிர்ப்பந்தத்தை அது எதிர்நோக்கியது. உள்வாரியாகப் பார்த்தால், இரண்டு மார்க்கங்களில் இருந்து இந்த நிர்ப்பந்தம் வந்தது. ஒன்று சாம்ராஜ்யத்தின் துருக்கியரல்லாத மக்கள், (கிரேக்கர்கள், ஆர்மேனியர்கள், பால்கன் பிரதேச மக்கள்) மத்தியில் தேசியவாத உணர்வு வளர்ந்தோங்கியது. மற்றையது, துருக்கியர்கள் மத்தியிலேயே நவீன மயமாக்கத்துக்கும் ஜனநாயக நிறுவகங்களுக்குமான அபிலாஷை வளர்ந்து வந்தது.

துருக்கி ஐரோப்பாவிற்குச் சமீபமாக இருந்ததும், ஐரோப்பாவின் சில பகுதிகள் அதன் மீது ஆதிக்கஞ் செலுத்தியதன் காரணமுமாக ஆரம்ப காலத்தில் இருந்தே ஐரோப்பியச் சிந்தனையின் செல்வாக்கின் கீழ் துருக்கி இருந்து வந்தது. 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் அங்கு பிரான்சின் செல்வாக்கு மிகவும் வலுவுள்ளதாக இருந்தது. 1789ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலகட்டத்தில் பிரெஞ்சுப் புரட்சியின் தாக்கமும் உணரப்பட்டு வந்தது. 'புரட்சி நிகழ்ந்து கொண்டிருக்கும் போதே, மாற்றத்துக்கான கருத்துக்களின் முதலாவது உயிரோட்டமுள்ள ஊடுருவல் இடம் பெற்றது. துருக்கியின் கண்ணோட்டம், சிந்தனை, சுயப்பிரக்ஞை ஆகியவற்றை மாத்திரமன்றி, அது இஸ்லாம் முழுவதையும் உருமாற்றிய பெரும் பிரவாகத்துக்கு வழி திறந்தது' (Lewis 1965 : 55). பிரான்சில் இருந்து வந்த இத்தகைய போதனைகளின் ஆபத்துக்களை, துருக்கியில் இருந்த *பழமைவாத ஆட்சி (ancien régime)* தெளிவாக உணர்ந்திருந்தது. 1798ஆம் ஆண்டில், உதுமானின் பிரதம செயலாளர் அரசின் உயர் மன்றத்திற்கு ஒரு அறிக்கையை வரைந்தார். அது இவ்வாறு கூறியது:

> பிரபல்யமும் புகழும் பெற்ற நாஸ்திகர்களான வோல்டேயர் (Voltaire), ரூசோ (Rousseau) மற்றும் அவர்களைப் போன்ற ஏனைய பொருள்முதல்வாதிகள், பல்வேறு கருத்துக்களுடனான பற்பல ஆக்கங்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். (இறைவன் எம்மைக் பாதுகாப்பாராக.) அவை எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய சொற்களையும் வசனங்களையும் கொண்டு நிந்தனை செய்யும் வகையில், பொதுமக்களுக்கு ஏற்ற பாஷையில் - பரிசுத்தமான நபிகள், மாமன்னர் ஆகியோருக்கு எதிராக அவதூறும், தூஷிப்பும் செய்யும் வகையில், சகல சமயங்களையும் அகற்றி ஒழித்துக்கட்டும் வகையில், சமத்துவம் மற்றும் குடியரசுவாதத்தின் மேன்மையை எடுத்துக்காட்டும் வகையில் எழுதப்பட்டன (Lewis 1982 - 182 - 3).

இந்தக் கருத்துக்கள் சுல்தானால் குடிமக்களுக்கு விடுக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சரிக்கைப் பிரகடனத்திலும் தொடர்கின்றன. "...மனித குலத்தில் எல்லா மனிதர்களும் சமமானவர்கள்... மனிதர்கள் என்ற வகையில் எல்லோருமே ஒரே மாதிரியானவர்கள். ஒருவர் மற்றவரை விட, எந்த வகையிலும் மேம்பட்ட சிறப்புடையவர் அல்ல! ஒவ்வொருவரும் தமது ஆத்மாவைத் தாமாகவே வழி நடத்துகிறார்கள். மண்ணுலக வாழ்வில் தமது சொந்த ஜீவனோபாயத்தைத் தாமாகவே சீர்படுத்திக் கொள்கின்றனர்..." (Lewis 1982 : 183).

எவ்வாறாயினும், ஐரோப்பிய பாணிகளில் நவீனமயமாக்குவதற்காக ஒரு உணர்வுபூர்வமான முயற்சி செய்யப்பட்டது. 1792ஆம் ஆண்டில் மூன்றாம் சுல்தான் செலிம், நிர்வாகத்திலும் ஆயுதப் படைகளிலும் ஒரு "புதிய நியதி"யை *(Nizam-i Cedid)* ஸ்தாபித்தார். ஆயுதப் படைகள் ஐரோப்பியப் பாணியில் புனரமைக்கப்பட்டன. இராணுவ, கடற்படைப் பாடசாலைகளில் பிரெஞ்சு அதிகாரிகள் பிரெஞ்சு மொழியில் போதனை செய்தார்கள்.

> இதன் பலாபலன்.... ஒரு புதிய சமூகப் பிரிவினரை உருவாக்குவதாகும். இந்தச் சமூகப்பிரிவினர், இளம் இராணுவத்தினரையும் கடற்படை அதிகாரிகளையும் கொண்ட ஒரு வர்க்கத்தினர். இவர்கள் கல்வி, வாசிப்பு, தனிப்பட்ட தொடர்புகள் மூலம் மேற்கத்தைய நாகரிகத்தின் சில அம்சங்களுடன் பரிச்சயமானவர்கள். குறிப்பாக குறைந்த பட்சம் மேற்கு நாட்டு மொழிகளில் ஒன்றிலாவது -வழமையாகப் பிரெஞ்சு மொழியில் -பாண்டித்தியம் பெற்றவர்கள். புதிய, மிகச்சிறந்த மார்க்கங்களுக்கு ஆலோசகர்களாகவும் வழிகாட்டிகளாகவும் மேற்கத்தைய நிபுணர்களை நாடுவதில் இவர்கள் பழக்கப்பட்டவர்கள் (Lewis 1965 : 59).

ஐரோப்பாவின் முக்கியமான தலைநகரங்களுக்குத் தூதுவர்களை நியமிப்பதும் இந்தச் சீர்திருத்தங்களுள் அடங்கியது. அயல் மொழிகளைக் கற்கும்படியும், சாம்ராஜ்யத்திற்குப் பயன்தரவல்ல அறிவைப் பெருக்கும் படியும் இந்தத் தூதுவர்கள் பணிக்கப்பட்டார்கள். ஆயினும், பிரெஞ்சுச் செல்வாக்குக்கு எதிராகவும், சீர்திருத்தங்களுக்கு எதிராகவும் வைதீக மற்றும் பழமைவாதச் சக்திகளின் பிரசாரம் படிப்படியாக அதிகரித்தது. 1807ஆம் ஆண்டில் இது உச்சக்கட்டத்தை அடைந்தது. அதன் பிரதிபலனாக துருக்கிய இராணுவத்தின் ஒரு பிரிவினர் கலகம் செய்தார்கள். சுல்தானைப் பதவி கவிழ்த்தார்கள். வெளிநாட்டு மோகங்கொண்ட பலரைப் படுகொலை செய்தார்கள்.

இரண்டாவது மஹ்மூத் (1808-1839) ஆட்சிக்காலத்தில் ஆரம்பமான இரண்டாவது சீர்திருத்த அலை, வெளிநாட்டு ஊடுருவல்களுக்கு எதிராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசாங்க நிறுவனங்களின் கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டிருந்தது. கடற்படை, இராணுவம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் பயிற்சிக்காகப் பிரான்சிற்கும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிற்கும் அனுப்பப்பட்டனர். 'ஐரோப்பாவிற்குச் சென்ற முதலாவது துருக்கிய மாணவர் அணியினர், பயிற்சி பெற்று நாடு திரும்பியதும் தமது நாட்டை உருமாற்றும் அளப்பரிய முக்கியத்துவம் வாய்ந்த பங்குப் பணியை நிறைவேற்றினர்' (Lewis 1982:82). 1827ஆம் ஆண்டு இராணுவ மருத்துவப் பாடசாலையும் அதைத் தொடர்ந்து இசைக் கல்லூரியும் நிறுவப்பட்டன. 1834ஆம் ஆண்டு பிரான்சில் உள்ள சென். சைர் (St. Cyr) கல்லூரியைப் பின்பற்றிய பாணியில், இராணுவ விஞ்ஞானங்களுக்கான பாடசாலையும் அமைக்கப்பட்டது. 1839ஆம் ஆண்டு சிவிலியன் கல்வி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அத்துடன் அரசாங்க ஊழியர்களை உருவாக்குவதற்காக இரண்டு இலக்கணப் பாடசாலைகளை (Grammar School) அமைக்க ஆயத்தங்கள் மேற்கொள்ளப் பட்டன. 1838ஆம் ஆண்டு புதிய மருத்துவக் கல்லூரியின் திறப்பு விழாவில் சுல்தான் உரையாற்றும் போது இவ்வாறு கூறினார்: "நீங்கள் பிரெஞ்சு மொழியில் கல்வி கற்பீர்கள், எனது நோக்கம் பிரெஞ்சு மொழியில் உங்களுக்குக் கல்வி அளிப்பது அல்ல... விஞ்ஞான ரீதியாக மருத்துவத்தை உங்களுக்குப் படிப்பிப்பதும், கொஞ்சங் கொஞ்சமாக அதை, எம்முடைய சொந்த மொழியில் சேர்த்துக் கொள்வதும் தான்..." (Lewis 1965 : 83-4).

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிலப்பிரபுத்துவ மற்றும் சமயம் சார்ந்த சலுகைகளில் சீர்திருத்தமும் உடையில் சீர்திருத்தமும் மேற்கொள்வதற்கு முஸ்தீபுகள் செய்யப்பட்டன. 1828ஆம் ஆண்டில் துருக்கிய இராணுவத் தினருக்கு, வட ஆபிரிக்காவில் பயன்படுத்தப்படும் சிவப்புக் குல்லாய் அறிமுகப்படுத்தப்பட்டது. அவர்கள் ஐரோப்பியப் பாணியிலான காற்சட்டையையும் மேற்சட்டையையும் அணிந்தனர். 1829ஆம் ஆண்டில் அதிகாரிகள் சிவப்புக் குல்லாய், காற்சட்டை, கோட்டுகள், பூட்சுகள் ஆகியவற்றை அணிய வேண்டியிருந்தது. சுல்தான் அதற்கு ஒரு முன்மாதிரியாக விளங்கினார். வெளிநாட்டு ராஜதந்திரிகளை வரவேற்கும் போது கூட, 'ஐரோப்பிய நியதிமுறையை அவர் கடைப்பிடித்தார். அவர் விருந்து வழங்கி, விருந்தினர்களுடன் உரையாடினார். பெண்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் அவர் நடந்து கொண்டார்' (Lewis 1965 :98 101)

## டான்ஸிமெட் (மறுசீரமைப்பு) – The Tanzimat

1839ஆம் ஆண்டில் இரண்டாவது மஹ்மூத் காலமானதும் அவரது மகனான அப்துல் மஜித் ஆட்சிக்கு வந்தார். பிரான்சிற்கு முன்னாள் தூதுவராகவும் வெளிநாட்டு அமைச்சராகவும் விளங்கிய முஸ்தபா ரஷீத் பாஷாவின் செல்வாக்கிற்குட்பட்ட அப்துல் மஜீத் மேலும் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். 1839ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இந்தச் சீர்திருத்தங்கள் டான்ஸிமெட் என்று அழைக்கப்பட்டன. மதவாதப் போக்குள்ள சுல்தானின் ஆட்சியிலிருந்து நவீன அரசின் ஆரம்பத்திற்கு வழிவகுத்த டான்சிமெட், துருக்கியில் ஏற்பட்ட ஓர் அடிப்படை மாற்றத்தைக் குறித்தது. குடிமக்களின் உயிர், கௌரவம், சொத்து ஆகியவை பாதுகாக்கப்பட்டது. அத்துடன் பாரபட்சமற்ற பொது விசாரணைகளுக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டது. புதிய குற்றவியல் சட்டக்கோவை உருவாக்கப்பட்டது. சட்டத்தின் முன் சகல மதங்களைச் சேர்ந்த சகலருமே சமமானவர்கள் என்ற கோட்பாடு அந்தக் காலங்களில் மிகவும் துணிச்சலான நடவடிக்கை என்று கருதப்பட்டது (Lewis 1965 : 105). வரி முறை சீர்திருத்தப்பட்டு, வரிகள் கறந்தெடுக்கும் முறையும் ஒழிக்கப்பட்டது. மத்தியத்துவப்படுத்தப்பட்ட பிரெஞ்சு முறையின் அடிப்படையில் ஒரு புதிய மாகாண நிர்வாக அமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் மூலம் முன்னர் நிலவிய பகுதியளவிலான நிலப்பிரபுத்துவ முறை நீக்கப்பட்டது.

ஆயினும், பிரெஞ்சுச் சட்டத்தின் அடிப்படையில் இருந்து உருவான புதிய வர்த்தகக் கோவை, புனித மார்க்கச் சட்டத்திற்குப் பொருந்த வில்லையாதலால் சர்ச்சை உருவானது. 'புனித மார்க்கச் சட்டத்திற்கும் இந்த விஷயத்திற்கும் சம்பந்தமில்லை' என்று ரஷீத் பாஷா உலமாக்களுக்குப் பதில் அளித்தார். இந்தச் சமயத்தில் உலமாக்கள் தாம் மிகவும் சக்தி வாய்ந்தவர்கள் என்பதை நிரூபித்தார்கள். ரஷீத் பாஷா பதவி நீக்கஞ் செய்யப்பட்டார். சீர்திருத்தங்கள் பின்னடைவைச் சந்தித்ததாகத் தோன்றியது. இருந்தாலும், இறுதியில் நவீனமாக்கப் போக்குகள் பலம் பெற்றவை என்பது நிரூபணமாயிற்று. 1845ஆம் ஆண்டு ரஷீத் பாஷா பிரதமர் (Grand Vizier) ஆனார். திருப்தியுற்ற, மேற்குமயமான ஆதரவாளர்களின் உதவியோடு, அரசாங்கத்தின் சகல துறைகளிலும் புதிய கோட்பாடுகளை அமுல்படுத்துவதற்குப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டார். கல்வி முறைக்கும் சீர்திருத்தங்கள் விஸ்தரிக்கப்பட்டன. கல்விச்சபை ஒன்று அமைக்கப்பட்டு, மார்க்கப் பாடசாலைகளுடன் சமாந்திரமாக ஆரம்ப,





கனிஷ்ட அரசாங்கப் பாடசாலைகளும் உருவாக்கப்பட்டன. இந்தக் கல்வி முறையை ஒருமைப்படுத்தவும் முயற்சி செய்யப்பட்டது. ஆயினும், முன்னேற்றம் ஆமை வேகத்தில் நகர்ந்தது. அதாவது, 1850ஆம் ஆண்டில் 870 மாணவர்களைக் கொண்ட ஆறு கனிஷ்ட பாடசாலைகள் மாத்திரமே இருந்தன. 1847ஆம் ஆண்டு கல்வி அமைச்சு உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்தத் துறையில் உலமாக்களின் பிரத்தியேக அதிகார வரம்பின் பலம் பறிக்கப்பட்டது (Lewis 1982 : 111-12).

1858ஆம் ஆண்டு ரஷித் பாஷா காலமானதைத் தொடர்ந்து இளம் சீர்திருத்தவாதிகளான அலி பாஷா, ஃபுவாத் பாஷா என்ற இருவர் டான்ஸிமெட் கொள்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டனர். இவர்கள் இருவருமே பிரெஞ்சு மொழியில் ஓரளவு பாண்டித்தியம் பெற்றிருந்தனர். அரசாங்கத்தில் உயர் பதவிகளை வகிப்பதற்கு முன்னர் இவர்கள் ராஜதந்திரிகளாக விளங்கியிருந்தனர். அந்தக் காலப்பகுதியில் லூவிஸ் சுட்டிக்காட்டியிருப்பதைப் போன்று, 'புதிய அதிகார மேல் மட்டத்தினர் இராணுவத்தில் இருந்தோ, உலமாக்கள் மத்தியில் இருந்தோ வரவில்லை. மாறாக, மொழிபெயர்ப்பு அலுவலகத்தில் இருந்தும் தூதரகச் செயலாளர் களிடம் இருந்தும் தான் வந்தார்கள்.' (Lewis 1965 : 116).

1861ஆம் ஆண்டு அப்துல் அஸீஸ், சுல்தான் ஆனார். அவர் 1867ஆம் ஆண்டில் லண்டனுக்கும் பாரிஸிற்கும் வியன்னாவிற்கும் விஜயம் செய்தார். 1868ஆம் ஆண்டு பிரெஞ்சு மொழியில் மேற்கத்தைய கனிஷ்ட கல்வியை வழங்கும் வகையில் ஒரு பிரெஞ்சு கனிஷ்ட பாடசாலை (*lycée*) திறக்கப் பட்டது. ஆயினும், இந்தக் காலகட்டத்தின் மிகவும் முக்கியமான சீர்திருத்தம் 1876இல் பூர்த்தி செய்யப்பட்ட புதிய சிவில் சட்டக் கோவையாகும். இதை அஹ்மட் செவ்டெற் வரைந்தார். அவர் இஸ்லாமிய மரபுகளின் எல்லைக்குள் தொடர்ந்தும் இருப்பதை விரும்பினார். இந்தச் சட்டக்கோவையை - வடிவத்தில் நவீனமானதாகவும் அதே சமயம் ஷரியாவை உறுதியான அடிப்படையாகக் கொண்டும் - அவர் தயாரித்தார். இது துருக்கியில் 1926ஆம் ஆண்டுவரை நடைமுறையில் இருந்தது (Lewis 1965 : 121).

## இளம் உதுமான் இயக்கம்

துருக்கியில் ஐரோப்பியக் கருத்துக்கள் பரவிய வேளையில் துருக்கியப் பாணியிலான மரபிலக்கியத்திலிருந்து உடைத்துக் கொண்டு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய இலக்கிய இயக்கம் பீறிட்டெழுந்தது. பிரெஞ்சு எழுத்தாக்கங்களால் இந்த இலக்கிய இயக்கம் எழுச்சி பெற்றது. இப்ராஹிம் சினாசி (1826-1871), ஸியா பாஷா (1825-1880), நாமிக் கெமால் (1840-1888) ஆகியோரே இந்த இலக்கியத்தின் முன்னோடிகள். நவீனமயமாக்கத்தின் நிர்ப்பந்தத்துடன் துருக்கிய முஸ்லிம் தனித்துவத்தை இணங்கச் செய்யும் முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். சினாசி பாரிஸில் கல்வி கற்றவர். அங்கு 1848ஆம் ஆண்டு நடந்த புரட்சியில் பங்கேற்றவர் என்று கூறப்படுகின்றது. 1862ஆம் ஆண்டு துருக்கிக்குத் திரும்பிய அவர் துருக்கிய புத்திஜீவிகள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற சஞ்சிகை ஒன்றை ஆரம்பித்தார். ஸியா பாஷாவும் ஒரு பிரெஞ்சு மொழி கற்ற மாணவர். துருக்கிய ஆட்சியை விமர்சனம் செய்ததால் ஐரோப்பாவில் தஞ்சம் புகுந்திருந்தார். மேற்குலகப் பாணிகளை அப்படியே கடைப்பிடிக்காமல் தேவையானவற்றை மட்டும் கற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றி அவர் தொடர்ச்சியாக எழுதி வந்தார். தனது சொந்த சமுதாயத்தையே கடுமையாக விமர்சித்து வந்தார். 1870ஆம் ஆண்டு ஜெனீவாவில் இருந்த போது அவர் இப்படி எழுதினார். "நான் விசுவாசமற்றவர்களின் மண்ணைக் கடந்து வந்தேன், நான் நகரங்களையும் மாடங்களையும் மாளிகைகளையும் பார்த்தேன். இஸ்லாத்தின் ராஜ்யத்தில் அலைந்து திரிந்தேன். ஆனால், அழிபாடுகளைத் தவிர நான் எதையுமே காணவில்லை" (Lewis 1965:22). நாமிக் கெமாலும் பிரெஞ்சு மொழி படித்தவர். அவர் மொழிபெயர்ப்பு அலுவலகத்தில் பணிபுரிந்தார். அதே சமயம், சினாசியின் சஞ்சிகையிலும் பணியாற்றினார். ஐரோப்பாவில் தஞ்சம் புகுந்திருந்த சமயம் ஆட்சிக்கு எதிரான சஞ்சிகைகளை வெளியிட்டார். கவிதைகள், நாடகங்கள், நாவல்களில் தெரிவிக்கப்பட்ட அவருடைய கருத்துக்கள் சுதந்திரம் பற்றியதாக இருந்தன. அத்துடன், 'முஸ்லிம் பாரம்பரியங்களுக்கும் மனோபாவங்களுக்கும் ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்ட *தந்தையர் பூமி* பற்றியனவாகவும் அவை இருந்தன' (Lewis 1965:138). இந்தத் தாராளப்போக்குள்ள சீர்திருத்தவாதிகள், 'இளம் உதுமானியர்கள் ' என்று அழைக்கப்பட்டனர் துருக்கியில் தமக்கு எதிரான விரோதம் அதிகரித்த வேளையில் அவர்கள் அஞ்ஞாதவாசம் புரிய நேர்ந்தது. ஆனால், அவர்களின் செல்வாக்கு துருக்கியில் உணரப்பட்டது. பிற்காலங்களில் மேலும் தீவிரப்போக்குள்ள சீர்திருத்தவாதிகளுக்கு இவர்களே வழிசமைத்துக் கொடுத்தனர்.





## பெண்களும் கல்வியும்

19ஆம் நூற்றாண்டில் உதுமான் சாம்ராஜ்யத்தில் பெண்கள் கல்வி சம்பந்தமான பிரச்சினையே அதிகமாக விவாதிக்கப்பட்ட விஷயமாகும். கல்வியைப் பெண்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்ற முடிவும் அப்போது தான் எடுக்கப்பட்டது. சுல்தான் அப்துல் அஸீஸ், 1863ஆம் ஆண்டில் இடைநிலைப் பாடசாலைகளையும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளையும் பெண்களுக்காகத் திறந்து வைத்தார். ஆனால், இங்கு வழங்கப்பட்ட கல்வி அடிப்படையானதாய், பெரும்பாலும் மதச்சார்புடையதாய், சிறந்த முஸ்லிம் மனைவிகளையும் அன்னையர்களையும் உருவாக்கும் நோக்கம் கொண்டதாய் விளங்கியது. ஆயினும், சில மேல் மட்டத்தைச் சேர்ந்த சிறுமிகளுக்கு வீட்டில், வெளிநாட்டு ஆசிரியைகளால் பரந்தநோக்குடைய கல்வி வழங்கப்பட்டது. இல்லாவிடின் இச்சிறுமியருக்கு, துருக்கியில் இருந்த வெளிநாட்டுப் பாடசாலைகளில் கல்வி புகட்டப்பட்டது. உதாரணமாக, 1871ஆம் ஆண்டு பெண்களுக்கான அமெரிக்கக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இருபது வருடங்களாக கிறிஸ்தவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இது விளங்கியது. இந்தக் கல்லூரியில் தனது கல்வியைப் பூர்த்தி செய்த முதலாவது முஸ்லிம் சிறுமியான ஹாலிட் எடிப் பின்வந்தகாலத்தில் பெண்களின் தலைவியாகப் பரிணமித்தார். இவ்விதம் 19ஆம் நூற்றாண்டில் மேற்கு நாடுகளில் கல்வி பெற்ற துருக்கிய உயர்குடி வர்க்கத்தினரும், நடுத்தர முதலாளித்துவ வர்க்கத்தினரும் தோன்றியதன் விளைவாக, 'கல்வி பெற்ற மனைவியர்' என்ற பிரச்சினையும் உதயமாகியது.

> தமது பெண்களுக்கு பாரிஸ் நகரத்தின் மிகச்சிறந்த உடைகளை அணிவித்தாலும் கூட, ஐரோப்பாவின் மிகவும் முன்னேற்றங்கண்ட தலைநகரங்களுக்கு அவர்களை அழைத்துச் சென்றாலுங்கூட, ஆசிரியைகள் தமது புதல்விகளுக்கு, வசீகரம்மிகு பண்பாட்டுக் கல்விநெறியை விடவும் மேம்பட்டதான கல்வியொன்றை வழங்க வேண்டுமென துருக்கியத் தந்தைமார், எதிர்பார்த்தனர். *முக்கியமான பிரமுகர்களின் வருங்கால மனைவிகளாக விளங்குவதற்குப் பொருந்தக் கூடிய* வகையில் கருத்தாழம் வாய்ந்த மேலைத்தேய, கீழைத்தேய கல்வியைத் தமது புதல்விகள் பெற்றிருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினர் (Minai 1981 : 49).

இவ்விதம் கல்வி பெற்ற அநேகமான பெண்கள், பெண் விடுதலை பற்றிய நாவலாசிரியர்களாகவும் எழுத்தாளர்களாகவும் பிற்காலத்தில் பிரபல்யம் பெற்று விளங்கினர்.

வழமையான துருக்கியக் கவிதைகளில் குயில்கள், ரோஜா மலர்கள் வாயிலாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மை வெளிப்படுத்திய தமது அன்னையர்கள் போலன்றி, இந்தப் புதல்விகள் கடிதங்கள், நினைவுக் குறிப்புக்கள், செய்தித்தாள்கள், கட்டுரைகள், நாவல்கள் போன்றவற்றை எழுதினர். பெண்களின் சிந்தனைகளை அவை தூண்டின, சமூக மாற்றத்துக்கான மனோவியல் சூழ்நிலையை உருவாக்கின. வைப்பாட்டி முறைக்குக் கட்டுண்ட பெண்களை, அம்முறைக்கு எதிராக ஐக்கியப்படுத்த உதவும் வகையில் அவர்களின் எழுத்தாக்கங்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படக் கூடியதாக இருந்தமை அதற்கு மேலும் வலுவூட்டியது (Minai 1981 : 50)

இந்தச் சகாப்தத்தின் முதலாவது பெண் நாவலாசிரியை பாத்திமா அலியே (1862இல் பிறந்தவர்). அரசியலில் தீவிரமாக ஈடுபட்டிருந்த வரலாற்றாசிரியரான அஹ்மத் செவ்டெட்டின் புதல்வியான இவர், பிரெஞ்சு மொழியில் வீட்டிலேயே கல்வி பெற்றவர். 1890ஆம் ஆண்டு பிரெஞ்சு நாவலை மொழிபெயர்த்து முதல் சாதனையைப் புரிந்தவர். 1892ஆம் ஆண்டில் *முஹதராத்* ('பெண்மை') என்ற நாவலை எழுதினார். மரபுவழி சமுதாயத்தினால் தலையெடுக்க விடாமல் செய்யப்பட்ட அருந்திறன் கொண்ட ஓர் பெண் பற்றிய கதை இது. இதைத் தொடர்ந்து மற்றுமொரு பிரசுரமும் வெளியானது. *நிஸ்வணி இஸ்லாம்* (இஸ்லாமியப் பெண்கள்) என்ற இந்த வெளியீடு இஸ்லாம் தவறான முறையில் விளக்கிக் கூறப்படுவதைக் கண்டித்ததுடன், பெண்கள் கல்வி பெறவேண்டும் என்றும், சமுதாயத்தில் பங்கேற்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது.

1895இல் அலியே, *பெண்களுக்கான ஓர் செய்தித்தாள்* என்ற பத்திரிகையை வெளியிட்டு, அதில் விரிவான முறையில் எழுதினார். இதுவே துருக்கியில் 'பெண்களுக்குப் பெண்களால் வெளியிடப்பட்ட முதலாவதும் நீண்டகாலம் நடத்தப்பட்டதுமான செய்தித்தாளாகும்'. இது, அணையுடைத்த வெள்ளம் போல எண்ணிக்கை கடந்த பெண் எழுத்தாளர்களுக்கும் செய்தியாளர்களுக் கும் தமது எண்ணங்களை வெளிப்படுத்த ஓர் வடிகாலாக அமைந்தது. மற்றுமொரு பெண் எழுத்தாளர் செய்னெப் ஹனும். இவர் பிரான்ஸிலும் பிரிட்டனிலும் பயணித்து அனுபவங்களைப் பெற்றுக் கொண்டவர். ஐரோப்பியப் பாணியில் கல்வி கற்றுங்கூட, இன்னமும் பாரம்பரியத்திற்குக் கட்டுப்பட்டிருக்கும் துருக்கியப் பெண்கள் எதிர்நோக்கும் முரண்பாடுகள் பற்றி இவர் எழுதினார்.

பிரெஞ்சு எழுத்தாளர் பியேர் லோட்டிக்கு, அந்தப்புரப் பலதார வாழ்க்கை பற்றிய விபரங்களை அவர் வழங்கினார். இதன் காரணமாக, 1906இல் லே தெஷோன் ஷாந்தேஸ். ***(Les Désenchantées)*** பிரசுரமானது. இந்த நாவலை





லோட்டி எழுதினார். 'ஒரு துருக்கியப் பெண்ணின் மூளை இருபதாம் நூற்றாண்டுக்குள் பாய்ந்து விட்டாலுங்கூட, அவளது உடல் மத்திய கால சம்பிரதாயங்களிலேயே சிறைப்பட்டிருக்கும் அவலத்தை இந்த நாவலில் அவர் விளக்கினார்' (Minai 1981 : 52-4).

## இளம் துருக்கியர் இயக்கம்

நான்கு மருத்துவ மாணவர்கள் 'இளம் துருக்கியர்கள்' குழுவை உருவாக்கிய போது, 1889ஆம் ஆண்டில் சுல்தானின் கொடுங்கோலாட்சிக்கு இருந்த எதிர்ப்பு தானாகவே வெளிப்பட்டது. 'ஒற்றுமை மற்றும் முன்னேற்றத்திற்கான குழு' என்று உத்தியோகபூர்வமாக அழைக்கப்பட்ட இதன் அணியில் விரைவிலேயே சிற்றூழியர்கள், சில்லறை வர்த்தகர்கள், இஸ்தான்புல் மாணவர்கள் ஆகியோர் சேர்ந்து கொண்டனர். ஐரோப்பாவிலும் எகிப்திலும் அஞ்ஞாதவாசமிருந்த துருக்கியர்களும் குழுக்களை உருவாக்கினார்கள். இராணுவ அதிகாரிகள் மத்தியிலும் 'இளம் துருக்கியர்கள்' மிகவும் தீவிரமாகச் செயல்பட்டனர்.

1906ஆம் ஆண்டு டமாஸ்கஸில் அமைக்கப்பட்ட ஓர் குழுவின் உறுப்பினர்களில் ஒருவராக, துருக்கியின் எதிர்கால ஜனாதிபதியான முஸ்தபா கெமாலும் இருந்தார். மெய்மைவாதி **(Positivist)** அகஸ்த் கொம்த் (1798-1857)தின் பிரெஞ்சு தத்துவவியலினுடைய செல்வாக்கிற்கு உள்ளான அஹ்மத் ரிஷா (1859-1930) பிரான்ஸில் இளம் துருக்கியர்களுக்குத் தலைமை தாங்கினார். சமுதாயத்தின் துரிதமான தொழில்துறை நிலைமாற்றக் காலகட்டத்தின் போது எழுதிய கொம்த், தெய்வீகத்தையும், திருச்சபையின் வைதீகத்தையும் நிராகரித்து, மெய்யான இயல்பு அல்லது விஞ்ஞானபூர்வமுறை அங்கீகரிக்கப் படுவதைப் பரிந்துரைத்தார். சமுதாயத்தை ஆராய்ந்து, சமூக ஒருங்க மைப்பை விளக்கும் (இதை சமூகவியல் என்று அவர் அழைத்தார்) அடிப்படை சமூக விஞ்ஞானம் ஒன்றின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். கிறிஸ்தவக் கடவுளை நிராகரித்த அவர் ஒரு புதிய மதச்சார்பற்ற மனிதகுலச் சமயத்தையும் அரசியல், சமூக, பொருளாதார நீதியை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய சமூக அமைப்பையும் ஆதரித்தார். அது போலவே, உலகளாவியகல்வி, ஒரு தாரக் குடும்பம் ஆகியவற்றையும் அவர் வலியுறுத்தினார். இயற்கைக்கு அப்பாற்பட்ட புலனால் அறிந்து கொள்ள முடியாதவற்றை ஊகிப்பதற்குப் பதிலாக அனுபவத்தின் வாயிலாகப் பெறப்பட்ட அறிவின் விபரங்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் உறுதிபடக் கூறினார்.

விஞ்ஞானபூர்வ கண்ணோட்டம் கொண்டு சமூக முன்னேற்றத்தின் கருத்தம்சங்களை உள்ளடக்கிய மெய்மைவாதம் (Positivism), மதத்தின் இடத்தை பிடித்துக் கொண்டு, ஐரோப்பாவில் அநேக சமூகச் சீர்திருத்த. மதச்சார்பற்ற இயக்கங்களிடையே செல்வாக்குச் செலுத்தியது மாத்திரமல்லாமல், தமது சொந்த மத மற்றும் நிலப்பிரபுத்துவ அதிகாரப் படிமுறை அமைப்புக்களுக்கு சவால் விடுத்து வந்த ஆசிய மாணவர்கள் மீதும் கூட, அது தாக்கத்தை ஏற்படுத்தியது.

நவீனமயமாக்கம், மேலைத்தேயமயமாக்கம் ஆகியவற்றை அவசியப்படுத்துவது இளம் துருக்கியர்களின் தலையாய கோட்பாடுகளில் ஒன்றாகவிருந்தது. வைதீகச் சக்திகளுக்குத் தாம் எதிரானவர்கள் என்பதை அவர்கள் உறுதியாக வெளிப்படுத்திக் கொண்டனர். இக்கொள்கைகளைக் கடைப்பிடிப்பது சிலருக்கு தப்பிப் பிழைத்துக் கொள்ள ஓர் வழியாக இருந்தது. அது மாத்திரமல்லாது. அவர்களுக்கு வேறெந்தவிதமான தெரிவும் இருக்கவில்லை. "நாம் மேலைத்தேயமயமாக வேண்டும் இல்லாவிட்டால் அழிக்கப்பட்டு விடுவோம்" என்பது. 1912ஆம் ஆண்டு அரசாங்கத்தை அமைத்த அறிஞரும் படைவீரருமான அஹ்மத் முக்தாரின் கருத்தாகும். அதுபோலவே. இளம் துருக்கியர் இயக்கத்தை ஸ்தாபித்தவர்களில் ஒருவரான அப்துல்லா செவ்டெற் இப்படி எழுதினார். "இரண்டாவது நாகரிகம் என்று ஒன்று இல்லை. நாகரிகம் என்றால் அது ஐரோப்பிய நாகரிகம் தான். அதை முள்ளோடுகூடிய ரோஜாவைப் போல இறக்குமதி செய்தாக வேண்டும்." இந்த நாகரிகம் பெண்களுக்கான ஒரு புதிய அந்தஸ்தைப் பொருள்படுத்தியது. 1912ஆம் ஆண்டில் செவ்டெற் வெளியிட்ட சஞ்சிகை ஆர்வமூட்டும் கட்டுரை ஒன்றை வெளியிட்டது. மேலைத்தேய மயமாக்கப்பட்ட எதிர்காலத் துருக்கியின் ஓர் மனக்காட்சியை (vision) அது விளக்கியது. சுல்தான் ஒரு மனைவியையே வைத்திருப்பார், பலதாரங்களை வைத்திருக்க மாட்டார். முக்காடு ஒழித்துக் கட்டப்படும், பெண்கள் தாம் விரும்பியவற்றை அணிய முடியும், தமக்கு விருப்பமானவர்களை மணம் முடிக்க முடியும். விவாகத் தரகர் முறை முற்றாகத் தடை செய்யப்படும் (Lewis 1965 : 231-2).

ஐரோப்பிய மயமாக்கம் என்ற போக்கு சித்தாந்தவியலில் மாத்திரமல்ல என்பதை மறந்து விடக்கூடாது. ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளுடன் பொருளாதாரப் பிணைப்புகளை ஏற்படுத்துவதையும் அது பொருள்





படுத்திற்று. டான்சிமெட் சீர்திருத்தங்களுக்கும் 1908ஆம் ஆண்டின் இளம் துருக்கியத்துப் புரட்சிக்கும் இடையிலான ஐம்பது ஆண்டுகளில் கெயீதரின் கூற்றுப்படி 'மத்திய அதிகாரத்துவம் பலப்படுத்தப்பட்டது. அதே சமயம் துருக்கி படிப்படியாக ஏகாதிபத்திய வல்லரசுகளின் அரசியல் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.' நவீன அரசசெயல்முறை நுட்பங்கள். நிலையான முதலாளித்துவ வளர்ச்சிக்கு உகந்ததாக இருத்தல் வேண்டும். ஆனால் அடுத்தடுத்து வந்த நவீனவாக்க அலைகளினால், அந்நுட்பங்களுக்குச் சாதகமாக ஓர் நிரந்தர சமநிலையை எய்திட முடியவில்லை' (Keyder 1979 : 4-5).

1908ஆம் ஆண்டு ஜுலையின் போதே. உண்மையாக மஸடோனியாவில் துருக்கிய இராணுவம் மேற்கொண்ட கலகத்தில் இருந்தே. இளம் துருக்கியர்கள் அதிகாரத்தை கைப்பற்றிய சம்பவம் ஆரம்பமாகியது. மேஜர் நியாஸியின் தலைமையில் நடந்த இந்தக் கலகத்தில் பங்கேற்றவர்களில் முஸ்தபா கெமாலும் ஒருவர். இந்தக் கலகம் எல்லா முக்கிய நகரங்களுக்கும் பரவியது. சுல்தான் அப்துல் ஹமீத் அரசியல் யாப்பை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரவும் சில ஜனநாயக உரிமைகளை வழங்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டார். அவர் 1909இல் எதிர்ப்புரட்சிச் சதியை மேற்கொள்ளவும் முயன்றார். இது தோல்வியில் முடியவே அவர் பதவி இறக்கப்பட்டார். வாரிசு அடிப்படையில் ஐந்தாவது முஹமது சுல்தானாகப் பதவி ஏற்றார். துருக்கியில் எதேச்சதிகாரம் நிலைநாட்ட எடுக்கப்பட்ட இறுதிப் பிரயத்தனம் இதுவாகும்.

இளம் துருக்கியர்கள் தமது சாம்ராஜ்யத்தை நவீனமாக்கும் எண்ணத்துடன் பல்வேறு அரசியல் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தங்களை மேற்கொண்டனர். நிதி நிர்வாகம் மறுசீரமைக்கப்பட்டதுடன் கல்வியைப் பெண்களுக்கும் விஸ்தரிக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால் அவர்களது சீர்திருத்தமாக்கும் வேகம், போல்கன் யுத்தங்களினாலும், 1914-1918இல் நடந்த முதலாவது உலக மகா யுத்தத்தினாலும் தடுத்து நிறுத்தப்பட்டது. துருக்கியை, 'ஐரோப்பாவின் நோயாளி' என்று இழிவுபடுத்திய ஐரோப்பிய மகா வல்லரசுகள், உதுமான் சாம்ராஜ்யத்தை துண்டாடுவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டன. அவை துருக்கியைத் தாக்கியது மாத்திரமன்றி அதன் துருக்கியரல்லாதோர் மத்தியில் கலகங்களுக்கும் தூபமிட்டன. செவ்ரஸ் உடன்படிக்கைக்கு (Treaty of Sèvres) - 1920- அமைய துருக்கி தன்னிடமிருந்த எல்லா ஐரோப்பிய மற்றும் அரபு நிலஉடைமைகளையும் இழந்தது. டார்டெனெல்ஸ் மற்றும் போஸ்பரஸ் பிராந்தியங்கள் சர்வதேச மயமாக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல இன மக்களும் வாழக்கூடிய ஒரு நவீனமயமாக்கப்பட்ட சாம்ராஜ்யத்தைப் பற்றி இளம் துருக்கியர்கள் மனக்காட்சி ஒன்றைக் கொண்டிருந்தாலுங்கூட, அவர்கள் அடிப்படையிலேயே இஸ்லாமிய வாதிகளாகவும் சுல்தானின் ஆட்சிக்கு ஆதரவாளர்களாகவும் விளங்கினர். ஆயினும், துருக்கியர் அல்லாதோர் மத்தியில் தேசியவாதத்தின் வளர்ச்சி, யுத்தத்தில் துருக்கி அடைந்த தோல்வி என்பன காரணமாக இளம் துருக்கியர் மத்தியில் புதிய குழு ஒன்று தோன்றியது. இந்தக் குழுவினர் 'குடியரசான, மதச்சார்பற்ற, ஏகாதிபத்தியமற்ற' ஒரு நவீன துருக்கிய தேசிய அரசு நிர்மாணிக்கப்படுவதை ஆதரித்தனர் (Keyder 1979:9). சுல்தான், நிபந்தனையின் பெயரில் நாட்டை மேலை வல்லரசுகளிடம் ஒப்படைத்ததைத் தொடர்ந்து, இந்தப் புதிய குழுவினர் பல்வேறு ஆர்ப்பாட்டங்களையும் கிளர்ச்சிகளையும் மேற்கொண்டனர்.

## இளம் துருக்கியர்களும் பெண்களின் விடுதலையும்

இளம் துருக்கியர்கள் ஆதிக்கஞ் செலுத்திய காலத்தில் பெண்களுக்கென மேலும் பல உயர்நிலைப் பாடசாலைகளும் ஆசிரியர் கல்லூரிகளும் நிறுவப்பட்டன. 1915ஆம் ஆண்டில் பெண்களுக்கான முதலாவது பல்கலைக் கழகமும் ஸ்தாபிக்கப்பட்டது. பெண்களுக்கான கல்வி பரவியது. நாட்டை ஜனநாயக ரீதியில் மறுசீரமைப்பதற்கான கவனமும் அதிகரித்தது. இவற்றின் காரணமாக பெண்களின் விடுதலை என்ற பிரச்சினை கல்வி என்ற விடயத்துக்கு அப்பாலும் நீடித்தது. இல்லங்களிலும் அரசியல் துறைகளிலும் அவர்களது அந்தஸ்து பற்றி சஞ்சிகைகள், இலக்கியம், நாடகம் போன்றவற்றில் விரிவாக ஆராயப்பட்டது. இந்தக் கலந்துரையாடல்களில் பிரபல்யமான அறிஞர் பெருமக்களும் சம்பந்தப்பட்டார்கள். 1910ஆம் ஆண்டில் பெண்களின் வாக்குரிமைக்கு ஆதரவு தெரிவித்த *இஸ்லாத்தில் பெண்ணியம்* என்ற நூலை ஹலீல் ஹமீட் வெளியிட்டார். 1915ஆம் ஆண்டில் செலால் நூரி *எமது பெண்கள்* என்ற நூலைப் பிரசுரித்தார். அவர் அதில் பலதார மணத்தைத் தடை செய்ய வேண்டும் என்று குரல் எழுப்பினார். பாரிஸில் கல்வி கற்று, அந்தக் காலகட்டத்தின் போது பிரபல அரசியல்வாதியாகவும் அறிஞராகவும் விளங்கிய அஹ்மட் அகேக்லு, பெண்களின் உரிமைகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்ததுடன் தனது மகள் சுரேயாவை துருக்கியின் முதலாவது பெண் சட்டத்தரணியாவதற்கு





ஊக்குவித்தார். முஸ்லிம் நாடுகளின் ஏனைய பல அறிவுத் துறையினரைப் போலவே அகேக்லுவும் பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுவதை பிற்போக்கு நிலையுடன் தொடர்புபடுத்தினார். 'திரித்துக் கூறுதல்கள் அகற்றப்பட்ட தூய்மையான இஸ்லாத்தின் கோட்பாடுகளுக்கு அமைய பெண்களுக்குரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும்' என்று அவர் கோரிக்கை விடுத்தார் (Minai 1981 : 48).

நாட்டின் புகழ் பெற்ற எழுத்தாளரும் சமூகவியலாளருமான ஸியா கோகால்ப் (1876-1924) துருக்கியத் தேசியவாதத்தின் தத்துவவியலாளர் என்று அடிக்கடி குறிப்பிடப்பட்டவர் ஆவார். அவர் 1915ம் ஆண்டளவில் எழுதும் போது திருமணம், விவாகரத்து, பெண்களுக்குரிய அந்தஸ்த்து ஆகியவற்றில் சமத்துவத்தை ஆதரித்தார் (Abadan-Unat 1981 : 9). மத்திய ஆசியாவில் சுதந்திர நாடோடிகள், பெண்களின் விடுதலை என்பதை, ஆரம்பகாலத் துருக்கியப் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக அனுபவித்துள்ளனர் என்றும் அவர் வாதிட்டார் (Minai 1981 : 48). கவிதையில் கோகால்ப் தன்னை வெளிப்படுத்தும் போது பின்வருமாறு எழுதினார்:

> *மணமும் மணமுறிவும் செல்வமும் அனைவர்க்கும் சமம்*
> *எந்தவொரு தேசமும் தனது புதல்விகளுக்குரிய மதிப்பையும்*
> *மாண்பையும் வழங்காமல் ஒருபோதும் மலர்ச்சியடையாது.*
> *நாம் எம்முடைய ஏனைய எல்லா உரிமைகளுக்காகவும்*
> *போராட்டம் நடத்தி வெற்றி கண்டுள்ளோம் - ஆனால்*
> *குடும்பமே இன்னும் இருண்ட யுகத்தில் இருக்கிறது.*
> *பெண்களைப் பார்த்து நாம் ஏன் முகத்தைத் திருப்புகிறோம்?*
> *கூறுக? அவர்கள் எமது போராட்டங்களில்*
> *ஒரு பகுதியினரல்லவோ?*

பெண்களின் பங்கு பற்றி அறிவுஜீவிகள், சீர்திருத்தவாதிகளின் வட்டாரங்களில் ஆர்வத்துடன் விவாதிக்கப்பட்ட இந்தக் காலகட்டத்தில் பெண்ணியம் சார்ந்த செய்தியேடுகளும் மலர்ச்சியடைந்தன. 1908க்கும் 1919க்கும் இடையே பெண்களுக்கான ஒன்பது செய்தித்தாள்கள் வெளியாகின. இவற்றில் சில பிரெஞ்சு மொழியிலும், சில துருக்கிய மொழியிலும் வெளியிடப்பட்டன. கல்வி கற்ற பெண்களின் தேவைகளை இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றின. நபிகள் நாயகத்தின் (ஸல்) காலத்தில் பெண்களுக்கு இருந்ததாகக் கூறப்படும் சுதந்திரத்தை அவை எடுத்துக் காட்டின. துருக்கியில் பெண் விடுதலையை ஆதரித்த இவை தமது மேலைத்தேய பாரபட்சங்களாலும், ஐரோப்பிய பெண்ணிய இயக்கங்கள் பற்றிய அறிவினாலும் ஊக்குவிக்கப்பட்டன.

> "துருக்கியப் பெண்களின் தேவைக்கேற்ப மேலைத்தேயக் கருத்துக்களை விளக்கிக் கூறிய இந்தச் செய்தித்தாள்கள் வாசகர்களை ஐக்கியப்படுத்தும் ஓர் அரங்கமாகவும் மாறின. தனது விரக்தியிலும் குழப்ப நிலையிலும் தனித்திருப்பதாகவே நினைத்தவர்களை இவை ஐக்கியப்படுத்தின. இந்தப் பெண்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பத்தை ஆர்வத்துடன் ஏற்றுக் கொண்டனர். அவர்களில் ஒருவர் "பெண்ணாக இருப்பதில் நான் முதல் தடவையாகப் பெருமை கொள்கிறேன்." என்று எழுதினார் (Minai 1981 : 61)

இந்த நூற்றாண்டின் ஆரம்பம் முதல், துருக்கியப் பெண்கள் நாட்டின் சமூக, அரசியல், பொருளாதார வாழ்விலும், கல்வியிலும், ஊடகத்துறையிலும் செயலூக்கமுள்ளவர்கள் ஆனார்கள். 1908ஆம் ஆண்டு சுல்தான் பதவி கவிழ்க்கப்பட்டமை அவர்களின் நடவடிக்கைகளுக்கு உந்துசக்தியாகியது. அந்த ஆண்டில் சலோனிக்காவில் பெண்களுக்கான முதலாவது மன்றம் *சிவப்பும் வெள்ளையும்* (இளம் துருக்கியர்களின் நிறம்) என்ற பெயருடன் உருவாக்கப்பட்டது. கதிரியே இஹ்சானின் தலைமையிலான *பெண்கள் மேம்பாட்டுச் சங்கம்*, நூரியே உல்வியே மெவ்லானின் தலைமையில் கடும்போக்குக் கொண்ட *உதுமான் பெண்கள் உரிமைகள் பாதுகாப்புச் சங்கம்* ஆகியன அக்காலப்பகுதியில் உருவான பெண்கள் அமைப்புக்களில் அடங்கும். மெவ்லான் 1913ஆம் ஆண்டில் *பெண்கள் உலகம்* என்ற சஞ்சிகையையும் ஆரம்பித்தார் (Abadan-Unat 1981 :7-8).

இந்தக் காலப்பகுதியில் துருக்கியப் புத்திஜீவிகள் மத்தியில் அறிவுத்துறை மற்றும் கலாசார நடவடிக்கைகள் புத்துயிர் பெற்றன. ஸியா கோகால்ப் 1912இல் வெளியிட்ட *துர்க் யுர்து* (துருக்கியத் தாயகம்) சஞ்சிகை துருக்கியத் தேசியவாதிகளை அணிதிரட்டியது. 1912ஆம் ஆண்டில் *துர்க் ஒசாஜி* (துருக்கிய உலை) என்ற இயக்கமும் இதனுடன் இணைந்து கொண்டது. இந்த இயக்கம் தேசியக் கல்வியை முன்னேற்றவும் இஸ்லாமிய இனங்களினிடையே முன்னணியில் திகழ்ந்த துருக்கியர்களின் விஞ்ஞான, சமூக, பொருளாதார மட்டத்தை உயர்த்தவும், துருக்கிய இனத்தினதும் மொழியினதும் மேம்பாட்டுக்காக பாடுபடுவதற்காகவும் உருவாக்கப்பட்டது.





இது போன்ற மன்றங்கள் பல, நாடு முழுவதிலும் உருவாக்கப்பட்டன. விவாதம், கல்வி, இலக்கியச் செயற்பாடுகளுக்கு அவை கேந்திரங்களாகின. இந்தக் கூட்டங்களில் ஆண்களுடன் சமமானவர்களாகப் பெண்களும் பங்குபற்றினர். முதல் தடவையாக அவர்கள் பகிரங்க மேடையில் தோன்றினர். தொழில்முறை சாராத நாடகங்களில் பங்கேற்றனர் (Lewis 1965 : 344).

பெண்களின் விடுதலை பற்றிய பிரச்சினையானது, இளம் துருக்கியர் இயக்கத்தின் சித்தாந்தத்துக்குப் பொதுவாக இசைவுபடும் வகையில் இஸ்லாம் மற்றும் துருக்கியத் தேசியவாதம் என்பன முன்வைத்த வரம்புகளுக்குள் விவாதிக்கப்பட்டது. பெண்களின் உரிமைகளை ஆதரித்தவர்கள் இஸ்லாமியப் போதனைகளை மீளப் பொருளுரைத்து, அதன் அடிப்படையில் தமது வாதங்களை முன்வைத்தனர். பெரும்பாலும் இஸ்லாம் பற்றிய பலவிதமான தவறான விளக்கங்களின் காரணமாக, உதுமான் சாம்ராஜ்யத்தில் பெண்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன என்று வாதிக்கப்பட்டது. ஸியா கோகல்ப் கூட பெண்களின் விடுதலைக்கான தனது வாதங்களை, துருக்கிய இனத்தின் நாடோடி மூதாதையர்களின் சூழமைவில் காண முற்பட்டார். இவ்விதம் நவீனமாக்கப்படும் சமுதாயத்தின் தேவைகளுக்கேற்ப பெண்களின் உரிமைகள் மற்றும் பெண்களின் பங்கேற்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட உந்து சக்திகளுக்கு, சட்ட பூர்வத் தன்மை வழங்கு முகமாக, சமய மற்றும் தேசியவாதப் பாரம்பரியங்கள் மேற்கோள்ளப்பட்டன.

## கெமால்வாதிகளின் புரட்சி

துருக்கியத் தேசியவாதிகளின் தலைவர் முஸ்தபா கெமால் (1881-1938) ஒரு இராணுவத் தளபதி. முதலாம் உலகப் போரில் துருக்கிய இராணுவத்தில் இருந்து போராடியவர். அவர், தோல்வியை ஏற்கும் பண்பியலைக் கொண்ட சுல்தானின் கொள்கைகளை எதிர்த்து, 1920ஆம் ஆண்டில் அங்காராவில் ஒரு புரட்சிகர அரசாங்கத்தை அமைத்தார். துருக்கியின் பகுதிகளை ஆக்கிரமித்திருந்த பிரெஞ்சு, இத்தாலிய, கிரேக்க, பிரிட்டிஷ் படைகள் அவற்றை விட்டு வெளியேறுவதற்கு கெமாலின் படையினர் நிர்ப்பந்தித்தனர். 1922ஆம் ஆண்டில் பிரிட்டிஷாருடன் சமாதான உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டது. இதைத் தொடர்ந்து சுல்தானின் ராஜ்யம் ஒழித்துக் கட்டப்பட்டு, 1923இல் துருக்கியக் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது. 'குடியரசு மக்கள் கட்சி'யின் தலைவரான கெமால் இந்தக் குடியரசின் ஜனாதிபதியானார். 1938ஆம் ஆண்டு அவர் காலமாகும் வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதியாக இருந்தார்.

முஸ்தபா கெமால், (அட்டாதுர்க், அதாவது "துருக்கியர்களின் பிதா" என்று பின்னர் அழைக்கப்பட்டார்) மேலும் விடாமுயற்சியுடன் ஐரோப்பிய மயமாக்கத்தை ஆரம்பித்தார். இது முதலாளித்துவப் பாணியிலான பொருளாதார வளர்ச்சி என்ற கருத்தை மட்டும் குறிக்கவில்லை. மாறாக, மதத்திலிருந்து அரசியலைப் பிரிப்பது, பாரம்பரியத்தை கண்டனம் செய்வது, அரிச்சுவடியை லத்தீன் மயமாக்குவது, ஐரோப்பிய நடையுடை பாவனையை ஊக்குவிப்பது, மேற்கு நாட்டு நாட்காட்டியை அங்கீகரிப்பது, சிவில் திருமணங்களையும் விவாக முறிவையும் அறிமுகப்படுத்துவது, பலதார மணத்தைத் தடை செய்வது ஆகியவற்றின் மூலம் ஓர் நவீனமாக்கப்பட்ட மதச்சார்பற்ற அரசை நிறுவும் முயற்சியாகவும் அது இருந்தது.

ஆரம்ப காலகட்டத்தில் துருக்கியில் நிலவிய ஐரோப்பிய மயமாக்கம் என்ற கருத்துவெறி பிற்காலத்தில் புதிய சித்தாந்தவியலின் ஒரு அங்கமாகியது. ஐரோப்பியர்களாக இருப்பது என்பது, 'நாகரிகம் அடைதல்' என்பதுடன் சமப்படுத்தப்பட்டது. துருக்கியின் 'பின்தங்கிய நிலைமை' மேற்கத்தைய 'முன்னேற்றத்துடன்' ஒப்பிட்டுக் காட்டப்பட்டது. அந்த நாட்டின் தலைசிறந்த தேசியவாதியும், அறிவுஜீவியுமான ஸியா கோகால்ப் துருக்கியர்கள் "துருக்கிய தேசத்தையும், முஸ்லிம் மதத்தையும், ஐரோப்பிய நாகரிகத்தையும்" சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இதே போன்று மற்றுமொரு துருக்கிய எழுத்தாளரான சத்ரி ஈட்டம் இப்படி வலியுறுத்தினார். "நாம் ஐரோப்பியர்கள், ஐரோப்பியர்களாக இருப்பது எமது இலட்சியம்" (Rodinson 1974 : 127). ஐரோப்பியர்களாக இருப்பது என்பது, முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையை பின்பற்றுவதையும் பொருள்படுத்தியது. தொழிலதிபர்கள் இல்லாத நிலையில் முதலாளித்துவ வளர்ச்சிக்கு வழிவகுக்கும் பொருட்டு தொழில்துறையை அபிவிருத்தி செய்யும் கடமையை அரசே ஏற்க வேண்டி இருந்தது. 1923இல் கோகால்ப் பின்வருமாறு எழுதினார்:

> புதிய துருக்கி நவீன அரசாக விளங்க வேண்டுமானால் அது யாவற்றுக்கும் மேலாக ஒரு தேசிய தொழிற்துறையை விருத்தி செய்தாக வேண்டும். இராணுவத் தொழில் நுட்பத் துறையில் நாம் சாதித்ததைப் போலவே தேசிய அளவில் மேற்கொள்ளப்படும் முயற்சியின் மூலம் நாம் தொழில்துறையிலும் ஐரோப்பிய மட்டங்களை அடைந்தாக வேண்டும் (Rodinson 1974 : 126)





முதலாளித்துவப் பாதையில் தேசியப் பொருளாதாரம் கட்டி எழுப்பப்படுவதை ஊக்குவிப்பது பரிந்துரைக்கப்பட்டது. இந்த முயற்சியின் மூலம் முக்கிய பயனடைந்தோர், வர்த்தகத்தில் ஈடுபட்ட நடுத்தரவர்க்க முதலாளித்துவவாதிகளே. யுத்த காலத்தின் போது இவர்கள் நிரம்பி வழியுமளவிற்கு செல்வத்தைக் குவித்துக் கொண்டாலும் கூட, துருக்கிய சமுதாயத்தில் இந்த வர்க்கம் நன்கு வளர்ச்சி அடைந்திருக்கவில்லை. வர்த்தக நோக்குடைய சில்லறை முதலாளித்துவத்திற்கே உரியதான தடங்கல்கள், பொருளாதாரத்தைப் பாதித்த போது ஓர் மீள் விநியோக மையமாக மீண்டும் செயல்படும் பொருட்டு அரசு அதிற் தலையீடு செய்தது. அது மேலதிகப் பண்டங்களைச் சேகரித்து, தேசிய பொருளாதாரம் பற்றிய தனது சொந்தக் கருத்தமைப்புக்கமைய விற்பனையை மேற்கொண்டது (Keyder 1979 : 11).

1926ஆம் ஆண்டு இஸ்லாமிய ஷரியாத் சட்டம் ஒழித்துக் கட்டப்பட்டதைத் தொடர்ந்து, துருக்கிய அரசு முழுமையாக மதச்சார்பற்ற தாகியது. இதன் மூலம் சிவில் மற்றும் குற்றவியல் சட்டங்கள் என்பன மதச் செல்வாக்கின் இறுதி மிச்சமீதங்களில் இருந்து விடுவிக்கப்பட்டன. அநேக மான ஆசிய நாடுகளைப் போலவே துருக்கியிலும் மதகுருமார்கள் பிற்போக்குச் சிந்தனை கொண்டவர்களாகவும், ஊழல்மிகு நிலப்பிரபுத்துவ ஆட்சிகளுக்கு ஆதரவு அளிப்பவர்களாகவும் காணப்பட்டார்கள். இது தேசியவாதத்தின் வளர்ச்சிக்கோ, முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கோ அல்லது சமூக அமைப்பு முறைகளுக்கு அவசியமான மேல்கட்டமைப்புச் சீர்திருத்தங்களுக்கோ - அதாவது பெண்களின் விடுதலைக்கான நடவடிக் கைகள் போன்றவற்றிற்கு இசைவானதாக அமையவில்லை. மதச்சார்பின்மை, பகுத்தறிவுவாதம் ஆகியவை தொடர் பான போக்கு இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இளம் துருக்கியர் இயக்கத்தில் மாத்திரமன்றி, 1920ஆம் ஆண்டுகளின் போது முஸ்தபா கெமாலின் சீர்திருத்தங்கள் பலவற்றிலும் காணப்பட்டது. இது ஈரான், ஆப்கானிஸ்தான் மற்றும் பிற முஸ்லிம் நாடுகளின் கொள்கைகளிலும் செல்வாக்குச் செலுத்தியது. 1930ஆம் ஆண்டு முஸ்தபா கெமால், மதச்சார்பின்மையானது முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறினார்.

> துருக்கியக் குடியரசிற்கு உத்தியோகபூர்வ மதம் என்றொன்றில்லை. விஞ்ஞானமும் சமகால நாகரிகமும் அவசியமெனக் கருதும் காரணத் தொடர்பு, முன்மாதிரி, எச்சூழலுக்கும் பொருந்தும் தன்மை என்பனவற்றின் அடிப்படையிலேயே அரச கருமங்களுக்குரிய சகல சட்டங்களும் வரையப்பட்டு பிரயோகிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம் என்பது சொந்த நம்பிக்கையின்பாற்பட்ட ஒரு விடயம் என்பதால், எமது நாட்டின் முன்னேற்றத்திற்காக மதக்கருத்துக்களையும் அரசு விவகாரங்களையும் பிரித்தெடுப்பதை முக்கிய அம்சமாகக் குடியரசு கருதுகின்றது (Aksan 1981 : 49)

ஆயினும் சிறுபான்மையினர், இடதுசாரிகள் ஆகியோரின் மாறுபட்ட கருத்துக்களைக் கெமால் வீறுடன் அடக்கினார். 1925ஆம் ஆண்டு குர்தீஷியர்கள் கலகம் செய்த போது, இந்தச் சிறுபான்மையினரின் எழுச்சியை மாத்திரமன்றி, இடதுசாரிகள் உட்பட, தனது ஆட்சிக்கு இருந்து வந்த எதிர்ப்புகள் சகலவற்றையும் ஒடுக்கினார். தனது ஆட்சியின் ஆரம்ப காலத்தில் இருந்தே கெமால், சோவியத் யூனியனுடன் நட்புறவுக் கொள்கையைப் பேணிக் கொண்ட அதேவேளை இடதுசாரிகளையும் ஒழித்துக்கட்ட முயன்றார். துருக்கிய கம்யூனிஸ்ட் கட்சி 1920ஆம் ஆண்டில் சோவியத் யூனியனில் ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு முஸ்தபா சூஃபி தலைமை தாங்கினார். எவ்வாறாயினும் இக்கட்சி வளர்ச்சி பெறமுன்னமேயே - 'கெமால் அட்டாதுர்க்கினது சுதந்திர இயக்கத்தின் முன்கூட்டிய வெற்றி காரணமாக துருக்கிய கம்யூனிஸம், பிரசவத்தின் போதே நசுக்கப்பட்டு விட்டது' (Samin 1981 : 64-5). இத்தகைய எதிர்ப்பை ஒழித்துக்கட்ட கெமால் தயங்கவில்லை.

கிராம ஆட்சியாளர்களிடமிருந்து அதிகாரத்தைப் பறித்தெடுப்பதை நோக்கமாகக் கொண்ட, விவசாயக் குடிமக்களின் கெரில்லாப்படையான "பசுமை இராணுவம்" ஆரம்பத்தில் கெமாலுடன் இணைந்திருந்தது. ஆனால் கெமாலின் படைகள் 1921ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பசுமை இராணுவத்தை நசுக்கின. அதே மாதம் துருக்கிக்கு விஜயம் செய்யும்படி சூஃபியும் ஏனைய துருக்கியக் கம்யூனிஸ்டுகளும் சூழ்ச்சியாக அழைக்கப்பட்டு நீரில் மூழ்கடித்துக் கொல்லப்பட்டனர். சாமினின் கூற்றுப்படி, 'இவ்விதம் துருக்கியில் கம்யூனிஸத்தை ஸ்தாபித்தவர்களும், வர்க்கம் சார்பான தீவிரக் கிளர்ச்சியாளர்களும், சில வாரங்களுக்குள் சாய்க்கப்பட்டார்கள்.' அவர் மேலும் கூறுவதாவது, 'அட்டாதுர்க்கின் ஆட்சி "பொனபார்ட்டிஸ்ட்" பண்பைக் கொண்டது, அதாவது அது பழமைகளைக் குவித்தெடுத்து ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு அரசமுறை ஆகும். துருக்கிய கம்யூனிஸ்டுகள், இவ்விதமாக அதை இனங்காணுவதை விடுத்து, கெமாலிஸ்ட் இயக்கத்தை தீவிரப்போக்குக் கொண்ட திசைகளில் திருப்பக்கூடிய ஓர் சிறு- நடுத்தர வர்க்க முதலாளித்துவ அணி என்ற கண்ணோட்டத்துடன் பார்ப்பதையே வலியுறுத்தினார்கள். உண்மையாகவே பார்க்கப் போனால், அட்டாதுர்க் வாதம் கம்யூனிஸ்டுகளைப் பயன்படுத்திக் கொண்டதேயன்றி நேர்மாறாக அல்ல. இதைத் தொடர்ந்த





ஆண்டுகளின் போது இடதுசாரியைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் உண்மையிலேயே ஓர் அரசியல் பாத்திரத்தை வகித்தார்கள். 'துருக்கியின் மஹாகவி'யான நஸீம் ஹிஹ்மெத் 1930ஆம் ஆண்டுகளில் இருந்து கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக விளங்கியவர். நவீன துருக்கியக் கலாசாரத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பு யாவும் 'சோஷலிஸ்ட் அல்லது இடதுசாரி வெகுஜனவாதத் தன்மை'யைக் கொண்டிருந்தன (Samin 1981 : 64-5). தனது அரசியல் கருத்துகளுக்காக விசாரணை செய்யப்பட்டு 1938ஆம் ஆண்டு சிறையிலடைக்கப்பட்ட ஹிஹ்மெத், பெண்களின் சமத்துவத்திற்குச் சார்பான உணர்வுகளை வெளிப்படுத்தினார். 'நட்புறவு, ஒருமைப்பாடு போன்ற பண்புகளைப் பெற்றவர்கள் பெண்கள், என்று கூறிய முதலாவது துருக்கிய கவிஞர் இவர் தான்' (Altiok 1981 : 224).

## கெமாலும் பெண் விடுதலையும்

துருக்கியை நவீனமாக்குவது சம்பந்தமான முஸ்தபா கெமாலின் தொலைநோக்கானது, மரபுக் கோட்பாட்டின் கொடும் விலங்குகளில் இருந்து பெண்களை விடுதலை செய்வதையே முக்கியமான அம்சமாகக் கொண்டிருந்தது. போல்கன் யுத்தங்களின் போதும் முதலாவது உலக மகா யுத்தத்தின் போதும் துருக்கியப் பெண்கள் காட்டிய துணிவு, தீவிரம் ஆகியவற்றினால் அவர் பெரிதும் ஈர்க்கப்பட்டிருந்தார். துருக்கியப் பெண்கள் அப்போது பொதுச்சேவைத் தொழில்களில் புதிய பொறுப்புக்களை ஏற்றிருந்தார்கள், யுத்த முனைகளில் தாதிகளாகப் பணி புரிந்தனர். ஆயுத, உணவு மற்றும் ஆடைத் தொழிற்சாலைகளிலும், வங்கிகளிலும், மருத்துவமனைகளிலும் நிர்வாக சேவைகளிலும் பணி புரிந்தனர். அரசியல் நிகழ்வுகள் அவர்களைத் தீவிரவாத நடவடிக்கைகளிலும் ஈடுபாடு கொள்ளச் செய்தன. உதாரணமாக 1919ஆம் ஆண்டு ஐரோப்பியத் துருப்புக்கள், துருக்கியின் பல்வேறு பகுதிகளை ஆக்கிரமித்திருந்த வேளையில் கண்டனங்கள் எழுந்தன. இவற்றில் பெண்களும் சேர்ந்து கொண்டார்கள். ஆக்கிரமிப்பாளர் களிற்கு எதிராக யுத்தத்தை ஆரம்பித்திருந்த முஸ்தபா கெமாலின் சேனையில் அனற்றோலியப் பெண்களும் பங்கேற்றனர். 1919ஆம் ஆண்டு *தேசபக்த பாதுகாப்புக்கான அனற்றோலிய பெண்கள் சங்கம்* பல்வேறு கிளைகளுடன் உருவாக்கப்பட்டது. 'முஸ்தபா கெமாலின் அதிகாரிகள், படைவீரர்கள், வர்த்தகர்கள் அடங்கிய மையக்குழுவினது பெண்கள் பிரிவினராக அவை விளங்கின' (Abadan-Unat 1981 : 10).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெமால் பிற்காலங்களில் ஆற்றிய உரைகளில், அனற்றோலியப் பெண்கள் தேசிய போராட்டங்களில் ஆற்றிய பங்கை இடையறாது குறிப்பிட்டு வந்தார். 1923இல் கொன்யாவில் "துருக்கியப் பெண்" பற்றி ஆற்றிய உரையில் அவர் இப்படிச் சொன்னார்:

> அனற்றோலியப் பெண் இந்தப் புடமிடப்பட்ட பரித்தியாகச் செயல்களில் தனது பங்கைப் பெற்றிருக்கிறாள். நாம் ஒவ்வொருவரும் அவளை நன்றியுடன் நினைவிற் கொள்ள வேண்டும். அனற்றோலிய விவசாயக்குடிப் பெண்களின் தீவிரமான முயற்சிகளைப் போல உலகின் வேறெந்தப் பாகத்திலும் அவை மேற்கொள்ளப் படவேயில்லை.
>
> பெண், ஜீவசக்தி மிக்க இயங்காற்றலின் ஊற்றுக்கண். வயல்களை உழுதவர் யார்? அவள் தான். தானியத்தை விதைத்தவர் யார்? அவள் தான். மரம் வெட்டுபவளாகிக் கோடரியைக் கையில் ஏந்தியது யார்? அவள் தான். வீட்டிலே அடுப்பை எரியச் செய்தது யார்? அவள் தான். மழை என்றும் காற்றென்றும் பாராமல், குளிரோ உஷ்ணமோ என்றும் பாராமல் போர் முனைக்கு ஆயுதங்களைச் சுமந்து சென்றது யார்? அவள் தான். திரும்பவும் திரும்பவும் அவள் தான் செய்தாள். அனற்றோலியப் பெண், அவளது அர்ப்பணிப்பில் தெய்வீகமானவள்.
>
> எனவே இந்தத் துணிவுமிக்க தன்னலமற்ற பெண்களைக் கௌரவிப்போம். எம்முடைய எல்லாச் சமூகப் பணியிலும் எம்முடைய பங்காளிகளாக ஏற்றுக் கொள்ளவும், அவளுடன் வாழவும், விஞ்ஞான, தார்மீக, சமூக, பொருளாதார முயற்சிகளில் அவளை எமது தோழியாக்கவும் நாம் உறுதியளித்தாக வேண்டும். இது தான் நாம் செல்ல வேண்டிய பாதையென நான் நம்புகின்றேன் (Atatürk).

சமுதாயத்தில் பெண்களின் நிலை சம்பந்தமான கெமாலின் கருத்துக்கள் முன்னேற்றகரமானவை. 1923ஆம் ஆண்டு இஸ்மிரில் அவர் உரையாற்றும் போது 'ஒரு பாலைச் சேர்ந்தவர்கள் உயர்ந்தவர்களாகக் கருதும் நாகரிகம் முடமானது என்று கூறி, அதை அவ்வப்போதே கண்டிக்க வேண்டும்' என்றார். முன்னே செல்லவும் முன்னேற்றங் காணவும் தீர்மானித்துவிட்ட மக்களினம் இதைக் கூடிய விரைவில் உணர்ந்து கொள்ள வேண்டும். பெண்களின் கதி பற்றி நாம் மௌனித்திருந்த காரணத்தினால் தான் கடந்த காலங்களில் நாம் தோல்வியடைந்தோம் (Atatürk).

இந்த விடயம் பற்றி அவர் தனது உரைகளில் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தார். பெண் சமத்துவம் பற்றிய கருத்துக்களைப் பரப்புவதில் அவர் தளர்ந்ததில்லை. கஸ்தமொனு என்ற இடத்தில் உரையாற்றிய அவர்:





> நாம் வெளிப்படையாக் கூறப்போனால், சமுதாயம் என்பது பெண்களையும் ஆண்களையும் கொண்டு உருவானது. ஒரு தரப்பாரிற்கு முன்னேற்றத்திற்கான எல்லா உரிமைகளையும் வழங்கி, மறுதரப்பாருக்கு எந்த உரிமைகளையும் வழங்காவிட்டால் என்ன நடக்கிறது? மக்களில் ஒரு பகுதியினர் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்க, மற்றவர்கள் வானத்தை அளப்பது சாத்தியமா? பொதுவான முயற்சி மூலமே முன்னேற்றம் சாத்தியம். அப்போது மாத்திரமே பல்வேறு கட்டங்களைத் தாண்டி நாம் முன்னேற்றங்காண முடியும் (Atatürk).

ஒரு புறத்தில் முற்போக்குக் கருத்துக்களைக் கெமால் கொண்டிருந்தாலுங்கூட, தாய்மையின் முக்கியத்துவத்தை அவர் இடையறாது வலியுறுத்தி வந்தார். 1923ஆம் ஆண்டு அவர் இப்படிச் சொன்னார்:

> எமது அன்னையரும் பாட்டிமாரும் காட்டி வந்துள்ள மகத்தான நற்பண்புகளை வரலாறு எடுத்துக் கூறுகின்றது. இவற்றில் ஒன்று, இனத்துக்குப் பெருமை தரக்கூடிய புத்திரர்களை வளர்த்து ஆளாக்குவதாகும். ஆசியாவிலும் உலகத்தின் மூலை முடுக்குகளிலும் புகழ் பரவப் பெற்றவர்களுக்குப் பெரும் நற்பண்பு கொண்ட தாய்மார்களே துணிவையும், சத்தியத்தையும் போதித்தார்கள். பெண்ணுக்குரிய சமூகப் பொறுப்புக்கள் தவிரவும், அவள் ஒரு நல்ல அன்னையாக இருப்பது அவளின் முக்கியமான கடமை எனத் திரும்பத் திரும்பக் கூறுவதில் இருந்து நான் ஓயப் போவதில்லை. காலவோட்டத்தில் ஒருவர் முன்னேறுகின்ற வேளையில், நாகரிகம் அதன் பிரமாண்டமான காலடிகளை எடுத்து வைக்கின்ற போது, நூற்றாண்டின் தேவைகளுக்கு ஏற்ப தமது பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குவது தாய்மாருக்கு இன்றியமையாத கடமையாகும் (Atatürk).

ஆனால், தமக்குச் சமதையான "நாகரிக" கண்ணோட்டத்தைக் கொண்டவர்களையும், தோற்றத்தில் நவீனமானவர்களாக இருப்பவர்களையுமே மேற்கத்தையமயமான துருக்கியர்கள், மனைவியராகக் கொள்ளல் வேண்டுமென்பதிலும், கெமால் விடாப்பிடியாக இருந்தார். அவரது மனைவி லதிஃபே ஹனெம் (அவரை அட்டாதுர்க் மணம் முடித்துப் பின்னர் 1920ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் விவாகரத்துச் செய்தார்.) பிரிட்டனிலும் பிரான்ஸிலும் கல்வி கற்றவர். பொது வைபவங்களில் முக்காடு இல்லாமலேயே அவருடன் தோன்றினார்.

இந்தக் கருத்திற்கு இசைவாக கெமால் பெண்களுக்கான ஒரு நவீன மதச்சார்பற்ற கல்வி இயக்கத்தின் ஆதரவாளராக விளங்கினார். பெண்கள் கல்வியறிவற்றவர்களாக இருந்தால் சமுதாயம் திறமையுடன் செயற்பட முடியாது என்று அவர் வாதிட்டார். 'ஒரு சமூக அமைப்பின் சில பேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடிப்போடும் ஏனையோர் செயலற்றும் இருந்தால் அந்தச் சமூக அமைப்பு முடங்கிப் போய் விடுகின்றது'. துருக்கி ஒரு பலம் வாய்ந்த நவீன நாடாக வேண்டுமேயானால் பெண் கல்வி இன்றியமையாதது. ஏனெனில், குழந்தைகள் தமது அன்னையர்களிடமிருந்தே தமது முதல் பாடங்களைக் கற்கின்றனர். எனவே எமது பெண்கள் கூடுதல் அறிவு பெற்றவர்களாக, ஆண்களை விடவும் கூடுதல் நாகரிகம் உள்ளவர்களாக, ஞானமுள்ளவர்களாக இருக்கக் கடமைப்பட்டவர்கள் என்று அவர் கூறினார் (UNESCO 1963 : 45-50). அவருடைய பிரசார இயக்கம் பெண்களுக்கான கல்வி வாய்ப்புக்களை விஸ்தரித்தன. 1921ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தில் கூட்டுக்கல்வி அனுமதிக்கப்பட்டது. 1924ஆம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு கல்விச் சட்டமூலமானது, மதப்பாடசாலைகளை அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. கல்வியை மதச்சார்பற்றதாக்கியது. இருபாலாருக்கும் சமமான கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தது. இந்த நடவடிக்கைகள் செயற்படுத்தும் போது அதற்கு எதிர்ப்புகள் இருந்தன. 1921ஆம் ஆண்டில் ஆண், பெண் ஆசிரியர்கள் கலந்து கொண்ட ஆசிரியர் மகாநாட்டைக் கூட்டியமைக்காக, தேசியப் பேரவையில் கண்டிக்கப்பட்ட கல்வி அமைச்சர், கட்டாயத்தின் பேரில் பதவி விலக நேர்ந்தது (Toprek 1981 : 286-7). ஆயினும் இந்த நடவடிக்கைகளினால் சில பெண்கள் நன்மை அடைந்தார்கள். துருக்கியின் முதலாவது பெண் மருத்துவர் சாஃபியே அலி 1922ஆம் ஆண்டு இஸ்தான்புல்லில் சிகிச்சை நிலையம் ஒன்றை ஆரம்பித்தார். 1930ஆம் ஆண்டுகளில் மேலும் பலர் வருமானம் அதிகமுள்ள தொழில்களில் ஈடுபட்டனர். ஆனால் துருக்கியில், பெண்களுக்கான கல்வி, வர்க்கத்தின் பிடிக்குள் கட்டுண்டு இருந்ததுடன் மிகவும் சமதையற்று இருந்தது. 1970ஆம் ஆண்டுகளில் சட்டத்தொழிலில் 20 சதவீதமானோரும், மருத்துவத்தில் 17 சதவீதமானோரும் பெண்களாக இருந்தனர். அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் பல ஐரோப்பிய நாடுகளை விட இந்தச் சதவிகிதம் அதிகமானது. இருந்த போதிலும் துருக்கியப் பெண்களின் பொதுவான கல்வியறிவு 52 சதவீதமாகவே இருந்தது (Öncü 1981 : 181).

சுவிஸ் நாட்டின் முன்மாதிரியை அடிப்படையாகக் கொண்டு 1926இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சிவில் சட்டக்கோவை கெமாலின் காலத்து மற்றுமோர் சீர்திருத்தம் ஆகும். இது பெண்களுக்குப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. புதிய சட்டத்தின்படி பலதார மணம் சட்ட விரோதமானதாகப் பிரகடனம் செய்யப்பட்டது. விவாகரத்து, பிள்ளைகளின் பாதுகாப்பு, சொத்து ஆகியன சம்பந்தமாக பெண்களுக்குச் சம உரிமைகள்





வழங்கப்பட்டன. திருமணத்திற்கான குறைந்தபட்ச வயது ஆண்களுக்கு 18 ஆகவும் பெண்களுக்கு 17 ஆகவும் உயர்த்தப்பட்டது. மேலும், துணிகரமான விஷயம் என்னவெனில் முஸ்லிம் பெண் ஒருவர் முஸ்லிமல்லாதவரைச் சட்டபூர்வமாகத் திருமணம் செய்ய முடிந்தது. பராயமடைந்தவர்கள் தமது மதத்தை மாற்றிக் கொள்ள சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டார்கள். சாட்சியம் சம்பந்தமாகவும் பெண்களுக்கு நீதிமன்றம் சமத்துவம் வழங்கியது. முன்னர் இரண்டு பெண்களின் சாட்சியங்கள், ஒரு ஆணின் சாட்சியத்திற்குச் சமமாக இருந்தது. பெண்களுக்கு சொத்து, பொருள்கள் என்பவற்றின் பாகப்பிரிவினை, அத்துடன் அவர்களுக்கு தமது சொத்தை விரும்பியவாறு கையாளக்கூடிய உரிமை ஆகியனவும் அறிமுகப்படுத்தப்பட்டன (Abadan-Unat 1981 : 13-14).

இந்தச் சீர்திருத்தங்கள் அக்காலத்தில் பரபரப்பை ஏற்படுத்தின. முஸ்லிம்களின் சட்டக்கோவையான ஷரியாத் இருந்த இடத்தில் சிவில் சட்டக்கோவையை அறிமுகப்படுத்திய முதலாவது முஸ்லிம் நாடு துருக்கியாகும். கெமால் தனது உரைகளில் 'சமகாலத்து நாகரீகத்தின் மட்டத்தை அடைய வேண்டியதன் அவசியம்' பற்றிக் குறிப்பிட்டார். இதுவே மாற்றங்களை நியாயப்படுத்தும் கலந்துரையாடல்களுக்கு அடிப்படையாக இருந்தது. இந்தக் கோவையை அறிமுகப்படுத்திய நீதியமைச்சர் மஹ்மூத் எஸாத், 'துருக்கிய இனம் நவீன நாகரீகத்தையும் அதன் ஜீவவலுவுள்ள கோட்பாடுகளையும் எந்தவிதமான நிபந்தனையும் அல்லது தயக்கமும் இல்லாமல் ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்து விட்டது என்று கூறினார்' (Rodinson 1974 : 127). மற்றுமொரு பேச்சாளர் கூறுகையில், 'ஒரு தார மணம், விவாகரத்து உரிமை போன்ற கோட்பாடுகளை புதிய சட்டம் உள்ளடக்குவதால், அது நாகரிகமுற்ற உலகத்திற்குத் தேவையான கோட்பாடுகளை இணைக்கிறது என்றார்' (Öncü 1981 : 181).

நாட்டிற்குத் தேவைப்படுவது, கடவுளால் அருளப்பட்ட சமயச்சட்டத்தின் சீர்திருத்தம் அல்ல. ஆனால், அதற்குப் பதிலாக ஒரு புதிய குடும்பச் சட்டமே என்று கெமால் சுட்டிக்காட்டினார். 'நாகரிகத்தின் அடிப்படையும், முன்னேற்றம் மற்றும் அதிகாரத்தின் அடித்தளமும் குடும்ப வாழ்விலேயே உள்ளன என்று 1924ஆம் ஆண்டில் அவர் குறிப்பிட்டார். மோசமான குடும்ப வாழ்க்கை, சமூக, பொருளாதார, அரசியல் தளர்வுக்கு இட்டுச் செல்லும் என்றார் அவர்' (Lewis 1965 : 266-7). தம்மிடமிருந்து, குடும்பச் சட்டத்துறை அனைத்துமே பறிக்கப்பட்டுவிட்ட நிலையைத் தொடர்ந்து, சமய அதிகாரிகள் சட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனையில் மிகவும் மோசமான படுதோல்வியை அடைந்தனர். இந்தப் பழைமைவாதச் சக்திகளைச் சாடிய கெமால் 1925இல் இவ்வாறு கூறினார்:

> நவீன நாகரிகத்தின் வருமான மூலவளங்கள், பயன்கள் என்பவற்றிலிருந்து ஆதாயத்தைப் பெறுவதற்கு, துருக்கிய இனம் குறைந்தபட்சம் மூன்று நூற்றாண்டு களாக மேற்கொண்ட முயற்சிகள் யாவும், துயரார்ந்த, கொடிய தடைகளால் முறியடிக்கப்பட்டுள்ளன. இப்புரட்சிக்கு மிகப்பெரிய தடையாக சூழ்ச்சி நிறைந்த உள்ளோட்டமான எதிரிகளாக, பாழாய்ப்போன சட்டங்களும், அவற்றை ஆதரித்து ஊக்குவிக்கும் கிழடு கட்டைகளுமே இருந்தனர். பழைய சட்டமுறையின் அடித்தளத்தைத் தகர்த்தெறிந்து முற்றிலும் புதிய சட்டங்களை உருவாக்குவது எம்முடைய நோக்கம் ஆகும் (Lewis 1965 : 268-9).

இவ்வாறாக துருக்கியில் சட்டமுறை முழுவதுமே மாற்றப்பட்டது. புதிய வர்த்தக, கடல் துறை மற்றும் குற்றவியல் சட்டங்களுக்கு மேலதிகமாக ஒரு புதிய சிவில் சட்ட முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆயினும் இனமுறைச் சட்டத்தின் (Personal law) சீர்திருத்தங்கள், ஆணாதிக்க சமுதாய மரபுமுறை தொடர்வதற்கெதிராக சவால் விடுக்கவில்லை. உதாரணமாக கணவனே குடும்பத் தலைவனாக விளங்கினான். வீட்டு விவகாரங்களை அவனே தீர்மானித்தான். மனைவி அவனுக்குப் பணிய வேண்டியவளாகவே இருந்தாள். வீட்டிற்கு வெளியே சென்று தொழில் புரிய அவனுடைய ஒப்புதல் அவளுக்குத் தேவைப்பட்டது. கிராமப்புறத்தில் ஆட்சி செலுத்திய பாரம்பரியத்தின் வலுவை மாற்றுவதற்கு, இந்தப் புதிய சட்டங்கள் போதுமானவையல்ல என்பது நிரூபணமானது. இத்தகைய குறைபாடுகள் இருந்த போதிலும் இந்தச் சீர்திருத்தமானது 'பெண்களின் அந்தஸ்தைதப் பொறுத்த வரையில் முன்னோக்கி வைக்கப்பட்ட மகத்தான அடியெடுப்பாகும்' என்று துருக்கியப் பெண் அறிவுத்துறையினர் கூறுகின்றனர் (Tekeli 1981 : 297). 1930ம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலிலும், 1935ஆம் ஆண்டின் தேசியத் தேர்தலிலும் பெண்களும் வாக்களித்ததைக் கவனத்திற் கொள்ளும் போது இந்தச் சீர்திருத்தங்கள் நிச்சயமாகவே ஒரு முன்போக்கான முயற்சியே. 1935ஆம் ஆண்டுத் தேர்தலில் 18 பெண்கள் (பேரவையில் 4.5 சதவீதமானோர்) தெரிவு செய்யப்பட்டனர். அவ்வேளையில் ஐரோப்பாவிலேயே ஆகக்கூடுதலாகத் தெரிவு செய்யப்பட்டிருந்த பெண் பிரதிநிதிகள் இவர்களே. அதே சமயம் பிரான்ஸ், இத்தாலி உட்பட பல ஐரோப்பிய நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை கூட இருக்கவில்லை (Tekeli 1981 : 299).





## உடைச் சீர்திருத்தம்

உடைச் சீர்திருத்தம் புகுத்தப்பட்டமை முஸ்தபா கெமாலின் மேற்கு மயமாக்கற் கொள்கையைப் பூரணப்படுத்துவதற்கான ஒரு பகுதியாக இருந்தது. இதன் மூலம் நாட்டை "நாகரிகமாக்கவும்" கலிபாக்களின் மேலாதிக்கக் கட்டமைப்பின் சின்னங்கள் சிலவற்றை அழித்தொழிக்கவும் அவர் முயன்றார். உதாரணமாக 1828ஆம் ஆண்டிலே அறிமுகப் படுத்தப்பட்ட குல்லாய், உதுமான் சாம்ராஜ்யத்தினதும் அதன் இஸ்லாமியத் தினதும் மரபுரிமைச் சின்னமாக விளங்கி வந்தது. 19ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் துருக்கியர்கள் பலர், ஐரோப்பிய உடைகளை அணிந்தார்கள். எனினும், 'தலைநகரில் முழுக்காற்சட்டை ஜக்கட் போன்ற பகட்டான உடையணிபவரிடம் கூடத் தனிப்பட்ட ஓர் அடையாளச் சின்னமாக மிஞ்சி இருந்தது அந்தக் குல்லாய் மாத்திரமே' (Lewis 1965 : 262).

கெமால் தனது துருக்கியச் சுற்றுப் பயணங்களின் போது இந்த உடை பற்றிய விவகாரத்தைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தார். கஸ்தமோனுவில் உரையாற்றிய அவர்:

> என் முன்னால் கூட்டத்தில் ஒருவரைப் பார்க்கிறேன் அவர் தனது தலையில் குல்லாய் அணிந்திருக்கின்றார், அதன் மீது பச்சை நிறத் தலைப்பாகையைச் சுற்றியிருக்கின்றார். முதுகிலே போர்வை இருக்கின்றது. அதற்கு மேலே நான் அணிந்திருப்பதைப் போல 'ஜக்கட்' ஒன்று. கீழ்ப்பகுதியை என்னால் பார்க்க முடியவில்லை. இது என்ன விதமான ஆடையலங்காரம்? நாகரிகமுற்ற ஒருவர் இத்தகைய ஆடைகளை அணிந்து சென்றால் உலகம் ஏளனஞ் செய்யாதா? (Lewis 1965 : 264)

இந்தக் குல்லாயும் துருக்கிய ஆடையும் ஓர் அரசியல் விவகாரமாக மாறியது. எனவே, கெமால் அப்போது அமுலில் இருந்த அவசரகாலச் சட்டங்களைப் பயன்படுத்தி ஆடைச் சீர்திருத்த ஆணைகளை நிறை வேற்றினார். 'சட்ட ஒழுங்கைப் பாதுகாப்பதற்கான சட்டம் அமுலில் இருந்த வேளையில் அதனைச் செய்தோம். இந்தச் சட்டம் அமுலில் இருந்தமை எமக்குச் சுலபமாக அமைந்தது. சில பிற்போக்குவாதிகளினால் தேசம் பாரிய அளவில் நச்சுப்படுத்தப்படுவதைத் தடுக்க முடிந்தது' (Lewis 1965 : 265). கெமால் பழைய உதுமான் சமுதாயத்தின் சின்னங்களை கண்டனம் செய்தது மாத்திரமின்றி மதத்தையோ, இனத்தையோ எடுத்துக்காட்டாத ஒரு "மதச்சார்பற்ற" உடையை அமுலுக்குக் கொண்டு வந்தார். ஐரோப்பியத் தொப்பியையும் ஆடைகளையும் அணிந்து அவர் வழிகாட்டினார். சமயத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்கள், அரசியல் ஊழியர்கள் உட்பட துருக்கியர்கள் அனைவரும் குல்லாயைக் கைவிட்டு ஐரோப்பியப் பாணியிலான தொப்பிகளை அணிய வேண்டுமென்று அவர் உத்தரவுகள் பிறப்பித்தார் 'எமது உடையிலும் கூட நாம் நாகரிகமடைந்த உலகை ஒத்திருக்க வேண்டும்' என்று அவர் கூறினார் (Bisbee 1951 : 23). 'நாகரிகமுற்ற உலகின்' உடை, துருக்கிக்குப் பொருத்தமானது என்று அவர் துணிச்சலுடன் உறுதியாகக் கூறினார். மேலும் அவர் கூறியதாவது:

> நாம் பூட்சுகள், பாத அணிகள், காற்சட்டை, மேற்சட்டை, கோர்ட்டுகள், கழுத்துப் பட்டிகள் போன்றவற்றை அணிவோம். நாம் காலையில் அணியும் கோட்டுகள், பகலில் அணியும் சூட்டுகள் மற்றும் ஸ்மோக்கிங் ஜக்கட், பின் வெட்டு கொண்ட கோட்டுகள் என்பவற்றை அணிவோம். எவராவது இதற்குத் தயக்கம் காட்டிப் பின்வாங்கினால் நான் அவர்களை முட்டாள்கள் என்பேன் (Wortham 1931 : 193)

பெண்களின் உடைகள் கூட சர்ச்சைக்குரிய விவகாரமாகியது. அரசாங்கம், துருக்கியப் பெண்களை, முக்காட்டை நீக்கி மேலைத்தேய உடைகளை அணியுமாறு கேட்டுக் கொண்டதே தவிர, அவர்களைக் கட்டாயப்படுத்தவில்லை. கெமால் கூட, அவசரகாலச் சட்டங்களைப் பிரயோகித்து அதன் மூலம் முக்காட்டை ஒழித்துக் கட்டிப் பாரம்பரிய அபிப்பிராயத்தை மாற்றுவதற்குத் தயங்கினார். ஆனால், இப்பிரச்சினை சம்பந்தமாக அவர் விடாப்பிடியான இயக்கத்தை நடத்தினார். பூர்ஷுவாப் பெண்கள் நவீன ஐரோப்பிய பாணியிலான நவீன ஆடைகளை ஏற்றுக் கொள்ளத் தயங்கவில்லை. ஆனால் உடைச் சீர்திருத்தம் கிராமியப் பெண்கள் மீது எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

கெமாலின் 'நாகரிகமான' பழக்க வழக்கம் பற்றிய கருத்தானது, பழைய வணக்கஞ் சொல்லும் முறையை (சலாம் சொல்லுவதை) கைவிடும்படி செய்வதையும் உள்ளடக்கியது. நல்ல குடும்பங்களைச் சேர்ந்த முஸ்லிம் பெண்கள் நடிகைகளாவதை அது ஊக்குவித்தது. துருக்கிய இசை ஊக்குவிக்கப்படவில்லை. மேலைத்தேய இசையைப் பரப்புவதையும் ஐரோப்பிய சமூகப் பண்புகளைப் பிரசாரம் செய்வதையும் அது உள்ளடக்கிற்று. இவற்றில் ஐரோப்பிய நடனமும் அடங்கும். கெமாலுங்கூட அடிக்கடி நடனமாடினார். தனது அதிகாரிகளையும் அவர்களது மனைவியரையும் நடனமாடுமாறு உத்தரவிட்டார். இதன் விளைவாக முக்கிய நகரங்களில் மேற்கத்தைய நடனத்திற்கு ஓர் பெரும் வேட்கை ஏற்பட்டது. இது பாரம்பரியவாதிகளை ஆத்திரங் கொள்ளச் செய்தது. கெமால் தனிப்பட்ட





வாழ்விலும் கூட முஸ்லிம் மரபுக்குச் சவால் விட்டார். சமயம் சார்ந்த இமாம் இல்லாமல் ஒரு வைபவத்தில் அவர் மணம் முடித்தார். மணப்பெண் முக்காடு அணிந்திருக்கவில்லை. தனது வளர்ப்பு மகளை விமானியாகுமாறு அவர் உற்சாகமூட்டினார். தனது மனைவி 'சம்பாஷித்தல், நடனமாடல், சிறிய விருந்துகளில் பானம் அருந்துதல்' போன்ற பெண்மை சார்ந்த திறமைகளைப் பெற்றிருக்க வேண்டுமென கெமால் கருதியதாகத் தெரிகிறது (Wortham 1931 : 167)

ஆயினும் தனக்கெனத் தனிப்பட்ட கலாசாரத்தைக் கொண்ட ஒரு குடிசனத்தின் மீது, ஆட்சியால் திணிக்கப்பட்ட மேலைத்தேய உடை, சமூகப் பழக்கங்கள் என்பன ஓர் மேலோட்டமான மாற்றத்தையே ஏற்படுத்திற்று. பாடசாலைகள், புத்தகங்கள், நாடகங்கள், திரைப்படங்கள் மூலம் புதிய மாற்றங்களுக்குச் சாதகமாகப் பிரசாரம் செய்வதற்குச் சக்திவாய்ந்த கலாசார ஸ்தாபனம் பயன்படுத்தப்பட்ட போதிலும், ஆணைமூலம் சமூகப் பழக்க வழக்கங்களை அதிலும் குறிப்பாக, சமயத்தில் ஆழத்தோய்ந்த பழக்க வழக்கங்களைப் புரட்சிகரமயமாக்குவது அவ்வளவு எளிதானதல்ல. இதுவே உண்மை. இது தவிர *சுதந்திரத்திற்கான தீர்ப்பு அதிகார மன்றம்* என்ற பெயரில் ஓர் விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு கிராமம் கிராமமாகச் சென்று, புதிய உடை விதிகளுக்கு இசைவுபடாதவர்களைத் தண்டித்தது. 'இந்தக் குழு வருவது பற்றிய செய்தி காதுக்கு எட்டியதும் முக்காடுகள் மறைந்து விடும். துருக்கியர்களின் தொள தொளத்த காற்சட்டை ஒளிந்துவிடும். அதாவது இந்தக் தொல்லைமிகு சீர்திருத்தக் குழுவினர் சென்று மறையும் வரையிற்றான் இந்த நிலைமை, அதன்பின்னர் நிலைமை மீண்டும் பழக்கப்பட்ட வழமைக்குத் திரும்பிவிடும் (Wortham 1931 : 203).

ஏனைய பல சீர்திருத்தங்கள், பாரம்பரியம் மற்றும் வைதீகம் மீதும் பாரிய தாக்குதல்களைத் தொடுத்தன. 1924ஆம் ஆண்டின் அரசியல் யாப்பில் காணப்பட்ட "துருக்கிய ராஜ்யத்தின் சமயம் இஸ்லாம்" என்ற விதி தேசியப் பேரவையில் வாக்கெடுப்பின் மூலம் நீக்கப்பட்டது. இதன் மூலம் இஸ்லாத்தை முற்றாக அகற்றிவிட்டுத் துருக்கி இறுதியில் ஒரு மதச்சார்பற்ற நாடாக ஆக்கப்பட்டது. இஸ்லாமியத் தனித்துவத்தின் மற்றுமொரு சின்னமான அரபு எழுத்து மீதும் பார்வை திரும்பியது. 1928ஆம் ஆண்டு லத்தீன் அரிச்சுவடி அறிமுகப்படுத்தப்பட்டது. இது பற்றிக் கல்வி அமைச்சர் இப்படிக் கூறினார்: 'லத்தீன் அரிச்சுவடியை ஏற்றுக் கொள்வது எமக்கு ஒரு தேவையாகும். பழைய இலக்கியம் அழிந்தொழிய விதிக்கப்பட்டிருக்கின்றது." இந்த மாற்றங்கள் 'நாகரிகமயமாக்கும்' போக்கின் அங்கமாகும் என்று கெமால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டிக் காட்டினார். புதிய எழுத்துப் படிவம் பற்றி அவர் இப்படிக் கூறினார்:

> இப்போது புதிய துருக்கிய எழுத்துப் படிவங்களைக் கொண்டு, எமது வளமான செழிப்பான மொழியானது, தன்னைத்தானே வெளிக்காட்டக்கூடியதாக இருக்கும். இரும்புப் பிடியாக எமது மனங்களைப் பல நூற்றாண்டுகளாகப் பீடித்திருந்த இந்த எளிதில் விளங்காத குறிகளில் இருந்து நாம் எம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். நீங்கள் புதிய துருக்கிய எழுத்துப் படிவங்களைக் கூடிய விரைவில் கற்றுக் கொள்ள வேண்டும். நீங்கள் உங்களது சக நாட்டவர்களுக்கு, பெண்களுக்கு, ஆண்களுக்கு, வண்டில் தள்ளுவோருக்கு, படகோட்டிகட்கும்கூடக் கற்றுக் கொடுங்கள். ஒரு நாடு 80 சதவீதக் கல்வி அறிவில்லாதவர்களைக் கொண்டிருப்பது வெட்கக்கேடான செயல். கடந்தகாலத் தவறுகளை ஒழித்துக் கட்டுவதற்கு இதுவே தருணம். *எமது தேசம், அதன் புதிய எழுத்துப் படிவங்களுடனும், தனது சிந்தனையுடனும் நாகரீக உலகில் தனக்குரிய இடத்தை எடுத்துக் காட்டும்* (Lewis 1965 : 272)

## ஹாலிட் எடிப்

துருக்கியில் பெண்கள் மீது கெமாலின் சீர்திருத்தங்கள் ஏற்படுத்திய விளைவுகளை ஹாலிட் எடிப்பின் (1883-1964) வாழ்க்கை மூலம் சித்திரித்துக் காட்ட முடியும். அவர் கெமாலின் படைகளில் பணிபுரிந்த பெண்தேசியவாதி. எடிப், பாரம்பரியமாகவே செல்வாக்குள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய தந்தை சுல்தானின் செயலாளராக ஒரு சமயத்தில் பணி புரிந்தார். பாடசாலையிலும் வீட்டிலும் ஐரோப்பிய இலக்கிய விஷயங்கள் தொடர்பாகவும் பெண்கள் விவகாரங்கள் பற்றியும் தாராளவாதச் சஞ்சிகைகளுக்குப் பங்களிப்புச் செய்தவர். நாவலாசிரியராகவும் அரசியல் எழுச்சியாளராகவும் விளங்கியமையே அவரது மகத்தான வெற்றிகளாகும். பெண்களின் உரிமைகள் சம்பந்தமான அவரது நாவல்களில் (சினக்லி பக்கால் என்ற நாவல் பிரபல்யமானது) அக்காலத்தில் நிலவிய இரண்டு சித்தாந்தங்களான துருக்கிய தேசியவாதம், மேற்குமயமாக்கம் ஆகிய இரண்டையும் ஒருமுகப்படுத்துவதற்கு அவர் முயன்றார்:

> குடியரசுக்கு முற்பட்ட காலகட்டத்தில் எழுதத் தொடங்கிய அவர், அட்டாதுர்க்கின் சீர்திருத்தக் காலகட்டத்திலும் தொடர்ந்து எழுதினார். அவர் அணுகிய பிரச்சினைகளும் அவர் உருவாக்கிய பெண் பாத்திரங்களும் பெரும் வித்தியாசத்தைக் காட்டுகின்றன. தேசியவாதப் போக்குள்ள பெண்கள்,







**ஹாலிட் எடிப்**
**1920களின் ஆரம்பத்தில்**
**துருக்கிய இராணுவ வீரராக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீனமயமாகிய பெண்கள், வலுவான ஆளுமை கொண்ட பெண்கள், ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த பெண்கள், வெகுஜனங்களுக்குக் கல்வி புகட்ட முயன்ற பெண்கள் ஆகியோரே இவர்கள் (Altiok 1981 : 226)

ஹாலிட் எடிப் 1910-12ஆம் ஆண்டுகளில் தேசிய இயக்கத்தில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டவர். துருக்கி முழுவதிலும் கிளைகளைக் கொண்டிருந்த ஒஜாக் என்ற தேசியவாத அமைப்புச் சபையின் ஒரேயொரு பெண் உறுப்பினராக விளங்கியவர். முதலாவது உலக மகா யுத்தத்தின் போது சிரியாவிலும் லெபனானிலும் பாடசாலைகள், அநாதை இல்லங்கள் போன்றவற்றை இவர் ஏற்பாடு செய்தார். இராணுவத்தில் சேர்ந்த அவர், முஸ்தபா கெமாலின் அணியில் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவராகவும் மிகச்சிறந்த மேடைப் பேச்சாளராகவும் விளங்கினார். சுல்தானின் அரசாங்கம் மரண தண்டனை விதித்த தேசியவாதிகள் பலரில் இவரும் ஒருவர். முன்னாள் மாளிகை அதிகாரியின் புதல்வியான இவர் அப்போது நிலவிய அமைப்புக்குச் சவால் விட்டதால் ஒரே சமயத்தில் தாக்குதலுக்கும் போற்றுதலுக்கும் இலக்கானார். 'தலைசிறந்த சொல்லாதிக்கம் கொண்ட மேடைப் பேச்சாளராகவும் கெமாலின் ஆலோசகராகவும் திகழ்ந்த அவர் புரட்சியின் போது பிரபல்யமான பெண்ணாக விளங்கினார்' (Minai 1981 : 62). அவரது எழுத்துக்களும் செயற்திறனும் அக்காலத்திலும் பிற்காலத்திலும் அழுத்தமான பதிவைக் கொண்டிருந்தன:

> ஹாலிட் எடிப்பின் வாழ்க்கைக் காலத்தின் போது அவரது செல்வாக்கு மகத்தானது. இன்றும் கூட அது தொடர்கிறது. அவரது நாவல்கள் இன்றும் கூட துருக்கியில் வாசிக்கப்படுகின்றன. பழைய உதுமான் சாம்ராஜ்யம் சரிந்து விழுந்த காலத்தில் இருந்து, ஒரு சுதந்திரத் தேசம் தோற்றம் பெற்றது வரையில் துருக்கியின் வரலாற்றில் மிகவும் திருப்பமான காலகட்டங்களில் ஒன்றை அவருடைய வாழ்க்கை தழுவியிருந்தது. ஒரு புதிய வகையான துருக்கியப் பெண் தோன்றுவதற்கு அவரது முன்மாதிரி வழி சமைத்தது (Fernea and Bezirgan 1977 : 167-8)

## முடிவுரை

அரசின் ஆணைகள் மூலம், பெண்களின் விடுதலையைச் சாதிப்பதற்காகத் துருக்கியில் கெமாலிஸ்டுகள் மேற்கொண்ட சீர்திருத்தங்கள், வெற்றிகரமான முயற்சிகள் ஆகும் என உலகம் முழுவதிலும் மேற்கோள்கள் காட்டப்பட்டன. துருக்கி தனது எல்லா நிறுவகங்களையும் நவீனமாக்குவதன் வாயிலாக 20ஆம் நூற்றாண்டுக்குள் பிரவேசிக்க மேற்கொண்ட முயற்சியின்





ஒருங்கிணைந்த பகுதியாக, இந்தச் சீர்திருத்தங்கள் விளங்கின. பொருளாதார நடவடிக்கைகள், சட்டக் கட்டமைப்புக்கள் ஆகியவற்றை இந்தச் சீர்திருத்தங்கள் உள்ளடக்கியது மாத்திரமன்றி சித்தாந்தவியல் துறைகளுக்கும், உடை மற்றும் சமூகப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றுக்கும் அவை விஸ்தரிக்கப்பட்டன.

இந்தச் சீர்திருத்தங்கள் காரணமாக உருவான அநேக துருக்கியப் பெண் அரசியல் விஞ்ஞானிகள், இந்த மாற்றங்களைப் பகுப்பாய்வு செய்திருக்கின்றார்கள். அரசியல் விஞ்ஞானப் பேராசிரியரான கலாநிதி நெர்மின் அபடான்-உனாட், 'பலதார மணம், பால்பேதச் சட்டம், பாரம்பரிய ஒழுக்க நெறிகள் ஆகியவற்றை ஒழித்துக் கட்டுவதற்குக் கெமால் தனது கவனத்தைப் பிரதானமாகச் செலுத்தினார்.' என்றாலும், இந்த மாற்றங்கள் பற்றிய மதிப்பீடு செய்யும் போது, பெண்களின் அந்தஸ்து மற்றும் பங்கேற்பு என்பவற்றைப் பொறுத்த மட்டில், சட்டத்தின் மூலமான புரட்சிகர முயற்சிகள் துருக்கிய சமுதாயத்தில் ஓரளவு மாற்றங்களையே ஏற்படுத்தின என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது என்று கூறுகின்றார். தலையாய முற்போக்கு மாற்றங்களுக்காகப் பெண்களால் போராட்டம் நடத்தப்படவில்லை. எனினும், பெண்களுக்குச் சமமான உரிமைகளை வழங்குவதன் மூலம், துருக்கி 'சமகால நாகரீகத்தின் மட்டத்தை எட்டுகின்றது', மேலும் அது 'உலகத்திற்கு ஒரு அடையாளச் சின்னமாக விளங்குகின்றது' என்பதை நிரூபிக்கும் வகையில் அரசாங்கத்தினால் இவை வழங்கப்பட்டன. 'துருக்கியப் பெண்களுக்கு வழங்கப்பட்ட பெரும்பாலான உரிமைகள், துருக்கியப் பெண் ஜனத்தொகையால் விடுக்கப்பட்ட பெரிய அளவிலான கோரிக்கைகளின் விளைவு என்று கூறுவதை விட, சிறிய எண்ணிக்கையிலான புரட்சிகர மேல்மட்டத்தினர் மேற்கொண்ட தளராத முயற்சிகளின் பலாபலனே இவை, என்று அபாடன் உனாட் கூறுகின்றார்' (Abadan-Unat 1981 :12-13).

மற்றுமொரு பெண் கல்வியியலாளரான கலாநிதி சிரின் டெகலி, கெமாலின் சீர்திருத்தங்களை ஆராய்ந்த ஒரு அரசியல் விஞ்ஞானியாவார். இந்தச் சீர்திருத்தங்கள் முதலாளித்துவச் சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டவை என்று கூறுகின்றார். அவர் இப்படி எழுதுகின்றார்:

> நவீன துருக்கியை உருவாக்குவது தான் புரட்சியாளர்களின் குறிக்கோள். இந்த 'நவீனத்துவம்' மேற்கில் நிலவிய சமூக அமைப்பாக, அதாவது முதலாளித்துவச் சமூக உருவாக்கம் என்று வரையறுத்துக் கூறப்பட்டது. உதுமான் சாம்ராஜ்யத்தில் இருந்து புதிய அரசு பெற்றுக் கொண்ட உற்பத்திச் சக்திகள் வரலாற்று ரீதியாக நிர்ணயிப்பதற்குப் போதுமான அளவு விருத்தியடைந்திருக்கவில்லை. எனவே மேற்கட்டமைப்புக்களை நவீனமாக்குவது தொடர்பாக ஆரம்பிக்க வேண்டியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1926ம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட புதிய 'சிவில் சட்டக்கோவை', முதலாளித்துவ நாடுகளில் மேலோங்கியிருந்த, முன்மாதிரி தொடர்பாடல்களின் அடிப்படையில் சிவில் மற்றும் சொத்து தொடர்புகளை மறுசீரமைத்தது (Tekeli 1981-294)

துருக்கியில் தடைகள் தகர்க்கப்பட்டு முன்னேற்றங்கள் காணப்பட்டது என்பதில் சந்தேகமில்லை. என்றாலுங்கூட, இந்தச் சீர்திருத்தங்கள் தொடர்ந்தும் வர்க்கக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாகவே இருந்தது. பெரும்பாலான துருக்கியப் பெண்களில் அது குறிப்பிடத்தக்க அளவு நிலைமாற்றத்தை ஏற்படுத்தவில்லை. கலாநிதி ஃபாத்மா மன்சூர் கோசார் எழுதியபடி:

> 1920ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் துருக்கியச் சமுதாயத்தின் மீது திணிக்கப்பட்ட திடீர் மாற்றங்கள் தாங்கிக் கொள்ளக் கூடியவையாக இருந்தன. ஆனால், இவை சமூகக் கட்டமைப்பின் ஒழுங்கமைப்பைக் குலைக்கவில்லை. இறுதியாகப் பார்த்தால், அட்டாதுர்க் தமக்கு வழங்கிய உரிமைகளை சிறிய எண்ணிக்கையிலான பெண்களே பயன்படுத்தக்கூடியதாக இருந்தது. மிகப்பெரும்பாலான பெண்கள் இன்னமும் நிலத்துடன் கட்டுண்டு இருந்தார்கள். ஆண்களின் சமூகக் கட்டுப்பாட்டிலேயே இருந்தார்கள் (Cosar 1980 : 138)

எவ்வாறாயினும் இறுதியாகப் பரிசீலிக்கும் வேளையில், எவ்வளவுதான் வர்க்கத்தினால் வரையறுக்கப்பட்டு, வாய்ப்பில் மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், துருக்கியச் சீர்திருத்தங்கள் ஒரு சர்வதேச உணர்ச்சி உந்தலை உருவாக்கின. நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தில் இருந்து தொழில்துறை முதலாளித்துவ நாடாக ஜப்பான் துரிதமாக உருமாறி, வியப்பை ஏற்படுத்தியதைப் போல, சுல்தானின் ராஜ்யத்திலிருந்து குடியரசு நிலைக்குத் துருக்கி உருமாற்றம் அடைந்ததும், தீவிரமான சமூக மாற்றத்துக்காக அது மேற்கொண்ட முயற்சிகளும் ஏனைய மத்திய கிழக்கு மற்றும் ஆசிய நாடுகளின் "நவீனமாக்குவோர்" மற்றும் தேசியவாதிகளின் மனங்களைக் கவர்ந்தன. குறிப்பாகப் பெண்களின் உரிமைகள் விஷயத்தில் துருக்கியின் உதாரணம், முஸ்லிம் உலகின் பெரிதும் விவாதிக்கப்பட்ட விவகாரங்களில் ஒன்றாகியது. இதை முன்மாதிரியாகக் கொண்டு, ஈரானிலும் ஆப்கானிஸ்தானிலும் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.



# 3.எகிப்தில் சீர்திருத்தவாதமும் பெண்களின் உரிமைகளும்

> எமது சிறுமிகளை அறியாமைக்குப் பலியிடுவதும், விவேகமற்ற முயற்சிகளில் ஈடுபடுத்துவதும் உண்மையிலேயே ஒரு பெரும் குற்றமே. *மொஹமட் அப்து* (1849-1905) எல் - சாதவி இல் மேற்கோள் காட்டப்பட்டது. 1980:171.

நவீனவாக்கம், சீர்திருத்தம், கல்வி ஆகிய துறைகளிலும் தேசியவாதம், ஏகாதிபத்தியத்திற்கு எதிர்ப்பு, பெண்ணியம் ஆகிய இயக்கங்களை வளர்த்தெடுத்தலிலும் எகிப்து பல வகைகளில், 'கீழைத்தேய' நாடுகளுக்கு முன்னோடியாக விளங்கியது. அது இஸ்லாத்தைச் சீர்திருத்துவதிலும் முதலிடத்தை வகித்தது. ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் இடையே கேந்திர நிலையில் அமைந்துள்ள கெய்ரோ - பிரெஞ்சுப் புரட்சி உட்பட - மாற்றங்களை நாடிய முற்போக்கு இயக்கங்களுக்குக் கதவைத் திறந்தது. அதுபோலவே புதிய கருத்துக்களுக்கும் இயக்கங்களுக்கும் அது ஒரு சமஅபிமானம் கொண்ட மையமாக விளங்கியது. நாட்டின் கல்வி, கலாசார, நிர்வாகக் கட்டமைவுகளை நவீனமாக்குவதற்கு, அடுத்தடுத்து வந்த ஆட்சியாளர்கள் மேற்கொண்ட முயற்சிகளுடன், எகிப்தில் சீர்திருத்தவாதம் மற்றும் பெண்ணியத்தின் அலைஅதிர்வுகள் இணைந்திருந்தன. அதுபோலவே 1882ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலத்தில், நாடு பிரிட்டனின் ஆக்கிரமிப்பில் இருந்த வேளையிலும் இந்த அலைஅதிர்வுகள் தேசியவாதம் மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பனவற்றின் வளர்ச்சியோடு இணைந்திருந்தன. எகிப்தில் பெண்களின் உரிமைகள் சம்பந்தமான ஆரம்பகால விவாதங்கள், பெண்கள் உரிமைகளுக்காகப் போராடிய ஆண் சீர்திருத்தவாதிகளின் தோற்றம், பெண் சமத்துவக் கருத்துகளுக்கு முன்னோடியாக விளங்கிய "புதுமைப் பெண்களின்" பாத்திரம் ஆகியற்றை மேற்கூறப்பட்ட இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகளின் பின்னணியிலேயே மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.

எண்ணற்ற ஆலயங்கள், நகரங்கள், அடக்கஸ்தலங்களின் சிதைபாடுகள் மூலமும் சிற்பங்கள், ஓவியங்கள், எழுத்துக்கள் மூலமும் சான்றுபடுத்தப் பட்டிருப்பதற்கேற்ப எகிப்து மிகப் பழைமையான நாகரிகங்களில் ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கோர முடியும். எகிப்திய மக்கள் உயர்நிலையடைந்த ஓர் சமயத்தைக் கொண்டிருந்தார்கள். இந்தச் சமயத்தில் ஆண் தெய்வங்களுக்கு ஏறக்குறைய ஒரு சமானமான பாத்திரத்தை பெண் தெய்வங்கள் வகித்தன. முட் (வாய்மைத் தெய்வம்) இஸிஸ், ஹதோர் போன்ற பெண்தெய்வங்கள் மானுடச் செயற்பாட்டின் பல்வேறு துறைகளில் ஆதிக்கத்தையும் கட்டுப்பாட்டையும் கொண்டிருந்தன.

ஃபேரோ மன்னராட்சி சமுதாயத்தில் அத்தகைய தெய்வங்கள் இருந்து வந்தமை பெண்களின் உயர்ந்த அந்தஸ்தைப் பிரதிபலிப்பதாகச் சில அறிஞர்கள் கருதுகின்றனர். பெண்கள் பெரிதும் பண்பாடுள்ளவர்களாகவும் ஆண்களைப் போலவே நீச்சல், கழைக்கூத்து போன்ற விளையாட்டுகளில் ஈடுபட்டதாகவும் சான்றுகள் பல சித்திரிக்கின்றன. ஆரம்ப யுகங்களைச் சேர்ந்த ஓவியங்கள், ஆண்களும் பெண்களும் சம அளவுள்ளவர்கள் என்பதைக் காட்டுகின்றன. கி.மு. 2000 ஆண்டுக்குப் பின்னர் தான் ஆண்களைவிடப் பெண்கள் அளவில், ஓரளவு சிறியவர்களாகச் சித்திரிக்கப்பட்டனர். இது அவர்களின் அந்தஸ்த்து குறைந்திருப்பதைச் சுட்டிக் காட்டுவதாக இருக்கலாம். சமூக ரீதியிலும் அரசியல் ரீதியிலும் பெண்கள் ஒப்பீட்டளவில் சம அந்தஸ்த்தை அனுபவித்திருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது. நெஃபர்டிட்டி, ஹட்ஷேப்சட் -பிற்காலத்தில்- கிளியோபாட்ரா (கி.மு. முதலாம் நூற்றாண்டு) போன்ற பல மகாராணிகள் எகிப்தை ஆட்சி செலுத்தி வந்துள்ளனர். அதுபோலவே அமைச்சர்களாகவும் மாகாணங்களின் ஆட்சியாளர்களாகவும் பெண்கள் முக்கியமான பதவிகளை வகித்து வந்துள்ளனர் என்று பதிவேடுகள் கூறுகின்றன.

கிளியோபாட்ராவின் மரணம் முதல் (கி.மு. 30இல்) கி.பி. 642 வரையில் சில குறிப்பிட்ட குறுகிய காலகட்டங்களைத் தவிர, (உதாரணமாக, கி.பி. 270இல் பல்மைரா மகாராணி செனோபியா எகிப்தைப் பல்மைராவுடன் இணைத்துக் கொண்ட காலகட்டம்) எகிப்து ரோமர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. 7ஆம் நூற்றாண்டில் அரபுக்களின் படையெடுப்பும், அதைத் தொடர்ந்து எகிப்து இஸ்லாமிய மயமானதும் நிகழ்ந்தன. 1517ஆம் ஆண்டு அந்த நாடு துருக்கிய உதுமான் சாம்ராஜ்யத்தின் ஓர் அங்கமாகியது. சுயாதீனமான சுல்தான் ராஜ்யம் என்ற நிலையில் இருந்து உதுமான் சாம்ராஜ்யத்தின் ஓர் மாகாணமாகினாலுங்கூட, எகிப்தின் பாரம்பரிய நிர்வாகம் அல்லது அதிகாரக் கட்டமைவுகளில் இது பெரிதாக மாற்றம் எதனையும் ஏற்படுத்தவில்லை. மேலும் எகிப்து உதுமானின் மேலாட்சி முறைக்கு மாறிய





போதிலும், அது எகிப்திய சமுதாயம், கலாசாரம் ஆகியவற்றில் மிகச் சிறியளவு செல்வாக்கையே செலுத்தியது. அத்துடன் ஐரோப்பிய நாடுகளுடனான வர்த்தக, வாணிபப் பிணைப்புக்களை ஏறக்குறைய சுயாதீனமான அடிப்படையிலேயே அது தொடர்ந்தது.

இந்தப் பிணைப்புக்களை வலுப்படுத்தும் எண்ணத்துடன் தான் 1798ஆம் ஆண்டு நெப்போலியன் பொனபார்ட்டும் பிரெஞ்சு இராணுவமும் எகிப்தைக் கைப்பற்றின. மூன்று வருடகாலம் நீடித்த இந்த ஆக்கிரமிப்பின் போது நாடுகளுக்கிடையே இருவழி இடைத்தொடர்பு ஆரம்பமானது. இதுவே, எகிப்து நவீனமாவதற்கான ஆரம்பத்தைக் குறித்தது. நெப்போலியன் தன்னோடு 120 அறிஞர்களையும் விஞ்ஞானிகளையும் கொண்டு வந்திருந்தான். இவர்கள் எகிப்திய சமூகத்தையும் கலாசாரத்தையும் விரிவாக ஆராய்ந்தனர். இதற்கென பிரெஞ்சுக்காரர்கள் நாட்டின் நூதனப் பொருட்கள், மொழிகள், விவசாயம், மருத்துவ ஞானம் போன்றவற்றைக் கற்பதற்கென கெய்ரோவின் எகிப்தியப் பகுத்தாய்வுக்குரிய நிலையத்தை *(Institut d' Égypte)* நிறுவினர். இந்த நிலையத்தின் நூலகம் எகிப்தியர்களுக்குத் திறந்து விடப்பட்டது. அச்சகங்கள் அரபு மொழியிலும் பிரெஞ்சு மொழியிலும் பிரசுரங்களை வெளியிட்டன. எகிப்திய வரலாற்றாசிரியரான அல் ஜபார்ட்டி (1745-1825) எழுதியபடி:

> நூலகத்துக்கு விஜயம் செய்யும் முஸ்லிம் ஒருவர் விஞ்ஞானத்தில் ஆர்வங் காட்டினால் பிரெஞ்சுக்காரர்கள் பெரிதும் மகிழ்ந்தனர். உடனடியாக அவருடன் பேச்சுக் கொடுத்து உலகத்தின் புவித்தோற்றம் பற்றிய படங்களுடன் அச்சிடப்பட்ட நானாவிதமான புத்தகங்களையும், விலங்குகள், தாவரங்களின் படங்களையும் காட்டினர். பண்டைய வரலாறு பற்றிய புத்தகங்களையும் அவர்கள் வைத்திருந்தனர்.
> (Lewis 1982 : 295)

இந்தக் காலப்பகுதியில் தான் எகிப்தில் முதலாவது பிரெஞ்சு மொழிச் சஞ்சிகையான "கூரியர் த லெஜிப்த்" *(Courrier de l' Égypte)* ஆரம்பிக்கப் பட்டது. பிரெஞ்சு அறிவுத்துறைசார் நடவடிக்கைகள் காரணமாக 1809க்கும் 1828க்கும் இடையே பாரிஸிலும் 'டிஸ்கிரிப்ட்சன் த லெஜிப்ட்' *(Description de l' Égypte)* என்ற கலைக்களஞ்சியமும் பிரசுரமானது. எகிப்திய நாகரிகம் மற்றும் இஸ்லாமியக் கற்கைகள் பற்றி ஐரோப்பாவில் ஆர்வத்தைத் தூண்டுவதற்கு இதுவே காரணமாகியது. பண்டைய எகிப்திய வழித் தோன்றலான கிறிஸ்தவர் ஒருவர் 1828ஆம் ஆண்டில் முதலாவது அரபு பிரெஞ்சுச் சொற்களஞ்சியத்தை வெளியிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரெஞ்சு செல்வாக்கு காரணமாக பிரெஞ்சுப் புரட்சியின் சித்தாந்தம் உட்பட, ஐரோப்பியக் கருத்துக்கள் எகிப்துக்குள் துரிதமாகப் பரவத் தொடங்கின. இவ்விதம் பெண்களின் நிலையும் மாறியது. சில கலப்புத் திருமணங்களும் நடந்தன. ஜெனரல் மெனோ எகிப்தியப் பெண் ஒருவரை மணம் முடித்தார். அக்காலத்துப் பிரெஞ்சுப் பண்புக்கேற்ப அவரைக் கௌரவமாக நடாத்தினார். 'உணவறைக்குக் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார். மேசையில் சிறந்த ஆசனத்தை அவருக்கு வழங்கினார். அவருடைய கைக்குட்டை கீழே விழுந்து விட்டால் அதைத் தானே துரிதமாக எடுத்தும் கொடுத்தார்'. இதன் காரணமாக ஏனைய பெண்களும், 'தமது கணவர்கள் தம்மை இவ்வாறே நடத்த வேண்டும்' என்று பொனபார்ட்டுக்கு மனுவைச் சமர்ப்பித்தனர். ஆனால், பிரெஞ்சுக்காரர்கள் எகிப்திலிருந்து வெளியேறியதும் அதன் எதிரொலிகள் கிளம்பின. 'பெண்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள், நஞ்சூட்டப்படுகிறார்கள் அல்லது நைல் நதியில் மூழ்கடிக்கப்படுகின்றார்கள்' என அக்காலத்துப் பிரெஞ்சு அவதானி ஒருவர் அறிவித்தார். பிரெஞ்சு ஆக்கிரமிப்பினால் உருவாக்கப்பட்ட 'பாழ்பட்டுப் போன புதிய புனைவுகளால் பெண்களின் பண்பு அழிக்கப்பட்டதையும்' பற்றி வரலாற்றறிஞர் அல் ஜ பார்ட்டி எழுதினார். பிரெஞ்சுப் பாணியில் உடையுடுத்தி, பிரெஞ்சுக்காரருடன் உறவாடிய, பிரபல சமயப்பிரமுகரான ஷெய்க் அல் பஹ்ரியின் புதல்வி எவ்வாறு கொல்லப்பட்டார் என்பதையும் விளக்கினார் (Ahmed 1982 : 154). அதேசமயம், ஐரோப்பியப் பாணிகளைப் பின்பற்றிய எகிப்திய ஆண்களுக்கு எதிராக இத்தகைய வன்செயல்கள் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## எகிப்தில் சீர்திருத்தவாதம்

அபூகீர் இல் பிரிட்டிஷ் கடற்படையிடம் தோல்வி கண்ட பிரெஞ்சுக்காரர்கள் எகிப்திலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து நாட்டில் ஸ்திரமற்ற நிலை காணப்பட்டது. இக் காலகட்டத்தின் போது நாட்டைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக பிரிட்டிஷாரும் எகிப்திய சுல்தான்களும் உதுமான் சாம்ராஜ்யப் பிரதிநிதிகளும் ஒருவருக்கொருவர் போட்டியிட்டனர். பிரிட்டிஷாரும் 1805ஆம் ஆண்டு எகிப்திலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து உதுமான்களின் மேலாட்சியின் கீழ் அல்பேனிய ஜெனரல், மொஹமட் அலி





ஆட்சியை நிறுவினார். 1805 முதல் 1848 வரை எகிப்தை ஆண்ட மொஹமட் அலி பல்வேறு சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். இவை பல்வேறு அரச திணைக்களங்களுக்கும் ஓர் அங்கீகரிக்கத்தக்க நவீன வடிவத்தைக் கொடுத்தன. நாட்டில் அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டு ஆலோசனைச் சபையும் அமைக்கப்பட்டது. அத்துடன் மாகாணப் பிரபுக்களின் அதிகாரங்களும் குறைக்கப்பட்டன. பொருளாதாரத் துறையில் வரிவசூலிப்பு முறை ஒழிக்கப்பட்டு, நிலையான வரிகள் அறிமுகஞ் செய்யப்பட்டன. வெளிநாட்டு வர்த்தகத்தை அரசு பொறுப்பேற்றது. இதனால் விவசாய, வர்த்தக வருமானங்கள் அதிகரித்தன. விவசாய ஊதியங்கள் அதிகரிக்கப்பட்டன. பருத்தி போன்ற ஏற்றுமதிப் பயிர்ச்செய்கைக்கு ஊக்கமளிக்கப்பட்டதுடன் பல தொழில்களும் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றில் ஆயுத உபகரணங்கள், புடவைகள், இயந்திரக் கருவிகள், கண்ணாடி போன்றவையும் அடங்கும்.

மொஹமட் அலியின் சீர்திருத்தங்கள் கல்விக்கும் வியாபித்தன. கல்வியமைச்சு ஆரம்பிக்கப்பட்டு பொறியியல், மருத்துவம் ஆகியவற்றிற்கான முதலாவது கல்லூரிகளும் நிறுவப்பட்டன. எகிப்தில் தேவையான தேர்ச்சியைப் பெற முடியாதவர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். 1813ம் ஆண்டுக்கும் 1849ஆம் ஆண்டுக்கும் இடையே 311 எகிப்திய மாணவர்கள் பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி, ஒஸ்திரியா போன்ற நாடுகளுக்கு அரச புலமைப்பரிசில் திட்டத்திற்கு அமைய அனுப்பி வைக்கப்பட்டனர் (Hitti 1961:433). இளைஞர்களை அரச சேவையில் ஈடுபடுத்த கல்வி ஒரு மார்க்கம் என்பதை மொஹமட் அலி பொதுவாக உணர்ந்திருந்தார். இதன் பின்னணியில் தான் அவரது சீர்திருத்தங்களைக் கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது. அரசாங்க அச்சகம் ஸ்தாபிக்கப்பட்டமை அவருடைய மற்றுமொரு புதுமை புகுத்தும் முயற்சியாகும். இங்கே அரசாங்க வர்த்தமானிகள், அறிக்கைகள் ஆகியவை மாத்திரம் அச்சிடப்படவில்லை. மாறாக அரபு, துருக்கி, பாரசீக மொழிகளில் கல்வி நூல்களும் அச்சிடப்பட்டன. அவர் முதலாவது மத்திய கிழக்குச் செய்தித்தாளைப் பிரசுரிக்கத் தொடங்கினார். அவர் அமைத்த மொழிபெயர்ப்புப் பணியகம் 1822ஆம் ஆண்டுக்கும் 1842ஆம் ஆண்டுக்கும் இடையே 243 நூல்களை வெளியிட்டது. அவற்றில் பெரும்பாலானவை மொழியாக்க நூல்களாக இருந்தன. இந்தக் காலகட்டத்தின் போது எகிப்தில் ஐரோப்பியச் சிந்தனையைப் பரப்புவதற்கு இந்த வேலைத்திட்டமே பொறுப்பாக இருந்தது. ஐரோப்பாவுக்குச் சென்ற மாணவர்கள், ராஜதந்திரிகள் ஆகியோர் பிரான்ஸினதும் பிரெஞ்சுக் கலாசாரத்தினதும் செல்வாக்குக்கு உட்பட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற அனுபவங்களினால் இது வலுவூட்டப்பட்டது. மொஹமட் அலியின் ஆட்சிக்கால இறுதியில், 'எகிப்தில் செல்வச் செழிப்புள்ள அந்நியப் பண்பு கொண்ட ஆளும் வர்க்கமும், அதே பண்பைக் கொண்ட பெரும் பான்மையான அதிகாரப் பணித்துறையினரும், அந்நியர்களான வர்த்தகர்கள், தொழில்நுட்பவியலாளர்களும், இவர்களுடன் கீழ்படிவுள்ள எகிப்திய விவசாயக் குடிமக்கள், தொழிலாளர்கள், நுண்கலைஞர்கள் மற்றும் சில்லறை வர்த்தகர்கள் என்போரும் இருந்தனர்' (Little 1967 : 36).

இக்காலப்பகுதியில் பெண்களுக்கான கல்வியும் முக்கியத்துவம் பெற்றுப் பல முன்னேற்றங்களைக் கண்டது. செல்வந்தக் குடும்பங்களைச் சேர்ந்த புதல்விகள், வீடுகளிலேயே கல்வி புகட்டப்பட்டனர். வறிய குடும்பங்களைச் சேர்ந்த சிறுமிகள் *'குட்டாப்'*களில் கல்வி கற்றனர். இங்கு திருக்குர்ஆனும், ஓரளவு வாசிப்பும் எழுத்தும் போதிக்கப்பட்டன. 1832ம் ஆண்டு மொஹமட் அலி பாடசாலை ஒன்றை நிறுவினார். இதில் இருந்த சிறுமிகளுக்கு (பிரதானமாக அடிமைகளும் அநாதைகளும்) மகப்பேற்றுத் தாதிமாராவதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. மறை பரப்புவோரும் தீவிரமாகச் செயலில் இறங்கினர். 1846இல் 'தாம் து பொன் பாஸ்துஏர்' (Dame du Bon Pasteur) போன்ற பாடசாலைகளை அவர்கள் திறந்தனர். இதைத் தொடர்ந்து 1859ஆம் ஆண்டில் அமெரிக்காவைச் சேர்ந்த மறை பரப்புவோர், பெண்களுக்கான அமெரிக்கமிஷன் பாடசாலையை நிறுவினர்.

மற்றுமொரு சீர்திருத்தத்திற்குரிய துறையாக, ஆயுதப்படையினர் மத்தியில் அது மேற்கொள்ளப்பட்டது. 1826ஆம் ஆண்டளவில் பிரான்ஸில் பயிற்றப்பட்டு ஆயத்த நிலையிலுள்ள சக்தி வாய்ந்த இராணுவத்தையும் ஒரு சிறிய கடற்படையையும் மொஹமட் அலி உருவாக்கியிருந்தார். இந்த ஆயுதப் படைகள் தேசிய பிரதேசத்தை வெற்றிகரமாக விஸ்தரித்தன. எகிப்தின் சுயாதிபத்தியத்திற்குள் துருக்கியர்கள் ஊடுருவல் செய்வதை அவை கட்டுப்படுத்தின. இருப்பினும் காலவோட்டத்தில் நாட்டின் வருமானத்தைக் கறந்தெடுக்கும் வகையில் இந்த இராணுவம் மாறியது. அதனால் பிரிட்டனின் தலையீட்டை மொஹமட் அலி மீண்டும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. அவரது அதிகாரத்தின் மீது பிரிட்டன் ஐயமும் அச்சமும் கொண்டது. குறிப்பாக உதுமான் சாம்ராஜ்யத்திலிருந்து மொஹமட் அலி, வர்த்தகச் சுதந்திரத்தைக் கோரியமை, பிரிட்ஷார் உதுமான் சாம்ராஜ்யத்துடன் கொண்டுள்ள, பயனுள்ள வர்த்தகச் சலுகைகளுக்கு அச்சுறுத்தலாக இருந்தது. 1841ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட 'லண்டன் உடன்படிக்கை', எகிப்திய





இராணுவத்தை 18000 பேர் கொண்ட படையாகக் குறைத்தது. உதுமான் சாம்ராஜ்யத்துக்குள் அலியின் சுதந்திரத்தை அது கட்டுப்படுத்தியது. உதுமான் சாம்ராஜ்யத்தின் ஒரு மாகாணமாகவே எகிப்து பெயரளவில் விளங்கினாலுங் கூட 1839ஆம் ஆண்டு துருக்கியில் மேற்கொள்ளப்பட்ட டன்சிமற் சீர்திருத்தங்கள் பலவற்றை அது எதிர்பார்த்திருந்தது. துருக்கியைப் பற்றி ஆராய்ந்த போது, டன்சிமற் சீர்திருத்தம் பற்றி நாம் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தோம்.

கேதிவ் இஸ்மாயிலின் (1863-82) ஆட்சிக் காலத்தில் நவீனமாக்கப் போக்கு தொடர்ந்தது. அபிவிருத்தி துரிதமானது. இவர் நவீனமாக்கலுக்கான மூலோபாயங்களையும் தொழில்நுட்பத்தையும் விஞ்ஞானபூர்வ அறிவையும் விஸ்தரித்தார். கல்வி, நிர்வாகம், நீர்ப்பாசனம், பொது வேலைகள் போன்ற வற்றில் மாற்றங்களைச் செய்தார். எகிப்தின் 'பின்தங்கிய நிலைமைக்கு' நவீனமாக்கம் தான் ஒரேயொரு மருந்தாகக் கருதப்பட்டது. அது நாட்டின் பெரும் சுபீட்சத்திற்கும் பலத்திற்கும் இன்றியமையாதது என வலியுறுத்தப் பட்டது (Vatikiotis 1980:117-18). ஆனால் வெளிநாடுகளில், குறிப்பாக பிரான்ஸில் கல்விகற்ற எகிப்தியர்கள், சமுதாயத்தின் மேல்மட்டத்தினராக விளங்கினார்கள். அவர்கள் நாடு திரும்பியதும், ஓர் அதிகார மமதை கொண்ட அரச அமைப்பு மற்றும் முடியாட்சி முறையின் வரம்புக்குள் தொடர்ந்தும் பணியாற்றினர். இந்த நிலைமைக்கு எதிராக அவர்கள் சவால் விடுக்க வில்லை.

கேதிவ் இஸ்மாயில், தனது முன்னைய ஆட்சியாளரின் கல்விக் கொள்கைகளைத் தொடர்ந்தார். இதனால் பெண்களுக்கு ஓரளவு பயன் கிடைத்தது. 1873ஆம் ஆண்டில் அவரது மூன்றாவது மனைவி ஜேஷெம் அஃபெத் ஹனும் அவர்கள், சுய்ஃபிய்யா பெண்கள் பாடசாலையை ஆரம்பித்தார். விரைவிலேயே 400 மாணவிகளை இது பெற்றது. கணிதம், புவியியல், வரலாறு, சமயம், தையல் வேலை, மனைத்தோச்சி போன்றவற்றில் போதனைகள் நடந்தன. 1875இல் அரசாங்கம் மற்றுமொரு பாடசாலையை ஆரம்பித்தது. இது மேலைத்தேயப் பாணியிலான ஆரம்பக் கல்வியைச் சிறுமிகளுக்கு வழங்கியது. பெண் கல்வியின் நோக்கமானது சிறந்த தாய்மார்களாகவும் நல்ல மனைவிமார்களாகவும் இருக்கக் கூடிய வகையில் சிறுமிகளைத் தயார் செய்வதேயாயினும் இதனால் பயனடைந்தவர்கள் நகர்ப்புறத்து முதலாளித்துவக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளே (Abdel Kader 1973:118-19).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19ஆம் நூற்றாண்டின் கடைசித் தசாப்தங்கள், ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட ஏகாதிபத்தியத்தினதும் ஐரோப்பிய வல்லரசுகளுக்குமிடையே நடந்த போட்டாபோட்டியினதும் காலகட்டமாகும். இது எகிப்தின் மீது பிரிட்டனின் கட்டுப்பாட்டை மீண்டும் நிலை நிறுத்தியது. 1870ஆம் ஆண்டு கேதீவ் இஸ்மாயிலின் அரசாங்கம் நிதிப்பிரச்சினைக்கு முகங்கொடுக்க நேரிட்டதால், பல அரசியல் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. வங்குரோத்துத் தனத்தைத் தவிர்ப்பதற்காக, பொதுமக்களால் விரும்பப்படாத புதிய வரிகள் விதிக்கப்பட்டன. இவை பாமர விவசாய மக்கள் மீது பளுவைச் சுமத்தியது. சூயெஸ் கால்வாயில் கேதீவின் பங்குகள் பிரிட்டனுக்கு விற்கப்பட்டன. பிரிட்டிஷ், பிரெஞ்சு அதிகாரிகள் பொருளாதாரத்தை மேற்பார்வை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்கள்.

இக்காலப் பகுதியிலான பொருளாதார நிகழ்வுகள் எகிப்திய நகர்ப்புற மத்தியதர வர்க்கம் ஒன்றை உருவாக்கியது. ஐரோப்பிய அரசியல் சிந்தனை அவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தியது. இந்த வர்க்கமே ஒரு பிரபலமான தேசிய இயக்கத்தின் அடிப்படையாகியது. கேதீவின் ஆட்சி மீது அதிருப்தியும், வெளிநாட்டுக் கட்டுப்பாடு மீதான வெறுப்பும். நிலைமையை மோசமாக்கின. 1882ஆம் ஆண்டில் அராபி பாஷா தலைமையிலே, கிளர்ச்சி நிகழ்வதற்கு இவை காரணமாயின. ஆங்கிலேய, பிரெஞ்சுப் படைகள் இதனை நசுக்கின. எகிப்தை பிரிட்டிஷ் படைகள் ஆக்கிரமித்துக் கொண்டன. நீண்ட பல போராட்டங்களின் பின்னரே, 1922ஆம் ஆண்டில் பெயரளவில் சுதந்திரம் வழங்கப்பட்டது. எகிப்தியர்களுக்கு நிர்வாக அதிகாரம் வழங்கப் பட்டாலுங்கூட இராணுவ, அரசியல் கட்டுப்பாடு பிரிட்டிஷாரின் கரங்களிலேயே இருந்தன.

## அல் ஆப்கானியின் செல்வாக்கு

பிரிட்டிஷாரின் பகுதியளவிலான காலனியாக நாடு உருமாற்றம் அடைந் தமை, அத்துடன் தாராளச் சிந்தனையின் செல்வாக்கு, சீர்திருத்தத்திற்கான இயக்கம், தேசியப் பிரக்ஞையின் வளர்ச்சி ஆகியவை, 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எகிப்தில் நிகழ்ந்த அறிவுசார் விவாதங்களுக்குரிய பின் புலத்தை உருவாக்கிற்று. ஈரானில் பிறந்து, அவிசென்னாவின் பகுத்தறிவுவாத பாரம்பரியத்தில் கல்வி பெற்றுப் பிரபல்யமான தீவிரக் கிளர்ச்சிவாதியும், சமூகச் சீர்திருத்தவாதியும் முஸ்லிம் உலகின் கூட்டிணைப்பை ஆதரிக்கும் இஸ்லாமியவாதியுமான செய்யது ஜமால் அல்-டின் அல்-ஆப்கானி (1839-97) அக்காலத்து அறிவுத்துறையினர் மீது பெரும் செல்வாக்குச் செலுத்தினார். ஆப்கானி, இந்தியாவிலும் ஆப்கானிஸ்தானிலும் துருக்கியிலும் எகிப்திலும் ரஷ்யாவிலும் ஐரோப்பாவிலும் மாறி மாறி வாழ்ந்து வந்தார். இந்த நாடுகள் பலவற்றின் ஆட்சிகளுக்கு எதிரான அவரது கிளர்ச்சி நடவடிக்கைகள் காரணமாக, அவர் வெளியேற்றப்பட்டார். 1884ஆம் ஆண்டு பாரிஸ் நகரத்தில், பிரித்தானியாவிற்கு விரோதமாகவும் இஸ்லாமிய உலகக் கூட்டிணைப்பை ஆதரிக்கும் வகையிலுமான இஸ்லாமிய சஞ்சிகை ஒன்றை அவர் வெளியிட்டார். அரபு அறிவுத்துறையினர் மத்தியில் இச்சஞ்சிகை பெரும் செல்வாக்குடன் விளங்கிற்று. பிரெஞ்சுக் கல்வியாளர்களுடன் இஸ்லாம் பற்றிய சர்ச்சைக்குரிய விடயங்களைத் திறமையுடன் கலந்துரை யாடினர். ஈரானுக்குத் திரும்பிய அவர், ஈரானியச் சீர்திருத்தவாதிகளை ஒன்றிணைப்பதிலும், ஷாவைப் பதவிகவிழ்ப்பதற்கான சதிமுயற்சிகளிலும் சம்பந்தப்பட்டார். அதுபோலவே துருக்கியில் ஏகபோகங் கொண்ட முடியாட்சியையும் அவர் வன்மையாகக் கண்டித்தார். ஆப்கானி, பாரம்பரிய நம்பிக்கைகள் மற்றும் கட்டமைவுகள் ஆகியவற்றின் சீர்திருத்தத்தையும் ஆதரித்தார். ஆரம்ப காலத்துப் 'பரிசுத்தமான' இஸ்லாத்துக்குத் திரும்பிச் செல்ல வேண்டுமென அவர் வாதிட்டார். இஸ்லாத்தைச் சரியான முறையில் பொருள் விளக்கிக் கூறுவோமேயானால், அது சித்தாந்தவியல் அடிப்படையில் சமூக முன்னேற்றத்துக்கும், அனைத்து முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்துவதற்கும் ஆற்றல் கொண்ட ஒரு பகுத்தறிவுள்ள சமயமாகக் காணப்படும் என்று அவர் விளக்கினார். அவர், சமுதாயத்தில் நிலவிய சமய மற்றும் தீவிரப்போக்குள்ள சக்திகளின் நேச அணிகளை ஊக்குவித்து, நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறை மற்றும் ஊழல்மிக்க அரசாங்கங்கள் என்பனவற்றை எதிர்த்தார். இஸ்லாத்தைச் சீர்திருத்துவதில் அவரது பங்கை குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.

> ஐரோப்பாவினால் தாக்கப்பட்ட அனைத்து நாடுகளிலுமுள்ள மக்களைப் போலவே, எகிப்திய மக்களும் ஐரோப்பாவின் வெற்றிக்கான இரகசியத்தை தேடிக் கொண்டிருந்தார்கள். ஜமால் அல்-டின் (அல்-ஆப்கானி) இந்த இரகசியத்திற்கு திறவுகோல், நவீன விஞ்ஞானமும் தொழில்நுட்பமுமே என்று நம்பினார். பூர்வீக இஸ்லாம், பகுத்தறிவும் நியாயமானதுமான சமயமாகும். பின்னர் அது முற்றுமுழுவதாகத் திரிபுபடுத்தப்பட்டு மிகுந்த கண்டிப்புடனான பாணியில் கடைப்பிடிக்கப்பட்டது. அந்த நிலை மாறி, பண்டைய இஸ்லாத்துக்குத் திரும்பிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதன் மூலம் முஸ்லிம் உலகம் தன்னைப் புதிய நிலைமைகளுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்வதைச் சாத்தியமாக்கும். *பழைய கட்டமைவுகளைக் கெட்டியாக்குவதன் மூலம் பயனடைந்த ஐரோப்பிய வல்லரசுகள் அக் கட்டமைவுகளை ஆதரித்து வந்தனர். எனவே இஸ்லாம் தூய்மைப்படுத்தப்பட வேண்டுமேயானால் முஸ்லிம் உலகின் சுதந்திரமும் ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிரான போராட்டமும் அவசியமானதாகும்* (Rodinson 1979:79)

ஆப்கானியின் ஏகாதிபத்திய விரோத கொள்கைப்பற்றும், தேசியவாத நிலைப்பாடும், சோஷலிசத்தின்பால் அவர் கொண்டிருந்த சார்பு நிலையும் 19ஆம் நூற்றாண்டின் முஸ்லிம் சீர்திருத்தவாதிகளுள் மிகவும் எழுச்சி யூட்டுகின்றவராக அவரை ஆக்கின. 'மேற்கு நாடுகளைத் தடுத்துத் தள்ளி வைக்க வேண்டுமேயானால் இஸ்லாத்தை ஐக்கியப்படுத்த வேண்டும்' என்ற அவரது அழைப்பு, முஸ்லிம் உலகின் பலவர்க்கத்தினரிடையே கவன ஈர்ப்பை ஏற்படுத்தியது (Keddie 1981 :189, 65).

ஆப்கானியின் கருத்துக்கள், முஸ்லிம் நாடுகளில் அவருக்குப் பல ஆதரவாளர்களைப் பெற்றுத் தந்தன. முஸ்லிம் சமுதாயங்களை நவீனமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல், மேலைத்தேய விஞ்ஞான தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல், ஐரோப்பிய ஏகாதிபத்திய ஆதிக்கம் மற்றும் சுரண்டலை எதிர்த்து நிற்கக் கூடிய சக்திவாய்ந்த இஸ்லமிய சாம்ராஜ்யத்தை ஒரு குடையின் கீழ் ஸ்தாபித்தல் ஆகியவை பற்றி அவர் வெளியிட்ட கருத்துக்கள் இளம் சீர்திருத்தவாதிகளைப் பெரிதும் கவர்ந்தன. எகிப்து, துருக்கி, ஈரான் ஆகியவற்றில் அநேகமான முக்கிய அறிவுத்துறையினர்கள், அவரது துணைவர்களாகவும் வழித்தோன்றல்களாகவும் மாறினர். எகிப்தில் ஆப்கானியின் செல்வாக்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு முனைப்பானது. 1871ஆம் ஆண்டில் அவர் கெய்ரோவில் வாழ்ந்து, அல் அஸார் பல்கலைக்கழகத்தில் கற்பித்தார். அவரது தேசியவாதமும் - மேலைத்தேய முறைமைகளை ஏற்றுக் கொள்வதன் மூலம் ஐரோப்பிய ஆதிக்கத்தை எதிர்த்து நிற்க முடியும் என்ற அவரது கருத்துக்களும் பெரும் பிரபல்யம் பெற்றன. இக் கருத்துகள், 1882ஆம் ஆண்டு பிரிட்டிஷாருக்கு எதிராக அராபி பாஷா கிளர்ச்சி செய்வதற்கும் தூண்டியது.





## ஆண் சீர்திருத்தவாதிகளும் பெண்களின் உரிமைகளும்

எகிப்தில் தேசியவாதம் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வளர்ச்சி கண்டது. என்றாலும், எந்தவிதமான கடும்போக்கு வடிவத்தையும் அது எடுக்காமல், நடைமுறையில் இருந்த கட்டமைப்புக்குள்ளேயே இயங்கி வந்தது. பல மிதவாத சீர்திருத்தவாதிகளும் தேசியவாதிகளும் தோன்றினர். இவர்களில் ஒருவர் முஸ்தபா கமால் (1874-1908) ஆவார். இவர் பிரான்ஸில் கல்வி கற்றவர். பிரெஞ்சு மொழி, பிரெஞ்சுப் பண்பாடு மீது ஆர்வமும் பற்றும் கொண்டவர். திறமைமிக்க எழுத்தாளரும் பேச்சாளருங்கூட. எகிப்திற்கு அரசியல் யாப்பு சார்ந்த அரசாங்கம் மற்றும் சுதந்திரம் என்பவற்றைக் கோரிய, தேசியக் கட்சியை உருவாக்கியவர். ஆயினும் இந்த இயக்கம் பழமைவாத சமயத் தலைவர்களுடனும் ஆட்சியில் இருந்த கேதீவுடனும் ஒத்துழைத்தது. அதேசமயம் பிரிட்டிஷாருக்கு எதிரான பிரெஞ்சு நலன்களையும் ஆதரித்தது. கமால் ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியிலும் 'அல் -லெவா' என்ற செய்தித்தாளை வெளியிட்டார். 'அவர் கல்வியறிவுள்ள எகிப்தியர்கள் மத்தியில் பெரும் சக்தி வாய்ந்த செல்வாக்கைப் பெற்றிருந்தார். *அல் -லெவா* மூலம் சுயாதீனமான தேசியப் பாடசாலைகள் பலவற்றை ஆரம்பிப்பதற்குப் போதிய அளவு பணத்தைத் திரட்டினார். இவை பள்ளி மாணவ தீவிரவாதத்தின் விளைகளமாகியது (Little 1967:62). கமால், பெண்களின் விடுதலை பற்றிய எத்தகைய கருத்தையும் எதிர்த்தார். ஆனால் அவரது சமகாலத்தவர்கள் பெண் விடுதலைக்குச் சார்பாகச் செயற்பட நேரிட்டது.

19ஆம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதி, அறிவுசார் விவாதங்களும் சீர்திருத்தவாதச் செயல்களும் நிரம்பிய காலகட்டமாக விளங்கியது. எகிப்திலும் பெண்கள் உரிமை பற்றிய விவாதம் நடந்தது. இதனை முதன்முதலில் ஆதரித்த சீர்திருத்தவாதிகள் ஆண்கள் என்பது வியப்புக்குரிய விடயமல்ல. 1855ஆம் ஆண்டில் *'வன் லெக் க்றொஸ்ட் ஓவர் தி அதர்'* என்ற நூலை எழுதிய அஹ்மத் ஃபாரெஸ் எல் ஷித்தியாக்கும் இவர்களில் ஒருவர். பெண்கள் விடுதலையை ஆதரித்து வெளியிடப்பட்ட நூல்களில் இது முதலாவதாகும். ரிஃபா ராபி எல்-தஹ்தாவி (1801-71) போன்ற ஏனையவர்கள் பெண்களுக்குக் கல்வி புகட்டுவதன் தேவை, பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு நிவாரணம் வழங்குதல் என்பனவற்றின் அவசியம் பற்றி எழுதினார்கள். தஹ்தாவி ஒரு உயர்மட்ட அரச அதிகாரி. 1826 முதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1831 வரை பாரிஸில் கல்வி பயின்றவர். தலைசிறந்த எகிப்திய அறிவுஜீவியாகவும் சீர்திருத்தவாதியாகவும் விளங்கினார். பிரான்ஸில் வோல்டேயர், ரூஸோ, மொண்டெஸ்கியோ போன்றவர்களின் எழுத்துக்களால் இவர் ஆகர்ஷிக்கப்பட்டார். எகிப்திற்குத் திரும்பிய அவர், கல்வியை நவீனமாக்கும் இயக்கத்தின் ஓர் அங்கமானதுடன், மொழிபெயர்ப்பாளர்கள், மதியுரைஞர், நிர்வாகிகள் போன்றோருக்குப் பயிற்சி அளித்த 'மொழி களுக்கான பாடசாலை'யை 1835ஆம் ஆண்டில் நிறுவுவதற்கும் உதவினார். தஹ்தாவி தன்னுடைய எழுத்துக்கள் மூலம் அரசியலிலும் சட்டத்திலும் மதச் சார்பின்மைக் கருத்துக்களையும், சுதந்திரம் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய கருத்துக்களையும் பிரபல்யப்படுத்தினார்.

> ஐரோப்பிய அரசியல் நிறுவகங்களின் முக்கிய கோட்பாடுகள், அறிவூட்டல் கருத்துகள், பிரெஞ்சுப் புரட்சி பற்றிய பொதுவான கருத்துகள் ஆகியவை பற்றித் தனது சக தேசத்தவர்களிற்குக் கிரமமாகவும் அறிவுபூர்வமாகவும் விளக்கிக் கூறிய முதலாவது எகிப்தியர் அவராவார். யாவற்றுக்கும் மேலாக, நாகரிகமுற்ற சமுதாயத்தின் விசேஷ பண்புகளாக வெளிப்படுத்த வேண்டிய சட்ட ஆட்சி, நிலையான ஒழுங்கு என்பன பற்றிய கருத்துக்களையும், அவர் முன்வைத்தார் (Vatikiotis 1980:115)

தஹ்தாவி, எகிப்தில் மகளிர் கல்வியின் முன்னோடியாக இருந்தார். அவர் 1872ஆம் ஆண்டில் வெளியிட்ட "*பெண்களுக்கும் ஆண்களுக்குமான கல்விக்கு வழிகாட்டி*" என்ற நூலில் பெண்களுக்கான கல்வியின் அவசியம் பற்றித் தனது கருத்துக்களைத் தெரிவித்தார். பெண்கள் பற்றிய விவாதம் முழுமூச்சாக நடந்த காலமது. பெண்களின் சுதந்திரம் சம்பந்தமாக, மிக நுணுக்கமான பலதரப்புக் கருத்துக்களும் பெறப்பட்டன. தேசியவாதிகள் இவ்விடயத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அனைவரது வாழ்வையும் நேரடியாகப் பாதிக்கின்ற ஒரு இன்றியமையாத விவகாரமாக இது விளங்கியது. இந்த விடயம் தொடர்பாக அதிக அளவில் வெளிவந்த நூல்களும் கட்டுரைகளும் அதன் முக்கியத்துவத்திற்கு சான்று பகர்கின்றன (Philipp 1978:278).

அநேகமான ஆசிய நாடுகளில் உள்ளது போலவே, பெண்களை அடிமைப்படுத்தி வைத்து இருப்பது சமயக் கோட்பாடுகள் அல்ல, ஆனால் சமயம் பற்றிய பிழையான விளக்கங்களே. அத்துடன், ஊழல் மிக்க நடவடிக்கைகளும், மூல மதத்தை மாசுபடுத்தும் வகையில் பிற்காலத்தில் இணைக்கப்பட்ட முரண்பாட்டு அம்சங்களுமேயாகும் என்பதை எடுத்துக்





காட்டுவதற்கு எகிப்திய சீர்திருத்தவாதிகளும் முயன்றார்கள். முஸ்லிம் சீர்திருத்தவாதிகள் சமயம் பற்றியும் இஸ்லாத்தில் பெண்களின் உரிமைகள் பற்றியும் விவாதங்களை ஆரம்பித்தார்கள். இத்தகைய முன்னோடிகளில் ஷெய்க் மொஹமட் அப்துா (1849-1905) என்பவரும் ஒருவர். இவர் பாரிஸில் கல்வி கற்றவர். ஆப்கானியின் செல்வாக்குக்கு உட்பட்டவர். அப்துாவும் ஆப்கானியும் இணைந்து எகிப்தில் சுதந்திர தேசியக் கட்சியை உருவாக்கினர். இந்தக் கட்சி பல பிரபல்யமான படை வீரர்கள், அதிகாரிகள், ஆசிரியர்கள் ஆகியோரைக் கவர்ந்தது. ஆயினும் முஸ்லிம் உலகின் கூட்டிணைப்பை ஆதரிக்கும் இஸ்லாமியவாதம் பற்றிய இக்கட்சியின் கருத்துக்கள் அதிகாரிகளின் ஆதரவைப் பெறவில்லை. எனவே அவர்கள் அக்கட்சியை அடக்கி ஒடுக்கியதுடன் 1879இல் ஆப்கானியையும் 1882இல் அப்துாவையும் வெளியேற்றினார்கள். இவர்கள் இருவரும் மீண்டும் பாரிஸில் ஒன்றிணைந்து *அல்-உர்வாத் அல்-வுத்குவா* (பிரிக்கவொண்ணாத பிணைப்பு) என்ற சஞ்சிகையை வெளியிட்டனர். இது இஸ்லாமிய நாடுகளில் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டைக் கண்டித்தது. இஸ்லாமியப் புத்தெழுச்சிக்கு அறைகூவல் விடுத்தது. எகிப்தில் இந்தச் சஞ்சிகைக்குத் தடை விதிக்கப்பட்ட போதிலும் அது விரிவான விநியோகத்தையும் செல்வாக்கையும் பெற்றது. எகிப்திற்குத் திரும்பிய அப்துா, ஒரு பிரபல்யமான சீர்திருத்தவாதியாகி, தனது செல்வாக்கிற்குட்பட்ட அறிவாற்றலுள்ள தேசியவாதிகள் தலைமுறை ஒன்றை உருவாக்கினார். இக்காலத்தின் ஏனைய பல சீர்திருத்தவாதிகளைப் போலவே அவரும் ஓர் புரட்சிகர சீர்திருத்தவாதியாக அல்லாமல் அடிப்படையிலேயே ஒரு மிதவாதியாக விளங்கினார். 'எகிப்திய சமுதாயத்தில் படிப்படியாக மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஓர் கல்வித் திட்டத்தைக் கருவியாகக் கொண்டு - இலவசப் பல்கலைக்கழகங்கள், நலன்புரிச் சங்கங்கள், இன்னமும் பிரித்தானியரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் எகிப்திய அரச அமைப்பின் உறுப்புக்கள் என்பவை மூலம் - அக் கல்வியானது மக்களைச் சென்றடைந்து அவர்களிடையே மெதுவாக மாற்றங்களை ஏற்படுத்தும் என்ற நோக்கத்தை அவருடைய சித்தாந்தம் கொண்டிருந்தது' (Rodinson 1979:24).

அப்துா பெண்களின் அந்தஸ்து பற்றி வெளிப்படையாகப் பேசினார். பலதார மணம் இஸ்லாத்திற்கு விரோதமானது எனக் கண்டனஞ் செய்தார். பெண்களின் அடிமைத்தனம், வைப்பாட்டி வைத்திருத்தல் போன்ற நடைமுறைகள் இருந்து வருவதையும் கண்டித்தார். மகளிர் கல்விக்குச் சாதகமாகத் திருக்குர்ஆனை மேற்கோள் காட்டிய அவர், அரபுப் பெண்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்தங்கிய நிலைமை, அரபு மக்களினங்களின் எதிர்காலத்திற்குக் குந்தகம் ஏற்படுத்தும் என்று தெரிவித்தார் (Philipp 1978:278). அவர் கூறியதாவது:

> எமது புதல்விகள் கல்வி கற்றிருக்க வேண்டுமென விரும்புகின்றோம். "அவர்களிடமிருந்து நாம் எவற்றை எதிர்பார்க்கின்றோமோ, அவற்றையே அவர்களுக்கும் உரியதாக்க வேண்டும்" என எல்லாம் வல்ல அல்லாஹ் விளக்கினார். வாழ்க்கை, சமயம் ஆகியவற்றில் ஒரே மாதிரியான கடமைகளை நிறைவேற்றுவதில் ஆண்களும் பெண்களும் சமமான பங்கேற்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தும் அநேகமான இறைவாசகங்கள் உள்ளன (El-Saadawi 1980:171)

அப்துா நவீன சிந்தனையின் பின்னணியில், திருக்குர்ஆனை நெகிழ்வாக விளக்கிக் கூறுவதில் முன்னோடியாக விளங்கினார். இந்தோனேசியா உட்பட ஏனைய முஸ்லிம் நாடுகளிலும் அவரது ஆக்கங்கள் பிரபல்யம் பெற்றன. அப்துா போன்ற சீர்திருத்தவாதிகள் மதத்தைக் கண்டிப்பதற்குப் பதிலாக சமயத்திலிருந்து அரசியல் பிரச்சினைகளைப் பிரிப்பதற்கு முயன்றார்கள். காலத்திற்கு ஏற்ற வகையில் பாரம்பரிய வாசகங்களுக்குப் புதிய விளக்கங் களைக் காண எத்தனித்தார்கள். பூர்வீக இஸ்லாத்தின் தூய்மைக்குத் திரும்ப வேண்டும் என்று கோரிய 'சலாஃபியா இயக்கத்தை', அப்துா ஸ்தாபித்தார். இஸ்லாத்தின் போதனைகளை நவீன விஞ்ஞானத்தின் அடிப்படைக்கு ஏற்ற வகையில் விளக்கவேண்டும் என்று அவர் கோரினார். ஆனால் எகிப்தில், வெளிநாட்டு ஆக்கிரமிப்பை மாத்திரமன்றி மேலைத்தேய நாகரிகத்தின் பிரவேசத்தையும் எதிர்த்த சமயத் தலைவர்களும் பழமைவாதிகளும் அவரை வன்மையாகக் கண்டித்தனர். இருந்தபோதிலும் அவர் தனது கருத்துக்களைப் பரப்புவதில் பின்வாங்கவோ, தயங்கவோ இல்லை. பெண்களின் பின்தங்கிய நிலைமைதான் அரபி மக்களின் பலவீனத்திற்கும் மந்தமான தன்மைக்கும் முக்கியமான ஊற்றுக் கண்ணாகும் என்று அவர் தெரிவித்தார் (El-Saadawi 1980:171).

அப்துாவின் வழித்தோன்றலான காசீம் அமீன் (1865-1908) பிரான்ஸில் கல்வி கற்றவர். இவர் தொழிலால் நீதிபதி ஆவர். "*தஹ்ரீர் அல் மாரா*" (பெண் விடுதலை) என்ற நூல் மூலம் 1899இல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார். சமய நூல்களின்படி பெண்கள் ஒதுக்கப்படுவதும், முக்காடு அணிவதும், ஒழுங்கு செய்யப்பட்ட திருமணங்களும், நடைமுறையில் இருந்த விவாகரத்து முறைகளும் இஸ்லாத்துக்குரியவையல்ல என்று அமீன் வாதிட்டார். அவர், பெண்கள் தொழில் புரிவதற்கான உரிமையையும், அவர்தம் அந்தஸ்தை உயர்த்துவதற்கான சட்டச் சீர்திருத்தங்களையும் ஆதரித்தார்.





'பெண்களின் நிலையை மேம்படுத்தாமல் நாட்டின் நிலை மேம்படாது' என்று அவர் வலியுறுத்தினார் (Philipp 1980:279). குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவதில் மாத்திரமன்றி பரஸ்பர மரியாதையின் அடிப்படையில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே சிறந்த உறவை ஏற்படுத்துவதிலும், பெண்களுக்கான கல்வியின் முக்கியத்துவத்தை அமீன் வலியுறுத்தினார் (Abdel Kader 1973 : 11). எதிர்பார்த்தபடி அவருடைய நூல், தீவிரப் போக்குள்ள முஸ்லிம் வட்டாரங்களில் கண்டிக்கப்பட்டதுடன், அவரது கருத்துக்களும் நிராகரிக்கப்பட்டது. பெண் விடுதலை பற்றிய பிரச்சினைகளால் வெளிநாட்டு ஆதிக்கத்திற்கு எதிரான இயக்கம் பலவீனமாக்கப்பட்டு திசை திருப்பப்பட்டு விட்டன என்று தேசியவாதிகளும் கூட அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். காஸிம் அமீன் தனது இரண்டாவது நூலான *அல்-மாரா அல் ஜடிடா*வில் (புதிய பெண்) அதற்குப் பதிலளித்து வாதிக்கும்போது, சமய ஆதாரங்களை விட, இயற்கையான உரிமைகள் பற்றிய தத்துவக் கோட்பாடுகள் மற்றும் முன்னேற்றம் பற்றிய கருத்தமைப்பு போன்றவற்றையே அடிப்படை ஆதாரமாகக் கொண்டு வாதித்தார் (Philipp 1978:279).

லுட்ஃபி அஹ்மத் எல்-சயித் (1872ல் பிறந்தவர்) போன்ற ஆண் சீர்திருத்தவாதிகளும், லுட்ஃபி ஆசிரியராக விளங்கிய *அல் கரீடா* செய்தித்தாளில், பெண் உரிமைகள் பற்றிய தமது தாராளக் கருத்துக்களைத் தெரிவித்த புத்திஜீவிகள் குழுவினரும் இந்த விவாதத்தை மேலும் முன்னெடுத்துச் சென்றார்கள் (El-Saadawi 1980:172). மதச்சார்பற்ற சீர்திருத்தம் மற்றும் மதப் பழமைவாதம் பற்றிய விவாதத்தைப் பின்புலமாகக் கொண்டு, பெண்களின் நிலைமை பற்றிய இந்தக் கலந்துரையாடல் நிகழ்ந்தது. ஆப்கானியை நன்கு அறிந்திருந்த லுட்ஃபி எல்-சயீத் ஒரு தாராளப் போக்குள்ள எழுத்தாளரும் ஆசிரியருமாவார். இவர் எகிப்தில் இருந்து பிரிட்டிஷார் வாபஸ் பெறுவதை மாத்திரமன்றி, கேதீவின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தார். மதச்சார்பற்ற அரசை ஆதரித்த அவர், நாட்டு முன்னேற்றத்தை இஸ்லாத்தின் மறுசீரமைப்போடு சம்பந்தப்படுத்தவில்லை. அக்காலகட்டத்தின்போது, மற்றுமொரு புத்தி ஜீவியாக விளங்கிய தாஹா ஹுசைன் போலவே, இவரும் அல் அஸார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தைச் சீர்திருத்தவும் நவீனமாக்கவும் விளைந்தார். இது பற்றிய கருத்துக்களை *வீக்லி பொலிட்டிக்ஸ்* என்ற சஞ்சிகையில் தெரிவித்தார். அவை, அல் -அஸாரைக் குறைகூறியது மட்டுமன்றி, சமயமும் அரசியலும் வெவ்வேறுபடுத்தப்படல் வேண்டும் என்பதையும் ஆதரித்தது (Little 1967:129).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசியவாதமும் பெண்களின் ஆர்ப்பாட்டமும்

இந்த நூற்றாண்டின் திருப்பத்தில் தேசியப் பிரக்ஞை வளர்ந்தோங்கியது. சஆத் சாக்லுல் தலைமையிலான அரசியல்வாதிகளின் குழு ஒன்று தோன்றி, எகிப்திற்குச் சுயநிர்ணயம் கோரியது. முதலாம் உலக மகா யுத்தத்திற்குப் பின்னர், நேசநாடுகளின் வெற்றியைத் தொடர்ந்து, எகிப்தின் அரசியல் வருங்காலப் பிரச்சினை எழுப்பப்பட்ட போது இந்தக் கோரிக்கைகள் தீவிரமடைந்தன. சாக்லுலும் அவரது எகிப்திய‌ச் சட்டத்தரணிகள் குழுவும், அதிகாரிகளும், நிலச்சொந்தக்காரர்களும் வர்த்தகம் மற்றும் பருத்தித் தொழிலில் ஆர்வங்கொண்டவர்களும் ஒன்று கூடி தூதுக்குழு ஒன்றை அமைத்து, பிரிட்டிஷாரிடம் எகிப்தின் நிலைப்பாடு பற்றிய வாதவிபரத்தைச் சமர்ப்பித்தனர். வாஃப்த் கட்சியாகத் தோற்றம் பெற்ற இந்தக் குழு புத்திஜீவிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், விவசாயிகள் மற்றும் பெண்களின் ஆதரவைப் பெற்றிருந்தது. பிரிட்டிஷார் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மறுத்து, வாஃப்த் தலைவர்களை நாடு கடத்தினார்கள். இது ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்கள், படுகொலைகள் ஆகியவற்றை ஏற்படுத்தின. இந்நிகழ்வுகளின் விளைவாக, 1922ஆம் ஆண்டில் எகிப்தை ஒரு சுதந்திர நாடாக பிரிட்டன் அங்கீகரித்தது. ஆனால் அது சூடான், எகிப்தின் பாதுகாப்பு, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடனான தொடர்புகள், வெளிநாட்டு விவகாரங்கள் ஆகியவற்றைத் தமது முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. சிரமங்கள் மலிந்த காலகட்டத்திற்குப் பின்னர் ஒரு புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டது. 1924ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் வாஃப்த் கட்சி எகிப்திய பாராளுமன்றத்தில் 90 சதவீதமான ஆசனங்களைக் கைப்பற்றியது. சாக்லுல் அரசாங்கத்தை அமைத்தார். முதலாவது ஃபுவாத் மன்னரானார்.

முதலாம் உலக மகா யுத்தத்திற்கு முன்னரும் பின்னரும் எகிப்தில் பெண்களின் செயற்பாடுகள் தோன்றியமைக்கு இதுதான் அரசியல் பின்னணியாக விளங்கியது. தொடக்க காலத்தில், மதச்சார்பின்மையின் ஆதரவாளர்களான சாஆத் சாக்லுலும் அவரது குழுவினரும் பெண்கள் கல்வியை ஊக்குவிப்பதற்குச் சார்பானவர்களாக இனங்காணப்பட்டவர்கள் ஆவர். அத்துடன் செல்வாக்குள்ள அநேக பெண் எழுத்தாளர்களும் 20ஆம் நூற்றாண்டின் முதலாவது தசாப்தங்களின் போது பெண்ணியப் பிரச்சினைகள் பற்றி விரிவாக எழுதுவதற்குத் தமது அறிவுத் திறனைப் பயன்படுத்தினார்கள். அவர்களில் மலாக் ஹிஃப்னி நாசிஃபும் (1886-1918) ஒருவர். இவர் தனது





காலத்தில் மிகவும் சக்தி வாய்ந்த எழுத்தாளராக விளங்கினார். பஹிஸ்ஸத் எல் பாடியா (பாலைவனத்தில் தேடுபவர்) என்ற புனைபெயரில் அவர், திருமணம், விவாகரத்து, முக்காடு அணிவித்து தனிமைப்படுத்தல், பெண்களின் கல்வி ஆகியன பற்றி அக்கால ஏடுகளில் எழுதினார். அரபுக் கற்கைகளில் பல்கலைக்கழக விரிவுரையாளராக விளங்கிய அவரது தந்தையார், மொஹமட் அப்துாவின் சிஷ்யராவார். 1900ஆம் ஆண்டில் ஆசிரியையாகத் தகுதி பெற்ற முதலாவது எகிப்தியப் பெண்களில் ஒருவராக நசீஃப் விளங்கினார். அவர் தனது திருமணத்திற்குப் பின்னர் கெய்ரோவிலிருந்து வெளியேறி பாலைவனத்திற்கு அருகே வாழ்ந்து வந்தார். அங்கிருந்து அவர், பெண்கள் தனிமைப்படுத்தப்படுவதையும் ஆணாதிக்கச் சமுதாயத்திற்கு அடிமைப்பட்டு இருப்பதையும் கண்டிக்கத் தொடங்கினார். தனது கணவனின் பலதார மணத்தினால் பாதிக்கப்பட்டவர் என்ற வகையில் அதன் கொடுமைகள் பற்றி மிகத் தெளிவாக விளக்கிப் பேசினார். 1911ஆம் ஆண்டு, பெண்களின் நிலைமையை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை முன்வைத்து, எகிப்திய சட்டசபையில் உரையாற்றும் அளவிற்கு அவரது புகழ் மேலோங்கியிருந்தது. சமயக் கல்வி, சுகாதாரம், முதலுதவி, குழந்தை வளர்ப்பு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதுடன் சிறுமிகளுக்கு முழுநிறைவுள்ள ஆரம்பக் கல்விக்கான கோரிக்கையும் இத்திட்டத்தில் அடங்கியிருந்தது. அதுபோலவே பெண்கள் தமது மருத்துவ மற்றும் கல்வித் தேவைகளை நிறைவேற்றும் வகையில் மருத்துவர்களாகவும் ஆசிரியர்களாகவும் பயிற்றுவிப்பதற்கான திட்டமும் இதில் உள்ளடங்கி இருந்தது. எல் பாடியாவின் எழுத்துக்களை அவரது காலத்து ஆண் சீர்திருத்தவாதிகள் பெரிதும் பாராட்டினர். பெண் விமோசனம் பற்றிய அவரது கருத்துக்களுக்கு காஸிம் அமீன் ஆதரவு வழங்கினார். லுட்ஃபி எல்-சயீத் 'இதே காலத்தில் வாழ்ந்த பல ஆண் எழுத்தாளர்களையும் விஞ்சிய பெண் எழுத்தாளர்களிற்கு, எல் பாடியா ஒரு உண்மையான உதாரணம் என்று கூறினார்' (El-Saadawi 1980:172).

அக்காலத்தில் சிறப்புற்று விளங்கிய மற்றுமொரு பெண் எழுத்தாளர் மே சியாதா. அவர் 1915-16இல் கெய்ரோவில் இலக்கிய ஒன்றுகூடலை நடத்தினார். சுதந்திரமான வாழ்க்கையை மேற்கொண்டார். 'எகிப்திய சமுதாயத்தில் பெண்களின் முகத்தை இன்னமும் திரைகள் மூடியிருந்த காலகட்டத்திலே, ஆண்களுடன் கலந்து சுதந்திரமாகப் பேசுவதன் மூலமும் அவர்களுடன் கிரமமாகத் தொடர்புகளைப் பேணுவதன் மூலமும் எகிப்திய இலக்கிய வட்டங்களில் தனது ஆளுமையை அவரால் நிலைநாட்ட முடிந்தது' (El-Saadawi 1980:122). பெண்களின் சஞ்சிகைகள் பரவியமையும் பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகள் பற்றி எழுதிய பெண்களின் எண்ணிக்கை அதிகரித்தமையும் தெட்டத் தெளிவாக இருந்தன. 1914ஆம் ஆண்டுக்கு முன்பதாக அராபிய பெண்களுக்காக 15 சஞ்சிகைகள் இருந்தன. இவற்றில் அநேகமானவற்றை சிரியாவைச் சேர்ந்த கிறிஸ்தவப் பெண்களே வெளியிட்டனர் (Philipp 1978 : 280).

தர்மப் பணியாற்றுவது நடுத்தர வர்க்கப் பெண்களின் மற்றுமொரு செயற்பாட்டுத்துறையாகும். உதாரணமாக, உயரதிகாரியின் மகளும் பிரெஞ்சுக் கன்னியாஸ்திரிகள் மடத்தில் கல்வி பெற்றவரும் திருமணத்தின் மூலம் தேசியவாதத் தலைவர் சஆத் சக்லுலுக்கு உறவினராகியவருமான ஹிதியா அஃபிஃபி (1898-1969), சுகாதாரம் சம்பந்தமான தர்ம ஸ்தாபனங்களின் பணியில் பிரபல்யம் பெற்று விளங்கினார். 1909இல் ஏனைய செல்வந்தப் பெண்களுடன் இணைந்து *மபாரத் முஹமட் அலி* என்ற அமைப்பை உருவாக்கினார். இது பெண்களுக்கான சிகிச்சை நிலையங்கள் பலவற்றை நடத்தியது. 1919ஆம் ஆண்டு இதே குழு பெண்களுக்கான பாடசாலைகள், அநாதை இல்லங்கள், சிறார் நலன் நிலையங்கள் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட சோசியேற் த ல ஃபெம் நூவெல் (*Société de la Femme Nouvelle*) என்பதை உருவாக்கியது (Marsot 1978 : 272).

முதலாம் உலகப் போருக்குப் பின்னர், பிரிட்டிஷாருக்கு எதிரான தேசியவாத இயக்கத்தில் பெண்கள் பங்கேற்றதன் மூலம், அவர்களது பகிரங்கமான அரசியல் கிளர்ச்சியும் செயற்பாடும் ஆரம்பமாகின. பிரிட்டிஷாரின் அடக்குமுறையும், 1919ஆம் ஆண்டில் சக்லுலும் ஏனைய வாஃப்த் தலைவர்களும் நாடு கடத்தப்பட்டமையும், தீவிரப்போக்குள்ள தேசியவாதக் கிளர்ச்சியின் ஆரம்பத்திற்கு வழிவகுத்தது. இந்த அதிருப்தி, அரசியலில் மாத்திரமன்றி பொருளாதாரம் சார்ந்ததாகவும் இருந்தது:

> யுத்த காலத்தின் போது அதிருப்தி பெருகியது. நகரங்களில் பணவீக்கம் காரணமாக கீழ்மட்டத்தினர் பாதிக்கப்பட்டனர். கிராமங்களில் விவசாயக் கால்நடைகள் அரசால் பாவனைக்காக எடுக்கப்பட்டமை, கட்டாய உழைப்பு, விளைபொருட்களின் பறிமுதல் போன்ற நடவடிக்கைகள் காரணமாக. விவசாயிகள் கஷ்டப்பட்டனர். வரிப் பளு அதிகரித்தது. 1919ஆம் ஆண்டில் நடைபெற்ற பொது ஆர்ப்பாட்டங்களின் மூலம் பல்வேறு வர்க்கங்களின் அதிருப்தியும் விரக்தியும் வெளிப்பட்டன (Philipp 1978 : 288)

இந்தத் தேசிய எழுச்சியின் போது அதில் எல்லா வர்க்கங்களும் பங்கேற்றன. 1919ஆம் ஆண்டு நான்கு தடவைகள் பெண்களின் அரசியல்





ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. வாஃப்த் கட்சியின் ஸ்தாபகர்களது மனைவியர் களே பெண்களை அணிதிரட்டினார்கள். நடுத்தர வர்க்கப் பெண்கள் பகிரங்க மாக ஆர்ப்பாட்டம் நடத்தியதை முதல் தடவையாகக் காண முடிந்தது. குறிப்பாகச் செல்வந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஹுதா ஷாராவி (1882-1947) மிகத் தீவிரமாய்ச் செயற்பட்டார். வீட்டில் இருந்தவாறே அவர் பிரெஞ்சு, துருக்கி, அரபு மொழிகளில் கல்வி கற்றார். இவர் பரவலாக வாசித்துக் கற்றுணர்ந்தவர். 1910ஆம் ஆண்டு சிறுமிகளுக்குப் பொதுக்கல்வியை வழங்கும் பாடசாலை ஒன்றைத் திறந்தார். ஷாராவியின் கணவர் வாஃப்த் அமைப்பின் ஸ்தாபகர். இதனால் அவர் தேசியவாதிகளின் வட்டாரங்களில் பழக முடிந்தது . 1919ஆம் ஆண்டுக் கிளர்ச்சியின் போது அவர் பெண்களை ஆர்ப்பாட்டம் செய்வதற்காக அணிதிரட்டினார். ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதையும் எகிப்தியத் தலைவர்கள் நாடு கடத்தப்பட்டதையும் கண்டித்து பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகருக்குச் சமர்ப்பிக்கும் முகமாக மனு ஒன்றில் பெண்களின் கையொப்பங்களைச் சேகரித்தார்:

"பிரிட்டிஷாரின் பேராசைக்கும் சுரண்டலுக்கும் பலியாகியவர்களது அன்னையர், சகோதரிகள், மனைவியர் எகிப்தியப் பெண்களாகிய நாம், எகிப்திய இனத்தின் மீது திணிக்கப்பட்டுள்ள கொடூரமான காட்டு மிராண்டித்தனமான நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம். எகிப்து தனது விடுதலைக்கும் சுதந்திரத்திற்குமான அபிலாஷையைத் தெரிவித்ததைத் தவிர வேறெந்தக் குற்றத்தையும் இழைக்கவில்லை" (Fernea and Bezirgan 1977 : 193 - 6).

1919ஆம் ஆண்டின் ஆர்ப்பாட்டங்களில் பெண்களின் பங்கேற்பு பற்றிய பல சமகால விபரங்கள் உள்ளன. சேர் வலன்டின் ச்சிரோல் (அவரின் அபிப்பிராயப்படி நல்லவர்கள், தீயவர்கள் என்ற இரண்டு வகைப் பெண்கள் மாத்திரமே உள்ளனர்), *லண்டன் டைம்ஸில்* கீழ்கண்டவாறு எழுதினார்:

> 1919இல், பெருங் கொந்தளிப்பான காலகட்டத்தின் போது, பெண்கள் பெருமளவில் வீதிகளில் திரண்டு போராட்டத்தில் இறங்கினர். அவர்களில் உயர்வர்க்கத்தைச் சேர்ந்தோர் இன்னமும் முகத்திரையையும் நீண்ட கறுத்த தொளதொளத்த ஆடைகளையும் அணிந்திருந்தனர். அதே வேளை நகரின் அடிமட்டத்தைச் சேர்ந்த விலைமாதர்கள் கூட இந்த அரசியல் குழப்பநிலை என்ற தொற்றுநோயால் பீடிக்கப்பட்டு கேளிக்கையாக முகத்திரையின்றி தமக்குப் பழக்கப்பட்ட அலங்கார உடைகளுக்குப் பதிலாக, உடையால் மற்றோருடன் வேறுபடுத்த முடியாத அளவிற்கு சாதாரண உடை அணிந்து அணிவகுப்பில் கலந்து கொண்டனர். ஒவ்வோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொந்தளிப்பு நிறைந்த ஆர்ப்பாட்டங்களிலும் பெண்கள் முன்னிலையிலேயே இருந்தனர். அவர்கள் ஊர்வலங்களில் அணிவகுத்துச் சென்றனர் - சிலர் கால் நடையாகவும் மற்றையோர் வண்டிகளிலும். 'சுதந்திரம்', 'ஆங்கிலேயர் ஒழிக' என்ற கோஷமிட்டு, தேசியச் சின்னம் பொறித்த கொடிகளை அசைத்துக் காட்டினர் (Philipp 1978 :288-9)

இந்த ஆர்ப்பாட்டங்களில் நடுத்தர முதலாளித்துவ வர்க்கப் பெண்களும் மற்றும் வறிய வர்க்கத்துப் பெண்களும் சமூகமளித்திருந்தார்கள் என்பதை அநேக எழுத்தாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். வெளிநாட்டு ஆக்கிரமிப்பில் இருந்து சுதந்திரத்திற்காகவும் விடுதலைக்காகவும், 'முகத்திரை அணிந்த கெய்ரோவின் சீமாட்டிகள், வீதிகளில் அணிவகுத்துச் சென்றனர். அவர்கள் வேலை நிறுத்தங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் ஏற்பாடு செய்தனர். பிரிட்டிஷ் பொருட்களைப் பகிஷ்கரித்தனர். மனுக்களைத் தயாரித்தனர். எகிப்தில் பிரித்தானியர்களின் செயல்களை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர்' (Marsot 1978 : 269).

இந்த எழுச்சிப் போராட்டத்தில், 'முகத்திரை அணிந்த சீமாட்டிகள்' மட்டுமன்றி, 1919இன் போராட்டங்களின் போது கலந்துகொண்ட கைத் தொழில் மற்றும் விவசாயத் துறைகளின் உழைக்கும் வர்க்கப் பெண்களும் ஈடுபட்டிருந்தனர்:

> பிரித்தானியத் துருப்புக்களின் நகர்வுகளை செயலறச் செய்யுமுகமாக அவர்கள் ஆண்களுடன் சேர்ந்து கிராமியப் பாதைகளிலுள்ள தொலைபேசித் தொடர்புகளைத் துண்டித்து. ரயில் பாதைகளையும் தகர்த்தனர். எதிர்ப்பு எழுச்சிக்குத் தலைமை வகித்தோர் மற்றும் பங்குபற்றியோரைச் சிறைப்படுத்தி வைத்திருந்த திடீர் முகாம்களையும் சிறைகளையும் முற்றுகையிடும் நடவடிக்கைகளில் வேறு சிலர் பங்குபற்றினர். பிரித்தானியத் துருப்புகள் அவர்கள் மேல் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட போது பெண்கள் கொல்லப்பட்டதுடன் பலர் காயமுற்றனர். ஷஃபீக்கா மொஹமட் , ஹமீடா கலீல், சயிடா ஹசன், ஃபஹிமா ரியாட் மற்றும் அயிஷா ஒமார் போன்ற சிலர் அவர்களுள் அடையாளம் காணப்பட்டவர்கள் ஆவர். எனினும் பெயர்களைத் தேடிப் பிடிக்கமுடியாத அளவிற்கு நூற்றுக் கணக்கான வறிய பெண்களும் தம் உயிர்களைப் பலி கொடுத்திருந்தனர் ( El-Saadawi 1980 : 176)

எகிப்தில் 1920ஆம் ஆண்டுகளின் போது முதலாவது உலக மகா யுத்தத்திற்குப் பிற்பட்ட காலகட்டத்தில் அரசியல் மற்றும் கைத்தொழில் கொந்தளிப்பு நிலவிய வேளையில், கம்யூனிஸ்டுக்களும் சோஷலிஸ்





டுக்களும் சிறிய குழுக்களாக ஊக்கத்துடன் இயங்கி வந்தனர். இந்தக் காலப்பகுதியின் போது தொழிற்சாலைத் தொழிலாளர்கள், டிராம் சாரதிகள், பரிசாரகர்கள், விளக்கேற்றுவோர் மத்தியில் ஊதியம் தொடர்பாகவும் வேலை செய்யும் மணித்தியால எண்ணிக்கை தொடர்பாகவும் வேலை நிறுத்தங்கள் நடந்தன. கெய்ரோவிலும் அலெக்சாண்ட்ரியாவிலும் ஆரம்பமாகி, 1924இல் பொது வேலை நிறுத்தத்தில் இது முடிவடைந்தது. யோசப் ரொசந்தால் (யூத வம்சாவழியினரான அலெக்சாண்ட்ரிய வர்த்தகர்) 1920ஆம் ஆண்டில் சோஷலிஸ்ட் கட்சியை ஸ்தாபித்தார். 1922ஆம் ஆண்டில் இது கம்யூனிஸ்ட் கட்சியாகியது. இந்தக் கட்சியின் மீது சந்தேகக் கண்கள் படிந்ததால் அதன் தலைவர்கள் அடிக்கடி கைதானார்கள். கம்யூனிஸ்ட் கட்சி நகர்ச்சூழலை ஆதாரமாகக் கொண்டிருந்தது. அது அறிவுத்துறையினர், தொழில் வல்லுனர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் ஆகியோரின் இயக்கமாகவே விளங்கியது. அதன் தலைமைத்துவம் பிரதானமாகச் சிறுபான்மையினரின் ஆதரவிலேயே தங்கியிருந்தது. இந்த இயக்கத்தின் தலைமைத்துவத்தில் குறைந்தது ஒரு பெண்மணியும் இருந்துள்ளார் என்பதற்கு ஆதாரமும் உண்டு. உதாரணமாக 1925ஆம் ஆண்டில் கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்ட போது யோசப் ரொசன்தாலின் மனைவி சார்லட் ரொசன்தாலும் அவர்களுள் அடங்கியிருந்தார் (Laqueur 1956 :36).

## ஹுதா ஷராவி

ஆரம்பக் கட்டத்தைச் சார்ந்த பெண்கள் தீவிரவாதம் மங்கி மறைந்ததும் 1923ஆம் ஆண்டில் ஹுதா ஷராவியும் ஏனைய நடுத்தர வர்க்கப் பெண்களும் எகிப்திய பெண்ணியச் சங்கத்தை உருவாக்கினர். அது கல்வி, சமூக நலம், தனியார் சட்டத்தில் மாற்றங்கள், ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே சமத்துவத்தை ஏற்படுத்தல் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட பிரதான பெண்கள் சங்கமாகியது. 1924ஆம் ஆண்டு ரோம் நகரில் நடந்த சர்வதேச பெண்கள் மாநாட்டில் கலந்து கொண்டு பின்னர் நாடு திரும்பிய அவர், தனது முகத்திரையை கடலில் வீசி எறிந்து மரபுக்கு எதிரான உணர்ச்சிக் குறிப்பை வெளிப்படுத்தியமைக்காக ஷராவி இன்னமும் நினைவு கூரப்படுகின்றார். ஹுதா ஷராவி ஒரு புகழ்பெற்ற பாஷாவின் மனைவியாய் இருந்தமையால் இது இயல்பாகவே அபகீர்த்தியை உண்டாக்கியது. இதைத் தொடர்ந்து ஏனைய பிரபல பெண்களும் தமது முகத்திரைகளை ஒருவர் பின் ஒருவராக விட்டெறிந்தனர் (Minai 1981 : 69).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1924ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பு வரையப்பட்ட போது எகிப்திய அரசியல்வாதிகள் பெண்களின் அரசியல் உரிமைகள் பற்றிய பிரச்சினையை உதாசீனப்படுத்தினார்கள். பெண்களின் திருமண வயதை 16 ஆக உயர்த்துவது போன்ற மாற்றங்களை மாத்திரமே அவர்கள் மேற்கொண்டனர். ஆனால் பெண்களுக்கு வாக்குரிமையோ, விவாகரத்துச் செய்யும் உரிமையோ வழங்கப்படவில்லை. 1924ஆம் ஆண்டு மார்ச் மாதம், பாராளுமன்றம் ஆரம்பமான வேளையில் சில பெண்ணியவாதிகள் வாக்குரிமை கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆனால் இதுவே, இந்த விவகாரம் சார்பாக எடுக்கப்பட்ட கிளர்ச்சியின் கடைசி முயற்சியாக அமைந்தது (Philipp 1978 : 289).

1925இல் ஹுதா ஷராவி பிரெஞ்சு மொழியில் '*லெஜிப்தியன்*' *(L' Égyptienne)* என்ற சஞ்சிகையை ஆரம்பித்தார். ரோமில் நடந்த பெண்கள் மாநாட்டில் கலந்து கொண்ட செஸா நபராவி இதன் ஆசிரியராக விளங்கினார். எகிப்திய நடுத்தர முதலாளித்துவவாதிகளான பிரெஞ்சுமொழி பேசும் பெண்களை மட்டுமே இது சென்றடைந்ததால் அந்த முயற்சி உயர் குலத்தினைச் சார்ந்தது என்பது தெளிவாயிற்று. இருப்பினும் துருக்கியின் பெண்கள் சம்பந்தமான சீர்திருத்தங்கள் இச் சஞ்சிகையில் ஆராயப்பட்டன. இவ் விவகாரம் எகிப்தியப் பெண்கள் மீதும் இஸ்லாம் சம்பந்தமான கருத்து வேறுபாடுகள் மீதும் செல்வாக்கைச் செலுத்தின. 1927இல் இந்தச் சஞ்சிகையின் ஆசிரியர் இப்படித் தெரிவித்தார். "எகிப்திய பெண்ணியவாதிகளான நாம் எமது மதத்தின் பால் பெரும் மதிப்புக் கொண்டிருக்கின்றோம், அது உண்மையான உணர்வில் கடைப்பிடிக்கப்படுவதை விரும்புகிறோம் இஸ்லாத்தை உருக்குலைக்கும் பழக்க வழக்கங்களுக்குக் கண்மூடித்தனமாக அடிபணிவோரைவிட நாம் சமயத்திற்குக் கூடிய பணியாற்றியிருக்கிறோம்" (Minai 1981 : 72). பலதார மணப் பிரச்சினையும் மக்கள் பிரதிநிதிகள் மத்தியில் உரிய வரவேற்பைப் பெறவில்லை. 'குடும்பங்கள் பலவற்றை ஏற்கெனவே மணம் செய்து பொறுப்பேற்றுப் பராமரிப்பவர்களுக்கு' மட்டும் பொருந்தும் வகையில் 1928ஆம் ஆண்டில் புதிய சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. இந் நடவடிக்கை பலதாரா மணத்தை கட்டுப்படுத்துவதாகச் சிறுதளவேனும் தோன்றவில்லை.

முஸ்லிம் உலகின் அறிவுத்துறைத் தலைவனாக எகிப்து விளங்கிய போதிலும் அது இனமுறைச் சட்டத்தின் (Personal law) சீர்திருத்தம் சம்பந்தமாக மிகவும் பழமை பேணுவதாகவே இருந்து வந்தது. பலதார மணப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் துருக்கி சாதித்த முன்னேற்றத்







**செஸா நபராவியும் ஹுதா ஷராவியும்** (எகிப்து)

**1923இல் ரோமில் நடைபெற்ற சர்வதேச பெண்கள் சந்திப்பில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் மட்டத்தை அது எட்டவில்லை. 1935ஆம் ஆண்டு ஹுதா ஷராவி கெய்ரோவிலுள்ள அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் பெண்களின் அந்தஸ்து பற்றி விரிவுரையாற்றி, பலதார மணத்தை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த போது, அல்-அஸார் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரண்டு ஷெய்க்குகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் அங்கு குழுமியிருந்தோர் ஹுதா ஷராவிக்கு அளித்த ஆதரவை, அறிவுசார்ந்த அபிப்பிராயம் மாறிவருவதற்கான அடையாளமாக எடுத்துக் கொள்ளலாம். 'அவருடைய உரை பல்கலைக்கழகத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்த உரை பிரபல செய்தித்தாளில் முழுமையாகப் பிரசுரிக்கப்பட்டதுடன் அரபு மொழி பேசும் உலகம் முழுவதிலும் விரிவாக விநியோகிக்கப்பட்டது' (Woodsmall 1936 : 121 - 2).

ஆனால், பெண்ணியத்தின் எழுச்சி -அரசியல் அபிப்பிராயச் சூழல், மகளிர் இயக்கத்தின் வர்க்கபேதம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டது. சீர்திருத்தவாதப் .பெண்களின் செயற்பாடுகள் பற்றி நவால் எல்-சாடவி எழுதுகையில்:

> இந்த இயக்கம் ஏகப்பெரும்பான்மையான உழைக்கும் பெண்களின் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கவில்லை. பிரிட்டிஷாருடனும், மாளிகையுடனும், நாட்டின் பிற்போக்குச் சக்திகளுடனும் இணைந்து போனதன் காரணமாக அரசியல் தலைமைத்துவம் முற்றுப் பெற்றது போலவே இந்த இயக்கத்தின் தலைமைத்துவமும் முற்றுப் பெற்றது. அதன் பின்னர், நாட்டின் தேசிய அரசியல் வாழ்வில் செயலூக்கமான ஈடுபாட்டில் இருந்து ஒதுங்கிக் கொண்ட பெண்கள் இயக்கம், தர்ம மற்றும் சமூக நலப்பணிகளுடன் தன்னை மட்டுப்படுத்திக் கொண்டது (El-Saadawi 1980 : 176)

இவ்விதம் ஆரம்ப காலத்தின் செயல்திறன் உலர்ந்து போயிற்று. 1928ஆம் ஆண்டு கெய்ரோ பல்கலைக்கழகத்தில் சில பெண்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இது, சில பழமைபேணும் சமய வட்டாரங்களிலும் அரசாங்கத்திற்குள்ளும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்திற்று. ஆனால், 1962ஆம் ஆண்டில் தான், அல் -அஸார் பல்கலைக்கழகம் மாணவிகளைச் சேர்த்துக் கொண்டது. இருந்த போதிலும் கல்வி கற்ற புதிய தலைமுறைப் பெண்கள், சில தொழிற் துறைகளில் ஊடுருவத் தொடங்கினார்கள். 1934இல் கெய்ரோவின் அமெரிக்கப் பெண்கள் கல்லூரி பட்டதாரியான லுத்ஃபியா எல் நாடி, தன்னந்தனியாக விமானப்பயணத்தை மேற்கொண்ட முதலாவது பெண் விமானியாவார் (Woodsmall 1936 : 81). ஆனால் பெரும்பாலான





பெண்கள் பாடசாலைக்குச் செல்லாமலேயே இருந்தனர். 1975ஆம் ஆண்டில் பாடசாலைக்குச் சென்ற ஆண்களின் வீதம் 49. ஆனால் பெண்களோ 25 சதவீதம் தான். மதச் செல்வாக்குகளும், ஆண்களின் எதிர்ப்பும் தொடர்ந்தும் பலமானதாகவே இருந்து வந்தன. 1956ஆம் ஆண்டு வரை பெண்கள் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருக்கவில்லை. 1979ஆம் ஆண்டில், பாராளுமன்றத்தில் உள்ள 392 ஆசனங்களில் 30 ஆசனங்கள் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டன. அதே ஆண்டில் பெண்களுக்குப் பயன்தரும் வகையில் திருமண, விவாகரத்துச் சட்டங்கள் தாராளமயமாக்கப்பட்டன (Minai 1981 : 74 -78).

இறுதியாக எகிப்தில், முன்னர் நடந்த ஜனநாயகத்திற்கும் தேசியவாதத்திற்கும் ஆதரவான போராட்டங்கள் - பெண்களின் அந்தஸ்து பற்றிய அறிவுத்திறனுடைய விவாதத்தைத் தூண்டி, பெண்களுக்குக் கல்வியறிவு வழங்குவதற்கான முயற்சிகளை ஆரம்பித்து, பெண்ணியம் சார்பான ஓர் பத்திரிகை மற்றும் பெண்கள் ஸ்தாபனங்கள் மூலம் பெண்ணியம் பற்றிய கூருணர்வை ஏற்படுத்தி, வாக்குரிமை மற்றும் வேறு உரிமைகள் சார்பாக கோரிக்கைகள் விடுத்து, பிரித்தானியருக்கெதிரான ஆர்ப் பாட்டங்களிலும் எதிர்ப்புகளிலும் -சகல வர்க்கப் பெண்களையும் பங்கேற்க வைத்தது. ஆயினும் ஆரம்பகால எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்பட வில்லை. அதனால், 1930ஆம் ஆண்டுகளின் போது பெண்ணியமும் தப்பிப்பிழைக்க முடியாமல் போய்விட்டது. ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும் ஐரோப்பியச் சிந்தனையோட்டங்களுக்கு இடமளித்த முதலாவது நாடுகளில் எகிப்தும் ஒன்று. என்றாலுங்கூட பாரம்பரிய சமுதாயத்தின் உள் கட்டமைவுகள், முடியாட்சி மற்றும் சமய வைதீகத்தன்மை உட்பட அனைத்துமே இந்தக் காலகட்டத்தில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தின. எனவே பெண்கள் சார்பாக தீவிர மாற்றங்களை ஏற்படுத்தும் முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4.ஈரானில் பெண்கள் போராட்டமும் 'மேல் மட்டத்திலிருந்து வந்த விமோசனமும்'

இந்த நாடுகளில் பெண்கள் மானிடப் பண்புகளுக்குப் பொருத்தமுள்ளவர்களாக இல்லாத காரணத்தினால், அவர்கள் செடி கொடிகளை ஒத்தவர்களாகவே இருக்கின்றார்கள்.

- இப்ன் ருஷ்த் (அவராஸ்), 12ஆம் நூற்றாண்டின் பாரசீக மேதை (Fischer 1978:190)

வெளிநாட்டு ஆதிக்கங்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலும், வெளிநாட்டு வல்லரசுகள் மற்றும் ஆளும் வம்சத்தினர் ஆகியோருக்கு எதிராகத் தேசியவாதத்தின் எதிர்விளைவுகளின் ஓர் பகுதியென்ற வகையிலும், ஈரானின் அரசியற் போராட்டங்களில் பெண்களின் பங்கேற்பும் அவர்களின் விமோசனம் பற்றிய பிரச்சினையும் தோன்றின. 19ஆம் நூற்றாண்டின் ஏகாதிபத்தியவாதிகளின் விஸ்தரிப்பின் போது ஈரான் காலனித்துவம் ஆக்கப்படவில்லை என்றாலும், அது, அவற்றின் செல்வாக்கு எல்லைக்குள் இருந்தது. பிரிட்டனும், ஜார் கால ரஷ்யாவுமே அத்தகைய கட்டுப்பாட்டைச் செலுத்திய குறிப்பிடத்தக்க இரண்டு வெளிநாட்டு வல்லரசுகள் ஆகும். ரஷ்யா, ஈரானுக்கெதிராக நிலப்பிரதேசத்தை இணைத்துக் கொள்வது மற்றும் சலுகைகளைப் பெறுவது என்பன உட்பட தொடர்ச்சியான ஆக்கிரமிப்பில் ஈடுபட்டிருந்தது. அதே சமயம், இந்தியாவில் பிரித்தானிய அரசாட்சியின் மேலாட்சிக்காக, ஈரானையும் வளைகுடாவையும் கட்டுப்படுத்துவது அவசியம் என்ற நம்பிக்கையைப் பிரித்தானியக் கொள்கைகள், அடிப்படையாகக் கொண்டிருந்தன.

புவியியல் ரீதியான அமைவு காரணமாக, ஈரான் எப்போதுமே ஐரோப்பாவிலிருந்தும், ஆசியாவிலிருந்தும் படையெடுப்புகளுக்கும், பிறநாட்டுச் செல்வாக்குகளின் ஊடுருவலுக்கும் இலக்காகி வந்தது. ஐரோப்பியக் காலனித்துவ விஸ்தரிப்புக் கட்டத்தின் போது வளைகுடாவில் முதன்முதலாகத் தமது தலையைக் காட்டியவர்கள் போர்த்துக்கேயர் தான். இவர்கள் 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஹோர்முஸ் தீவையும் பெருநிலப்பரப்பின் ஒரு பகுதியையும் கைப்பற்றினார்கள். பிரிட்டிஷாரும் வர்த்தகத்தை ஊக்குவிக்கும் வகையில் தீவிரமாகச் செயற்பட்டனர். 1599ஆம் ஆண்டு, முதலாவது ஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அப்பாஸ் தனது இராணுவத்தைச் சீர்திருத்துவதற்காக, வெற்றி வேட்கை கொண்ட பிரிட்டிஷாரின் உதவியைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. அப்பாஸ் டச்சுக்காரருக்கும், பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பனிக்கும் வர்த்தக உரிமையை வழங்கியதுடன், பிரிட்டிஷாரின் உதவியோடு தனது தேசத்திலிருந்து போர்த்துக்கேயரை வெளியேற்றினார். ரஷ்யர்கள் தமது செல்வாக்கை 18ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உணர்த்தினர். மஹா பீட்டரின் ஆட்சியில் 1721ஆம் ஆண்டு ரஷ்யர்கள் வட ஈரான் மீது படையெடுத்தனர். இதைத் தொடர்ந்து உதுமான் சாம்ராஜ்யத்துக்கும் ரஷ்யாவுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக, ரஷ்யா ஈரானின் சில பகுதிகளை ஆக்கிரமித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.

1794 முதல் 1925ஆம் ஆண்டு வரை நாட்டை ஆண்டு வந்த கஜார் வம்சத்து மன்னர்கள், வெளிநாட்டு வல்லரசுகளுடன் சேர்ந்து இடையறாது சூழ்ச்சிகளிலும் திட்டமிட்ட ஏமாற்று நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்கள். ஏகாதிபத்தியத்தின் விஸ்தரிப்புக் காலகட்டமாக இருந்த இவ்வேளையில், ஈரான் இந்தியாவுக்குச் செல்லும் தரைமார்க்கப் பாதையில் அமைந்திருந்ததன் காரணமாக, எதிராளிகளான ஐரோப்பிய வல்லரசுகள் மத்தியில், அதிலும் குறிப்பாக ரஷ்யாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையே ஈரான் ஓர் மிக முக்கியமான மோதல் பகுதியாகியது.

19ஆம் நூற்றாண்டில் இஸ்லாமிய உலகில் வீசிய நவீனமாக்கற் காற்று, ஈரானில் சில உள்நாட்டுச் சீர்திருத்தங்களுக்கு வழிவகுத்தது. ஷா நசீர் உத் - தீன் (1848 - 1896) ஆட்சிக்காலத்தின் போது ஒருவித தாராளவாத சீர்திருத்தத்தை நோக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. துருக்கியில் தாராளவாத இயக்கங்கள் மூலம் செல்வாக்குப் பெற்றிருந்த அமைச்சர் மிர்ஷா தாஹி கானிடமிருந்து தாராளவாதக் கருத்துக்களை அவர் உள்வாங்கி இருந்தார். இவரின் ஆட்சியில் நவீனமாக்கத் திசையில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டது. இராணுவம் சீர்திருத்தி அமைக்கப்பட்டது. பதவிகளும், கௌரவப் பட்டங்களும் பணத்துக்காக விற்பனை செய்வது நிறுத்தப்பட்டது. முதலாவது பார்சி மொழி செய்தித்தாள் வெளியானது. நவீன பாணிகளில் விஞ்ஞானமும், ஏனைய பாடங்களும் போதிக்கப்படும் "எக்கோல் பொலிடெக்னிக்" *(école polytechnique)* டெஹ்ரானில் திறக்கப்பட்டது. வீதிகள், தபால் விநியோகமுறை, தந்தி என்பவற்றின் மூலமாகத் தொலைத் தொடர்புகளும் மேம்படுத்தப்பட்டன. சில வட்டாரங்களில் இந்தச் சீர்திருத்தங்கள் முகஞ் சுழிக்கச் செய்தன: ஆயினும், தாஹி கான், அதிகம்

சக்தி வாய்ந்தவராக ஆகி வருகிறாரென்ற காரணத்துக்காக அவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. இக்காலப் பகுதியில் துருக்கியிலும் சீர்திருத்த இயக்கம் தோல்வி கண்டது. சுல்தான் ஹமீத் எதேச்சாதிகார ஆட்சிக்கு மாறினார். ஷா நசீர் உத்-தீனும் அவர் வழியைத் தொடர்ந்தார்.

1870ஆம், 1880ஆம் ஆண்டுகளில் மன்னர் ஷா ஐரோப்பாவுக்கு மூன்று தடவைகள் விஜயம் செய்தார். இருந்தாலுங்கூட, வெளிநாட்டில் வசிக்கும் ஆப்கானியின் செல்வாக்கிற்கு உட்பட்டவர்களான தாராளவாதிகள், சீர்திருத்தம் சார்பாக அழுத்தங்களைஆரம்பித்து, அதை அமுல்படுத்தும்படி விடுத்த கோரிக்கையை நிறைவேற்ற ஷா எந்தவித முயற்சியையும் எடுக்கவில்லை. அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த ஷா முஸாஃபர் உத் - தீன் (1896 - 1907) காலத்தின் போது, சீர்திருத்தத்துக்கான கிளர்ச்சி துரிதமாகப் பரவியதுடன் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இது அவரது ஆட்சிக்கு ஒரு பாரதூரமான சவாலாகியது. கஜார் ஆட்சியாளர்கள் நிலப்பிரபுத்துவக் கட்டமைப்புக்களைப் பேணிக் காத்து, கொடுங்கோண்மையைக் கட்டிக் காத்து, நாட்டை வெளிநாட்டு நலன்களுக்கு அடகு வைத்தனர். 19ஆம் நூற்றாண்டில் ஆரம்பமான எதிர்ப்பியக்கமும் கிளர்ச்சியும் - ஜ்ஸாரின் ரஷ்யா மற்றும் ஏகாதிபத்திய பிரிட்டன் ஆகியவற்றின் ஏஜன்டுகளாக மாறிமாறி செயற்படும்-மன்னர்களின் வழமைகளையும் அவர்களது எதேச்சாதி காரத்தையும் எதிர்ப்பதை நோக்காகக் கொண்டிருந்தது.

பொருளாதார அடிப்படையிற் பார்த்தால், ஈரான் பகுதியளவிலான காலனி என்ற அந்தஸ்துக்குத் தரம் குறைந்து விட்டது; வெளிநாட்டுத் தொழிலதிபர்களுக்குச் சலுகைகள் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டதனால், வெளிநாட்டுப் போட்டா போட்டியிலிருந்து தனது சொந்தச் சந்தையைப் பாதுகாக்க அதனால் முடியாமலிருந்தது. 1885ஆம் ஆண்டுக்கும் 1900க்கும் இடையே ஈரானிடமிருந்து 15 நாடுகளுக்குச் சலுகைகளைக் கறந்து கொள்ள முடிந்தது. "வெளிநாட்டவர்களுடைய அரசியல் மேலாதிக்கம் காரணமாக அந்நியர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள், அதைத் தொடர்ந்து நாட்டின் பின்தங்கிய பொருளாதார நிலைமை காரணமாக, மேற்கத்தைய நாடுகளை அரசியல் ரீதியாக எதிர்த்து நிற்பதற்கு எந்தவித ஆதரவுமில்லாத நிலை ஆகிய இரண்டும் அந்நியரிடையிலேயான போட்டா போட்டியின் தாக்கத்தைப் பெருமளவில் அதிகரித்தது" (Rodinson 1974 : 125).

ஏனைய ஆசிய நாடுகளைப் போலவே, ஐரோப்பாவுடனான தொடர்பு, தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சிக்கு இட்டுச் சென்றது. 1851ஆம் ஆண்டு





ஆரம்பமான பல்தொழில்நுட்பக் கல்லூரியில், பிரதானமாக மேல் மட்டத்தினரின் பிள்ளைகளே கல்வி கற்றார்கள். இவர்களுக்கு இராணுவ விஞ்ஞானம், பொறியியல், மருத்துவம், மருந்தகம் போன்றவற்றில் பாடநெறிகள் வழங்கப்பட்டன. ஈரானிய அறிஞரான ரெஸா குளி ஜான் இதன் பணிப்பாளராக விளங்கினார். இங்கு ஈரானிய மொழி பெயர்ப்பாளர்களின் உதவியோடு ஒஸ்ட்ரிய ஆசிரியர்கள் போதனைகளை நடத்தினர். ஏறக்குறைய 50 ஆண்டுகளாக, இந்த நிறுவகத்தின் மூலமே மேலைத்தேயக் கருத்துக்கள் பரப்பப்பட்டன. 19ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் மொலியர், அலெக்சான்டர் டுமாஸ், ஜூல்ஸ் வெர்ன் ஆகியோரின் படைப்புக்கள் உட்பட பல மொழிபெயர்ப்புக்கள் வெளியாகின. உயர்தரமான நூல்கள், வெளிநாடுகளில் புகலிடம் பெற்றிருந்த ஈரானியர்கள் மத்தியில் தோன்றின.

இந்த நூற்றாண்டின் திருப்புமுனையின் போது, ஈரானிய குட்டி முதலாளித்துவ வர்க்கம் தோன்றியது. வெளிநாட்டுப் பொருட்களின் இறக்குமதி, உள்நாட்டு விளை பொருட்களின் ஏற்றுமதி, சுரங்கத் தொழிலில் முதலீடு, ஒரு சில தொழிற்துறை நடவடிக்கைகள் என்பனவே இவ் வர்க்கத்தினரின் தோற்றத்துக்குக் காரணமாக அமைந்தன. உள்நாட்டுச் சந்தைகள் மீதான வெளிநாட்டு மூலதனம் என்ற கொள்கையோடு மாத்திரமன்றி, நாட்டை ஆண்ட நிலப்பிரபுத்துவ சக்திகளுடனும் இந்தச் சிறு முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு பகுதியினர் முரண்பாடுகளை உருவாக்கினர். 1906ஆம் ஆண்டுக்கும் 1909ஆம் ஆண்டுக்கும் இடையே இடம்பெற்ற கிளர்ச்சி, பூர்ஷ்வா ஜனநாயகத்தின் இயல்பைக் கொண்டிருந்தது என்று சிலர் கருதுகின்றனர். ஏனையோர் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

> நிலப்பிரபுத்துவத்தின் அடித்தளங்களைக் கையாள்வதில் பூர்ஷ்வாக்களின் பலவீனம், காலனியாதிக்கத்துக்கு முகங் கொடுப்பதில் போதியளவு தீர்க்கமின்மை, உரிய முறையில் உருவாக்கப்பட்ட தொழிலாளி வர்க்க இயக்கம் இல்லாமை, புரட்சியில் விவசாயக் குடிமக்கள் ஈடுபடாமை ஆகியன யாவும் இதனை ஒரு பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சி என்று கருதப்படுவதிலிருந்து விலக்கி வைக்கவில்லை. பூர்வாங்க வடிவத்தில் நோக்கினாலும் கூட 1908ஆம் ஆண்டின் துருக்கியப் புரட்சி , 1911ஆம் ஆண்டின் சீனப் புரட்சி ஆகியவையும் இது போன்றதே (Jazani 1980 : 6).

பூர்ஷ்வாக்கள், மதகுருமார், நகர்ப்புற புத்திஜீவிகள் ஆகியோரை உள்ளடக்கிய அரசியல்யாப்புவாதிகள் எனப்படுவோர், ஜனநாயக உரிமைகளுக்கான கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினர். 1905ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ற்ஸாருக்கு எதிராக ரஷ்யாவில் நடந்த புரட்சியில் இருந்து. இந்தக் கிளர்ச்சி இயக்கமானது தூண்டுதலைப் பெற்றது.

1906ஆம் ஆண்டு, நாடு முழுவதிலும் அரசியல்யாப்புவாதிகள் ஏற்பாடு செய்திருந்த வெகுசன ஆர்ப்பாட்டங்களில் வணிகர்களும், வங்கியாளர்களும், உலமாக்களும், ஏனையோரும் பங்கு கொண்டனர். தலைவர்களில் பலரை, மன்னர் ஷா கைது செய்த போதிலும் ஆர்ப்பாட்டங்களை அடக்கியொடுக்க அவரால் முடியவில்லை. அதன் விளைவுகளின் முடிவாக அவர்களின் கோரிக்கைகள் சிலவற்றை - தேசியப் பேரவை (மஜ்லிஸ்) அமைப்பது உட்பட - மன்னர் ஏற்றுக் கொள்ளும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளானார். 1906ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாவது மஜ்லிஸ் கூட்டப்பட்டு, அரசியல் யாப்பு உருவானது. இதுவே நாட்டின் அடிப்படைச் சட்டமாகியது. இந்தச் சட்டத்தில் கைச்சாத்திட்டு ஐந்து தினங்களில் மன்னர் ஷா காலமானார். இதைத் தொடர்ந்து பதவியேற்ற அவரது புதல்வர் மொஹமட் அலி, சீர்திருத்த இயக்கத்தைக் கடுமையாக எதிர்த்தார். அரசியல் யாப்புக்குக் குழி பறிக்கவும் முயன்றார். இதனை எதிர்த்துச் செயற்பட்ட தேசியவாதிகளுடன் மோதல் ஏற்பட நேரிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில், ஈரானின் புதிய தேசியவாதச் சக்திகளின் வளர்ச்சிக்கு முகங்கொடுக்க நேரிட்ட பிரிட்டனும் ரஷ்யாவும், தம்மிடையே ஓரளவு கடுமையாகப் பேரம் பேசி 1907இல் ஆங்கிலோ - ரஷ்யன் உடன்படிக்கையை உருவாக்கின. இந்த உடன்படிக்கை வெளிவேஷமாக ஈரானின் சுதந்திரத்தையும், ஒருமைப்பாட்டையும் அங்கீகரித்து, உத்தரவாதஞ் செய்தது. ஆனால், எதார்த்தத்தில் அபகீர்த்திக்குள்ளான மன்னரைத் தொடர்ந்தும் அரியணையில் வைத்திருக்கவும், வட பகுதியில் ரஷ்யாவின் செல்வாக்கையும், தென்மேற்கில் பிரிட்டனின் செல்வாக்கையும் நிலைநிறுத்தும் வகையில் நாட்டை இரட்டைச் செல்வாக்கு எல்லைக்குட்பட்டதாகப் பிரிக்கவும் அது ஒரு போலிச் சாட்டாக விளங்கியது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட மன்னர் ஷா, சீர்திருத்த அலையைப் பின்னோக்கித் திருப்புவதற்கான தனது முயற்சிகளை மீண்டும் ஆரம்பித்தார். பாராளுமன்றத்தைத் தாக்கினார், இதனால் தேசியவாதிகளுடன் ஆயுதப் போராட்டம் நடந்தது. இப்போராட்டத்தில் மன்னர் ஷாவுக்கு ரஷ்யப் படைகள் ஆதரவு வழங்கின. ஏறக்குறைய நாடு முழுவதுமே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. ஆயினும், டெஹ்ரான் மீண்டும் கைப்பற்றப்பட்டது. மன்னர் ஷாவுக்குப் பதிலாக அவரது புதல்வர் ஆட்சி பீடம் ஏறினார். ஆனால், ரஷ்யர்கள் 1911ஆம் ஆண்டு மீண்டும் ஈரானை ஆக்கிரமித்துக் கொண்டு





அரசியல்யாப்புவாதிகளுக்கு இன்னொரு இறுதிக் காலக்கெடுவையும் விதித்தனர். இதனால், அவர்கள் வடபகுதியை ரஷ்ய ஆதிக்கத்துக்கு விட்டுக்குக் கொடுக்கும் நிலையேற்பட்டது. தென்பகுதியில் எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டதுடன் பிரிட்டனின் நிலை மேலும் வலுவடைந்தது.

1914 - 1918 யுத்தத்தின் போது, துருக்கிய, பிரிட்டிஷ் மற்றும் ரஷ்யப் படைகளுக்கு ஈரான் போர்க்களமாகியது. 1917 ரஷ்யப் புரட்சியின் பின்னர் ரஷ்யாவின் வெண்படையும் போல்ஷிவிக் படைகளும் ஈரானிய மண்ணில் ஒன்றுக்கொன்று சண்டையிட்டன. நாட்டுக்கு அரசியல் பொருளாதார சுதந்திரத்தைக் கோரியும், 1907ஆம் ஆண்டின் உடன்படிக்கையை ரத்து செய்யும்படி கோரியும் 1919ஆம் ஆண்டு நடைபெற்ற சமாதான மகா நாட்டிற்கு ஈரான் ஒரு தூதுக்குழுவை அனுப்பியது. ஆனால் இந்தத் தூதுக்குழுவினர் விடுத்த வேண்டுகோள்கள் செவிடன் காதில் ஊதிய சங்காகிற்று. பொருளாதாரச் சீர்குலைவு நிலையில் இருந்த நாட்டின் மீது, 1919ஆம் ஆண்டு பிரிட்டன் ஆங்கிலேய, பாரசீக உடன்படிக்கையை திணித்தது. அதனால் அது பிரிட்டனின் ஆட்சிக்கும் பாதுகாப்புக்கும் உட்பட்ட நாடாகியது. சோவியத் அரசாங்கம், ஈரான் மீதான ற்ஸாரிஸக் கோரிக்கைகள் அனைத்தையும் கைவிட்டது: குச்சிக் கானின் தலைமையிலான ஈரானியக் கிளர்ச்சிவாதிகள், வட பகுதியில் ஜிலான் சோவியத் குடியரசை ஸ்தாபித்தனர். இந்த நிலையில் தான் ஈரானிய கொசாக் படையணியைச் சேர்ந்த இராணுவ அதிகாரி ரெஷா கான், அணியின் ரஷ்யப்படைத் தலைவரைப் பதவியில் இருந்து கவிழ்த்து விட்டு, 1921ஆம் ஆண்டு டெஹ்ரானுக்கு வெற்றிகரமாக முன்னேறினார். ரெஷா கான் ஆயுதப்படைகளை மறுசீரமைத்தார். ஜிலானில் இருந்த சோவியத்துகளை நசுக்கினார். பழங்குடிகளின் கலகங்களை அடக்கியொடுக்கினார். தன்னைத்தானே பிரதமராக்கிக் கொண்டு நாடு முழுவதிலும் தனது ஆட்சியை நிலைநாட்டினார். 1925ஆம் ஆண்டில், கஜார் வம்சத்தின் ஆட்சி, பாராளுமன்றத் தீர்ப்பின் மூலம் முடிவுக்கு வந்தது. துருக்கியின் முன்மாதிரியைப் பின்பற்றி நாட்டைக் குடியரசாகப் பிரகடனம் செய்வதா இல்லையா என்ற தயக்கத்துக்குப் பின்னர், முடியாட்சியைப் பேணிக் காப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. துருக்கியர்கள், இஸ்லாத்தின் மரபார்ந்த பண்புகளை கைவிட்டிருப்பதைக் கவனத்திற் கொண்ட மதத் தலைவர்கள், குடியரசு பற்றிய கருத்தை வன்மையாக எதிர்த்தார்கள். எனவே, ரெஷா கான், ஈரானின் ஷாவாக அரியணை ஏறினார். அவரே, 1979ஆம் ஆண்டு கவிழ்க்கப்பட்ட பாலாவி வம்சத்தை ஸ்தாபித்தவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் தலைவர்கள்

ஆசியா மற்றும் அரபுலகின் அநேகமான பகுதிகளைப் போலவே, 19 ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நுற்றாண்டின் முன் தசாப்தங்களிலும் ஈரானின் பெண் செயற்பாட்டாளர்கள் தோன்றியதைக் காணக் கூடியதாக இருந்தது. இது, ஓர் ஆழ்ந்த தேசிய விழிப்புணர்வு தோன்றிய காலம் தொட்டு 1905 - 1911இன் அரசியல் யாப்புக் கிளர்ச்சி உச்சத்தை எய்த காலம் வரையிலான காலகட்டத்தை உள்ளடக்கியது. இதற்கு முன்னரான காலங்களிலுங் கூட, சமுதாயத்தில் நிலவிய நெறி முறைகளுக்குச் சவால் விடுத்த மகாராணிகளும், பெண் சமயத் தலைவிகளும் (ஞானிகள், சமயக்கோட்பாட்டுக்கு முரண் பட்டவர்கள் ஆகிய இருவரும்), பெண் வீராங்கனைகளும், தீவிரவாதி களும் இருந்தார்கள். உண்மையில், ஈரானில் முன்னர் இருந்து வந்த சௌராஷ்ட்டிர சமயமானது சொத்து விஷயத்திலும், சமய வைபவங்களை நடத்துவதிலும் பெண்களுக்கு ஓரளவு உரிமைகளை வழங்கியிருந்தது: சட்டத்தில் சமஅந்தஸ்த்தையும் கொடுத்திருந்தது. ஈரானிய வரலாற்றில் சஸ்ஸானிய காலகட்டத்தில் (கி.பி. 224 - 651), இரண்டு புகழ்பெற்ற மகாராணிகள் இருந்தனர்: அதே சமயம், நாட்டின் தேசிய காவியம் கோர்தா ஃபரீதின் வீரத்தை விளக்குகின்றது.

இப்பெண் துருக்கிய படையெடுப்புக்கு எதிராக ஈரானியர்களுக்குத் தலைமை தாங்கியவர் (Sanghvi *et al.*1967 : 10). 12ஆம் நூற்றாண்டில், பெண்களின் அந்தஸ்து பற்றிக் கலந்துரையாடல் இடம் பெற்றதாகத் தோன்றுகிறது. இந்தக் கலந்துரையாடலின் போது, ஈரானிய அறிஞரான இப்ன் ருஷ்த், பெண்கள் வெறுமனே, குழந்தை பெறுவதற்கும் குழந்தை வளர்ப்பதற்குமாக இருப்பதைக் கண்டித்தார். இதனால் நாடு உழைப்புச் சக்தியில் அரைவாசியையும் சிறந்த வாழ்க்கைத்தரத்துக்கான ஆற்றலையும் இழந்து விட்டது என்று அவர் சொன்னார் (Fischer1978:190).

பண்டைய பாரசீகம் பல்வேறு நம்பிக்கைகளையும் வழமையான சமயத்துக்கு மாறான கருத்துகள் கொண்ட சமயங்களையும் கொண்ட ஓர் நாடு. இதனால், பல பெண் ஞானிகள் மற்றும் புதுமையுணர்வூட்டும் பெண்களும் தோன்றி மக்கள் மத்தியில் சமய உணர்ச்சி வேகத்தை ஊட்டினார்கள். சௌராஷ்டிரர்கள் பெண் ஞானிகளுக்காக அனேக வழிபாட்டுத் தலங்களை வைத்திருந்தனர். ஷியா முஸ்லிம் விசுவாசிகள், பல புனிதப் பெண்களை வழிபட்டனர். உதாரணமாக, பாத்திமா (நபிகள் நாயகத்தின் மகளும், அலியின் மனைவியுமாவார்.) பிரார்த்தனையிலும், நீதிக் கதைகளிலும்





இடைவிடாது தொழுது வேண்டப்படுகின்றவர். பிபி ஷார்பானுக்கு (இமாம் ஹுசெயினின் மனைவி) ரே என்ற இடத்தில் நினைவாலயம் உண்டு. இதில் பெண்கள் மாத்திரமே வழிபாடு செய்ய முடியும். பாத்திமா ஹஷ்ரத் - இ மசுமே இற்கு (இமாம் ரெசாவின் சகோதரி) கும் எனும் இடத்தில் ஓர் நினைவாலயம் உண்டு. மேலும் சௌராஷ்டிர இராணுவத்திடமிருந்து தப்புவதற்காக பூமிக்குள் அற்புதமாகக் கொண்டு செல்லப்பட்ட நாற்பது கன்னியர்களுக்கும் (செச்செல் தொக்தாரான்) மற்றுமொரு நினைவாலயம் உண்டு (Fischer 1978 : 213).

வழமையான சமயத்திற்கு மாறுபட்ட கருத்துக் கொள்கைகள் கொண்ட மத அனுஷ்டானங்களில் பெண்களின் பங்கேற்பு பல நாடுகளில் காணப்படுகின்றது. ஈரானிலும் கூட 1840ஆம் ஆண்டுகளின் போது, பாபிஸம் என்ற வழமையான சமயத்துக்கு மாறுபட்ட கருத்துக் கொண்ட ஓர் மத இயக்கம் (பின்னர் பஹா இஸூம் என்று அழைக்கப்பட்ட) உருவாகி சீர்திருத்தங்களை ஆதரித்தது. சமூக நீதி, வர்த்தக சுதந்திரம், தனிப்பட்ட சொத்து உரிமைகள், பாரபட்சமான வரிகளைக் குறைப்பது, பெண்களுக்கு உயர்ந்த அந்தஸ்து, பலதார மணத்துக்குக் கட்டுப்பாடு, பெண்கள் மீதான வன்முறையைத் தடை செய்வது, அவர்களின் கல்விக்கான நடவடிக்கைகள் போன்ற சீர்திருத்தங்களும் இதில் அடங்கும் (Keddie 1981 : 50). இந்த பாபி இயக்கத்தை, சிராசைச் சேர்ந்த மூஸா அலி மொகமட் (1820 - 1850) ஈரானில் ஸ்தாபித்தார். அவர் தன்னைச் சத்தியத்தின் நுழைவாயில் (பாப்) என்று பிரகடனம் செய்தார். ஷியா இஸ்லாம், மகத்தான மதத் தலைவர்கள், இமாம்களின் வருகையில் விசுவாசம் கொண்டிருந்ததால் மக்கள் மத்தியில் பாப் இற்கு பெரும் செல்வாக்கைக் குவிக்கக் கூடியதாயிருந்தது. இந்தச் சீர்திருத்த இயக்கத்தை வைதீக முஸ்லிம்களும் அரசாங்கமும் ஓர் அச்சுறுத்தலாகக் கருதியதால் பாப் கைது செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து அலையலையாய் வன்முறைகள் தோன்றின. பாபும் அவரைப் பின்பற்றிய சுமார் 28 பேரும் 1850ஆம் ஆண்டு ஆரம்பத்தில் மரணதண்டனை பெற்றனர். அவருடைய அதிகாரம் அவரது சிஷ்யர்களில் ஒருவரிடம் கை மாறிற்று. துன்புறுத்தலுக்கு உள்ளான போதும் கூட பாபிசம் தொடர்ந்தும் அதிருப்தி யாளர்களான ஈரானியச் சிறுபான்மையினர், அறிவுஜீவிகள், பெண்கள் மத்தியில் ஆதரவைப் பெற்று வந்தது.

இந்த இயக்கத்தின் மிகச் சிறந்த பெண்மணி, குராத் உல் அயின் (1815 - 1851). முல்லாக்களின் குடும்பத்தைச் சேர்ந்த இவர், ஒரு கவிஞர்; சமய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவகாரங்களில் நல்ல பாண்டித்தியம் உள்ளவர்: அவர் சமயத் தலைவர்களுடன் அறிவுசார் விவாதங்களில் கலந்து கொண்டார். அவர் தனது கணவரையும், உறவினர்களையும் துறந்து பாபி இயக்கத்தில் சேர்ந்தார்; பொது மக்கள் மத்தியில் போதனை செய்தார். யுத்தகாலத்தில் சண்டையிட்டார்; இறுதியில் ஒரு தியாகியாக நீத்தார்.

> உண்மையிலேயே அவர் ஓர் குறிப்பிடத்தக்க, புத்திசாலியான பெண்மணி... அவர் பாபிசத்தைப் பரப்புவதற்கான நடவடிக்கைகளுக்குத் தனது வாழ்வை அர்ப்பணித்தார். அவர் மத மாற்றத்தில் ஈடுபட்டதுடன் மாத்திரமன்றி, பாபிக்களின் கிளரச்சியின் போது போர்க்களத்தில் முக்கியமான தலைமைப் பங்குகளை ஏற்றார். அவருடைய நினைவு குறிப்பாக, அவரது கவிதைகள் பாபியின் புரட்சிகர உணர்வை உயிரோட்டம் உள்ளவையாக்கின (Bayat-Philipp 1978 : 296)

குரத் உல் அயின் அக்காலத்தில் பெரும் கவனத்தை ஈர்த்திருந்தார். மத்திய ஆசியாவின் சமயங்கள், தத்துவங்கள் பற்றி 1866இல் எழுதிய பிரெஞ்சு ராஜதந்திரி கோம்த் த கோபினோ, குரத் உல் அயினின் பாபிஸ் அறப் போர் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்.

> வெறும் உயிர்ப்பற்ற பரிவுணர்வு அவருக்குத் திருப்தி அளிக்கவில்லை, அதனால் அவர் தனது குருநாதரின் மத நம்பிக்கையைப் பகிரங்கமாகப் போதித்தார். அவர், பலதாரமணத்தை மாத்திரமன்றி, முகத்திரையையும் எதிர்த்தார். அவர், பொது இடங்களில் முகத்திரை இல்லாமலேயே காட்சி அளித்தார். இதனால் உறவினர்கள் மற்றும் பக்தியுள்ள முஸ்லிம்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும் அபகீர்த்தியையும் அவர் ஏற்படுத்தினார். அவருடைய போதனைகள், பெருமளவிலானோர் மத்தியில் பிரபல்யம் பெற்று, அவரது ஆர்வமும் பகிர்ந்து கொள்ளப்பட்டது. அவரைப் பின்பற்றுவோரின் வட்டம் விரிவடைய இது உதவியது (Bayat-Philipp 1978 : 296)

## ஆண் சீர்திருத்தவாதிகளும் பெண் உரிமைகளும்

பாபிசம், பிரீமேசனரியுடன் இணைந்து, 1880ஆம் ஆண்டுகளிலும் 1890ஆம் ஆண்டுகளிலும் பல ஆண் அறிவுஜீவிகளையும் தீவிரப் போக்குள்ள சீர்திருத்தவாதிகளையும் கவர்ந்தது. இவர்கள், பெண்கள் உரிமைக்காகப் போராடியவர்கள். இவர்களில் அனேகமானோர், புகழ் பெற்ற அறிஞர் அல் - ஆப்கானியின் சகபாடிகளாவர். இவர்களில், மிர்ஸா மல்கொம்





கான் (1833 - 1908) மதகுரு மரபுக்கு எதிரான கொள்கை கொண்ட ஆர்மீனிய ஈரானியராவார். இவர் பாரிசில் கல்வி கற்றவர். பிரீமேசனரியை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயத்தை உருவாக்கியமைக்காக ஈரானில் இருந்து நாடு கடத்தப்பட்டார். 1890ஆம் ஆண்டு லண்டனில் இருந்த போது கனூன் (சட்டம்) என்ற சஞ்சிகையை நடத்தினார். இதில் அல் - ஆப்கானியும் எழுதினார். 1890இல் கனூன் இதழ் ஒன்றில் பெண்கள் கல்வியை ஆதரித்து மல்கொம் கான் கட்டுரை ஒன்றை எழுதினார். இந்தச் சஞ்சிகை ஜனநாயக உரிமைகளுக்காக அறைகூவல் விடுத்தது; அது, மக்களின் குறைபாடுகளை வலியுறுத்தியது; அவர்களின் கோரிக்கைகளைப் பிழையற எடுத்துக் கூறியது; அதாவது, நிலையான சட்டங்களின் கோவையும், நாட்டின் சேமநலன் சம்பந்தமாக மக்கள் பிரதிநிதிகள் சுதந்திரமாகக் கலந்துரையாடக் கூடிய ஒரு பாராளுமன்றமும் தமக்குத் தேவை என்பதை வலியுறுத்தியது. அக் காலத்தின் மற்றுமொரு முக்கிய எழுத்தாளர் மிர்ஸா அக்வா கான் கெர்மானி. பாபியான இவர், தீவிரப் போக்குள்ள சுதந்திரச் சிந்தனையாளராக விளங்கினார். *அஃதார்* என்ற செய்தித்தாளின் ஆசிரியராகவும் ஆப்கானியின் ஆதரவாளராகவும் விளங்கிய கெர்மானி, ஈரானில் காணப்பட்ட நிலைமையை மிகவும் வன்மையாகக் கண்டித்தார். இஸ்லாத்துக்கு முன்பதான கடந்த காலத்தைப் பற்றிப் புகழ் பாடினார்; பழமைவாத இஸ்லாத்தைக் கண்டித்தார்; அக்காலத்தில் நிலவிய மத - விரோத தேசியவாதத்தினைப் பிரதிநிதித்துவம் செய்தார். அதே போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களில் ஒருவர் ஷைக் அஃமட் ரூஹி. அவரும் ஓர் பாபி, எழுத்தாளர், ஆசிரியர், சுதந்திரச் சிந்தனையாளர். 1891இல் அவர் கெர்மானியுடன் இணைந்து அல் ஆப்கானியின் (அக்காலத்தில் அவர் இஸ்தான்புல் இல் இருந்தார்) ஈரானிய சீர்திருத்த ஆதரவாளர்களை ஒன்று திரட்டினார். செல்வாக்கு மிக்க மற்றுமொரு எழுத்தாளர் ஃபதாலி அகுண்த்ஸாதே அசர்பைஜானில் பிறந்த ஈரானியரான இவர், ரஷ்ய டிரான்ஸ்காகேசியாவில் வாழ்ந்தவர். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவர் எண்ணற்ற பல கடிதங்களை எழுதினார். அதில் ஈரானிய நிலவரத்தை அவர் கண்டித்தார். இந்த எழுத்துக்கள் அஞ்ஞாதவாசம் புரிந்த ஈரானிய தீவிரவாதிகளின் திறனாய்வு வாய்ந்த படைப்புக்களின் ஒரு பகுதியாகின (Keddie 1981 : 68, 71,191).

இந்த நான்கு எழுத்தாளர்களும் பெண் விடுதலையை ஆதரித்தனர். கல்விக்கான அவர்களின் உரிமைக்கு ஆதரவு தெரிவித்தனர்; பலதார மணத்தை எதிர்த்தனர். 'புதிய தலைமுறையைச் சேர்ந்த ஈரானிய தேசபக்தர்களை வளர்த்து ஆளாக்குவது அவசியம் என்பதே அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மையான ஆர்வமாகத் தோன்றியது. குழந்தைக்கு ஆரம்ப அறிவு புகட்டுபவர்களாக விளங்கும் கல்விகற்ற அன்னைக்கு ஓர் முதன்மைப் பங்கையளிப்பதன் மூலம் உருவாகும் ஓர் நிறைவான "ஆரோக்கியமுள்ள" குடும்பச் சூழல் மூலமே இதைச் சாதிக்கமுடியும், என அவர்கள் உணர்ந்திருந்தனர்' (Bayat-Philipp 1978 : 296 - 7).

20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தைச் சேர்ந்த ஈரானிய எழுத்தாளர்களும் கவிஞர்களும், கவிதைகளில் பெண்களை அழகான விளையாட்டுப் பொம்மைகளாகவும், பேய்களாகவும், பாம்புகளாகவும், தீ கக்கும் விலங்குகளாகவும் சித்திரித்த பாரசீகக் கவிதைப் பாரம்பரியத்தை நிராகரித்தனர். எனவே, அவர்கள் பெண்கள் சமத்துவம், பெண்கள் விடுதலை ஆகிய தொனிப்பொருளை எடுத்துக் கொண்டார்கள்; பெண், ஆணைவிடத் தாழ்ந்தவள் என்ற நடைமுறைக் கருத்துக்குச் சவால்விடுத்தனர்; குறிப்பாகப் பலதாரமணம், பெண்களுக்கு முகத்திரை அணிவித்தல் ஆகியவற்றை வன்மையாகக் கண்டித்தனர். முகமட் ஹசீம் மிர்ஸா அப்சார் (1880 இல் பிறந்தவர்) இப்படிச் சுட்டிக் காட்டினார்:

*உங்களின் இடக்கரம் வலதைவிடத் தாழ்ந்ததல்ல*
*அதுவும் பணிபுரிந்திருந்தால் வலதைப் போல் பலமுள்ளதாக இருந்திருக்கும்*
*ஆணைப் போல் பெண், இல்லாததற்கான தவறு உங்களுடையது தான்*
*பெண்களுக்குக் கல்வியையும் கலையையும் நாம் கோர வேண்டும்.*

(Bayat-Philipp 1978: 304)

கஜார் இளவரசரான இராக் மிர்ஸா இதே தொனியில் எழுதினார், 'எம்மத்தியில் உள்ள பெண்கள் மானுடர்கள் இல்லையா, அல்லது நன்மைக்கும் தீமைக்குமிடையே பேதம் காட்டும் ஆற்றல் பெண்களிடம் இல்லையா? நீயும், நானும் மானுடர்களே, படைப்பில் சமமானவர்களே' (Bayat-Philipp1978: 304).

கவிஞர் லஹூட்டி, பெண்களின்அழகு பற்றி எழுத்தாளர்கள் கொண்ட மரபார்ந்த கண்ணோட்டத்தை நிராகரித்தார்: பெண்களுக்கு ஒரு புதிய தோற்றத்தைக் கொடுத்தார். 'அறியாமை கொண்ட ஒருவரின் அழகை நான் போற்றுவதில்லை; அழகைக் கொண்டு இனிமேலும் எனக்குக் கவர்ச்சியை ஊட்டுவதற்குப் பதிலாக உன்னுடைய மதிப்பை எனக்கு எடுத்துக் காட்டு.' அக்காலத்தின் ஏனைய பல கவிஞர்களுடன் இணைந்து முகத்திரையை அகற்றும் இயக்கத்தில் லஹூட்டி ஈடுபட்டார். 'ஓ! உன்னுடைய முகத்திரையைக் கிழித்தெறி... சமூகத்தில் நீ சுதந்திரமானவளாய் இருப்பதைக் காண நான்





ஏங்குகின்றேன்' (Bayat-Philipp 1978 : 304). கவிஞர் இஷ்கியும் செயலில் இறங்க வேண்டியதன் அவசியம் பற்றி எழுதினார்:

*இரண்டு மூன்று பேச்சாளர்கள் தமதுகுரலை என்னுடன் இணைத்துக் கொண்டால்,*
*நாட்டில் ஓர் கிளர்ச்சி படிப்படியாகத் தோன்றும்,*
*இந்தக் கிளர்ச்சியின் மூலம் பெண்களின் முகத்திரைகள் நீக்கப்படும்.*
*சமூக வாழ்வில் இருந்து இன்பம் கிடைக்கும்.*
*இல்லையேல் பெண்கள் தமது சிரசுகளை இந்தத் திரையில் மூடியிருக்கும்வரை,*
*பாரசீக இனத்தின் பாதிப்பேர் இறந்தவர்களாகவே இருப்பர்.*

(Bayat-Philipp 1978 : 305)

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் ஐரோப்பாவில் கல்வி கற்ற அநேக அறிவுத்துறையினர் தேசிய மற்றும் ஜனநாயகத்துக்கான கிளர்ச்சிகளில் முன்னணி வகித்து, அரசியல் சம்பந்தமான பிரச்சினைகளை விவாதிக்கவென, இரகசிய சங்கங்களை ஸ்தாபித்தனர். பயாத் - பிலிப் எழுதியதன்படி:

ஊழல் மலிந்த கஜார் அரசாங்கத்துக்கு எதிராகக் கலகம் செய்வதற்கும், புதிய கருத்தமைப்புக்கள் மற்றும் கருத்துக்களைப் பரப்புவதற்கும் அறைகூவல் விடுக்கும் அரங்கங்களாக அவை பயன்படுத்தப்பட்டன. கிளர்ச்சியில் ஈடுபட வேண்டும் என்ற புதிய மனோநிலை பற்றிக் கொண்டது. அதற்கு ஒத்திசைவாக -ஓர் சிறிய, ஆனால் வளர்ந்து வரும் எண்ணிக்கையைக் கொண்ட - ஈரானியப் பெண்களிடையே, முறைமைசார்ந்த மாற்றம் சார்பாக ஓர் அபிலாஷையும் இருந்தது (Bayat-Philipp 1978 : 296).

## கல்வியும் கிளர்ச்சியும்

அத்தகைய கருத்துச் சூழலிற்றான் பெண்களின் கல்வி விஸ்தரிக்கப்பட்டது. 1874இல், அமெரிக்க பிரஸ்பிடேரியன் மிஷனரிப் பாடசாலை ஒன்று டெஹ்ரானில் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் முஸ்லிம்கள் அல்லாதோரே இதில் சேர்ந்தனர். 1891இல் இரண்டு முஸ்லிம் சிறுமிகள் சேர்ந்து கல்வி கற்றனர். இருப்பினும் 1909இல் அவர்களின் எண்ணிக்கை 120 ஆக உயர்ந்தது. 1907இல் முதலாவது ஈரானியப் பெண்கள் பாடசாலையும், 1908இல் பெண்களுக்கான பிரெஞ்சப் பாடசாலை ஒன்றும் டெஹ்ரானில் நிறுவப் பட்டன. 1910ஆம் ஆண்டளவில், டெஹ்ரானில் 50 பெண்கள் பாடசாலைகள் இருந்தன. ஆசிரியர்கள், செய்தியாளர்கள் மற்றும் பெண்கள் அமைப்புக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டாளர்கள் என, பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்தது (Bayat-Philipp 1978 : 300). இவர்களில் ஒருவர் கனூம் அஸாமோதே. இவரது கணவர் தாராளவாதக் கருத்துள்ளவர், பெண் கல்வியில் நம்பிக்கை கொண்டவர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், அஸாமோதே தனது இல்லத்தில் 20 சிறுமிகளுக்காகப் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தார். இது 400 மாணவர் கல்வி கற்கும் அளவிற்கு பெண்களுக்கான ஒரு பெரும் இடைநிலைப் பள்ளியாக வளர்ந்தது. (நாமுஸ் பாடசாலை). இந்த முயற்சி, ஈரானில் மேலும் பல தனியார் மகளிர் பாடசாலைகள் ஆரம்பமாவதற்கு உத்வேகமூட்டியது (Woodsmall 1936 : 145 - 6).

ஏனைய நாடுகளிற் போலவே, மாளிகை வட்டாரங்களிலும், அரச அந்தப்புரங்களிலுமுள்ள பெண்கள் அரசியல் சூழ்ச்சிகளிலும், எதிர்ப்புகளிலும் ஈடுபட்டனர். 'மேற்கத்தையவர் கற்பனை செய்தாற் போன்று அந்தப்புரங்கள் சோம்பற்தன்மையும் நேர்மைக் கேடும் கொண்ட பதுங்கிடங்களாக இருப்பது மிகவும் அபூர்வமே' (Keddie 1981 : 34). ஷா நசீர் உத்-தீனின் மூன்றாவது மனைவியான அனிஸ் உத் தவ்லா, பிரதமரின் வீழ்ச்சிக்குச் சதி செய்தார் எனக் கூறப்படுகின்றது: தான், மன்னர் ஷாவுடன் 1872ஆம் ஆண்டு ஐரோப்பாவுக்கு விஜயஞ் செய்த போது, தன்னைத் திருப்பி அழைப்பதற்குப் பிரதமரே காரணம் என அனிஸ் உத் தவ்லா, அவர் மீது பழியைச் சுமத்தினார். ஏற்கெனவே நாட்டை பிரிட்டிஷ் நலன்களுக்கு பிரதமர் விற்று விட்டார் என்ற கடுமையான கண்டனத்துக்கு உள்ளானதாலும் இந்தச் சம்பவம் அரசியல் ரீதியில் முக்கியத்துவம் பெற்றது. 'இவ்வாறு... கஜார் அந்தப்புரத்தைச் சேர்ந்த ஒருவர், முதலாவது முக்கிய தேசியவாத அரசியல் இயக்கங்களுள், ஒன்றில் சம்பந்தப்பட்டார்' (Bayat-Philipp 1978 : 297). 1890ஆம் ஆண்டு, நாட்டினது புகையிலை உற்பத்தி, விற்பனை, ஏற்றுமதி உட்பட புகையிலை சம்பந்தமான ஏகபோக உரிமை அனைத்தும் பிரிட்டிஷ் முதலாளித்துவவாதி ஜி.எப்.தல்பொட்டுக்கு வழங்கப்பட்டது (Rodinson 1974 : 126). அந்நியர், பொருளாதாரத்துறையில் மேலாதிக்கம் செலுத்துவதற்கு விரோதமாக எழுந்த ஈரானிய எதிர்ப்பு உணர்ச்சிகள் முதன்முறையாக வெளிப்படுத்தப்பட்ட போது, அந்தப்புரத்துப் பெண்கள் அதில் மிக முனைப்புடன் ஈடுபட்டனர். அந்தப்புரத்தைச் சேர்ந்த பெண்களால் புது முயற்சியாக ஆரம்பிக்கப்பட்ட புகையிலைப் பகிஷ்கரிப்பு இந்த எதிர்ப்புகளுள் அடங்கும். ' வெற்றிகரமான இந்தப் பகிஷ்கரிப்பு 1905ஆம் ஆண்டில் அரசியல் யாப்புப் புரட்சிக்கு ஒரு முன்னோடியாக விளங்கியது' (Bayat-Philipp 1978 - 298).





1905ஆம் ஆண்டு நடந்த அரசியல் யாப்பு சார்பான கிளர்ச்சியில், பெண்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இப்பேர்ப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் பெண்களின் பங்களிப்பு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. 1906ஆம் ஆண்டு ஷா வுக்கு எதிரான கிளர்ச்சியிலும் அவர்கள் பங்கேற்றனர். வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்த போது, ஷா மன்னர் சென்ற வண்டியைச் சுற்றிச் சூழ்ந்து தமது கோரிக்கைகளைக் கொண்ட மனுவையும் சமர்ப்பித்தனர். ஒரு பெண் அவரிடம் கொடுத்த கடிதத்தில், 'உங்களது சிரசிலிருந்து முடியையும், கையிலிருந்து செங்கோலையும் இறுதியாக நாம் எடுக்கப் போகும் நாள் பற்றி கவலை கொள்ளுங்கள்' என்று எழுதியிருந்தார். அத்தகைய நடவடிக்கைகள் குரோதமான எதிர்விளைவுகளை உருவாக்கின என்பதில் வியப்பேதுமில்லை. 'அரசியல் யாப்பு நீடு வாழ்க... சுதந்திரம் நீடு வாழ்க... எமது விருப்பப்படி வாழ்வதற்காக மதக் கட்டுப்பாடுகளிலிருந்து எம்மை நாமே விடுவித்துக் கொள்ள வேண்டும்!' என்று ஈரானியப் பெண்கள் முகத்திரையின்றி டெஹ்ரானில் கோஷமிட்டவாறு அணி வகுத்துச் சென்ற போது, இவர்கள் 1906ஆம் ஆண்டின் புரட்சியை மதிப்பிழக்கச் செய்வதற்காக, பிற்போக்குவாதிகளால் கூலிக்கு அமர்த்தப்பட்ட விலைமாதர்கள் என்று கண்டிக்கப்பட்டனர் (Bayat-Philipp 1978 : 298, 302).

1906ஆம் ஆண்டின் புதிய அரசியல் யாப்பு பெண்களுக்கு வாக்குரிமையை வழங்கவில்லை. 'வாக்குரிமை மறுக்கப்பட்டவர்களில் சகல பெண்களும், பராயமடையாதோரும்... மோசடிக்காரர்களும், பிச்சைக் காரர்களும், கொலைகாரர்களும், திருடர்களும் இஸ்லாமியச் சட்டப்படி தண்டிக்கப்படக் கூடிய ஏனைய குற்றவாளிகளும் அடங்குவார்கள்' என்று அரசியல் யாப்பின் 10ஆவது விதி தெரிவித்தது (Sanghvi.1968 : 300). இந்தக் காலப் பகுதியில், எண்ணற்ற பல இரகசிய பெண்கள் சங்கங்கள் செயற்படத் தொடங்கின. அவற்றின் பிரபல்யம் வாய்ந்த அங்கத்தவர்களாக மலிக்கியா - யி ஈரான், சஃபியா யஸ்தி, சதீகா தவ்ளதாபாடி மற்றும் பத்ரி துந்தாரி ஆகியோர் அடங்குவர். இவர்கள் அரசியல் யாப்புவாதத் தலைவர்களின் மனைவியர் அல்லது உறவினர்களாவர். இந்தச் சங்கங்களில் ஒன்று டெனிஷ் (அறிவு) என்ற வார இதழை வெளியிட்டது. மருத்துவர் ஒருவரின் மனைவி இதற்கு ஆசிரியராக இருந்தார். அது 'பெண்களுக்காகப் பிரத்தியேகமாக எழுதப்பட்ட ஒரே செய்தித்தாளாகவும், பெண்களுக்கென விசேட ஆர்வமுள்ள விஷயங்களை விவாதிப்பதாகவும் விளங்கியது' என்று கூறப்பட்டது. பெண்களுக்குக் கல்வி அளிப்பது மற்றும் பெண்கள் பாடசாலைகளைத் திறப்பது சம்பந்தமான பிரச்சாரத்தை மேற்கொள்ளுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் குழுக்களின் தலையாய நடவடிக்கைகளில் ஒன்றாக விளங்கியது. ஈரானியச் சுதந்திரத்துக்கு ரஷ்யர்களால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் சம்பந்தமாக எதிர்ப்புத் தெரிவித்து 1911 ஆம் ஆண்டு, பாரசீக பெண்கள் சங்கம் பிரிட்டிஷ் பெண்களுக்கு (வாக்குரிமை சார்பாகப் போராடியவர்கள்) அனுப்பி வைத்த விண்ணப்பத்தின் மூலம், அவர்களது ஆர்ப்பாட்டத்திலுள்ள தேசியவாதம் மற்றும் பெண்ணியத் தன்மைகளைக் காணமுடியும். 'எம்முடைய புலம்பல்களுக்கு ஐரோப்பிய ஆண்கள் செவிமடுக்கவில்லை. பெண்களாகிய நீங்களேனும் எமக்கு உதவ முன்வரமாட்டீர்களா?' - இதற்குப் பிரிட்டிஷ் பெண்கள் அளித்த பதில், 'பிரிட்டிஷ் நாட்டுப் பெண்களான எமக்கே கூட அரசியல் சுதந்திரத்தை வழங்குமாறு பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கேட்க முடியாதிருப்பது கவலைக்குரியதுதான், அப்படியிருக்கையில் பாரசீகம் சம்பந்தமாக, அவர்களது செயற்பாடுகளின் மீது அழுத்தம் கொடுக்கும் வலிமை எமக்கில்லை' (Bayat-Philipp 1978 : 298 ,307).

ஆனால், அரசியல்யாப்பு ரீதியான அரசாங்கத்தை அழித்தொழிப்பதற்கு பழமைவாதச் சக்திகள் எத்தனித்த போது, பெண்கள் எதிர்ப்புப் பணியில் ஈடுபட்டனர். வீதி ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டு யுத்தத்தில் சண்டையிட்டனர். 1911ஆம் ஆண்டில் மஜ்லிசுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது முயற்சியின் போது, மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் பெண்களின் பங்கேற்புப் பற்றி *லண்டன் டைம்ஸ்* குறிப்பிட்டுள்ளது:

> தேசபக்த ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன. அவற்றில் பெண்கள் அதிகமாக ஈடுபடுவது, புதுமையான ஓர் விஷயம். பெரிய பள்ளிவாசலில் நடைபெற்ற ஒரு பெரும் கூட்டத்தில் பெண் பேச்சாளர்களும் உரையாற்றினர்: அவர்கள் மிகுந்த பேச்சு நயம் கொண்டவர்கள் எனக் கூறப்படுகிறது. ஒரு பெண் பேசும் போது, இஸ்லாமியச் சட்டம், தடையாணை விதித்தாலும் கூட, பெண்கள் ஓர் புனித யுத்தத்தில் பங்கேற்பார்கள் என அறிவித்தார் (Bayat-Philipp 1978 : 303)

வட ஈரானை ரஷ்யா ஆக்கிரமித்த பின்னர் 1911ஆம் ஆண்டில் நடந்த ஆர்ப்பாட்டங்களில் பெண்கள் பங்கேற்பு குறிப்பிடத்தக்க கவன ஈர்ப்பைப் பெற்றது. அதன் காரணம், அவர்கள் தாமாகவே முன்வந்து பிரத்தியேகமாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டமையேயாகும். இந்த நெருக்கடிக் காலகட்டத்தில், அவர்கள் காட்டிய புரட்சிகரத் தீரம் உத்தியோகபூர்வ வரலாற்றில் மறைக்கப் பட்டு விட்டாலுங் கூட, நேரில் கண்டவர்கள் இதனை ஆவணப் படுத்தியுள்ளனர். உதாரணமாக அரசியல்யாப்புவாதிகளால் தொழிலுக்கு அமர்த்தப்பட்ட அமெரிக்க நிதியாளரான மோர்கன் ஷூஷ்டர் (அவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகற்றுவதற்கு ரஷ்யா காலக்கெடு விதித்தது. அதையே ஒரு சாக்குப் போக்காகக் காட்டி, ரஷ்யா அதன் ஆக்கிரமிப்பை மேற்கொண்டது.) பெண்களின் அந்நடவடிக்கைகளை நேரில் கண்டார். அவருடைய *The Strangling of Persia* என்ற நூலில் - தேசியப் பேரவையின் பிரதிநிதிகள் ரஷ்யாவின் கோரிக்கைகளுக்கு விட்டுக் கொடுத்து விட்டார்கள் என்ற வதந்திகள் பரவியதும் அப்பேர்ப்பட்ட சிறுமைப்படுத்தலைத் தடுப்பதற்கு செய்ய வேண்டியது யாது என்ற கேள்வி எழும்பியது என விபரிக்கிறார்.

> பாரசீகப்பெண்கள் இதற்கு விடையை அளித்தனர். மதில் சூழ்ந்த முற்றங்களையும் அந்தப்புரங்களையும் விட்டு வெளியேறி சுமார் 300 பெண்கள் அணிவகுத்துச் சென்றனர்... அனேகர் தமது பாவாடையினுள் அல்லது சட்டையின் கைப்பகுதிக்குள் கைத்துப்பாக்கிகள் வைத்திருந்தனர். அவர்கள் நேரடியாக மஜ்லிசுக்குச் சென்று ஒன்றுகூடி தம்மெல்லோரையும் அனுமதிக்கும்படி மன்றத்தலைவரிடம் கோரினர்... நேருக்குநேர் முகங் கொடுத்து அவருடன் வாதாடினர்... கைத்துப்பாக்கியை அச்சுறுத்தும் வகையில் காட்டினர். முகத்திரைகளைக் கிழித்து எறிந்தனர். பாரசீக மக்கள் மற்றும் தேசம் என்பவற்றின் சுதந்திரத்தைப் பேணிக் காக்க வேண்டியதன் கடமையிலிருந்து பிரதிநிதிகள் நழுவுவாரேயானால் தாம் தம் சொந்தக் கணவர்களையும் புதல்வர்களையும் கொன்ற பின் தம்முடைய சொந்தப் பிணத்தையும் விட்டுச் செல்லப் போவதாகத் தமது தீர்மானத்தை வெளிப்படையாகத் தெரிவித்தனர் (Sanghvi. *et al.*1967 : 15 - 16).

அக்காலகட்டத்தின் போது. பெண் செயற்பாட்டாளர்களின் மத்தியில், பெண் கல்வியின் முன்னோடியான சதீகா தவ்ளதாபாடி குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற்றிருந்தார். அவரது தந்தை (இஸ்ஃபஹானைச் சேர்ந்த முன்னணி வகிக்கும் ஒரு முஜாஹித் ஆவர்) அவரை ஒரு சிறுவனைப் போல உடையுடுத்தி சகோதரனின் பாடசாலைக்கு அனுப்புமளவுக்கு 'முற்போக்கான' கருத்துக்கள் கொண்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இஸ்ஃபாஹானில் முதலாவது பெண்கள் பாடசாலையை சதீகா தவ்ளதாபாடி திறந்ததுடன், பின்னர் பெண்கள் பாடசாலைகளுக்கான அரசாங்கப் பரிசோதகராகவும் விளங்கினார். அவர் பெண்களுக்கான செய்தித்துறையிலும் தீவிரமாகச் செயற்பட்டவர். *ஸபவுன் -இ -ஸனன் (The Tongue of Women)* என்று மாதமிருமுறை வெளியீட்டை அவர் இஸ்ஃபஹானில் நடத்தி வந்தார். அது, அரசியல் பிரச்சினைகள் சம்பந்தமாகப் பலமான தேசியவாத நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது.

1919ஆம் ஆண்டில் பிரிட்டனுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை வன்மையாகக் கண்டித்தது. இது, கடுமையான பரபரப்பை ஏற்படுத்தியதன் காரணமாக இறுதியில் மூடப்பட்டது (Woodsmall 1936 : 145, 365).

1911ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், அரசியல் யாப்பு பற்றி விவாதிக்கப்பட்ட போது பெண்களும் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று ஹாஜி வாகில் எல் ரோயா யோசனை கூறியது ஒரு புதுமையான அம்சமாகும். லண்டன் டைம்ஸ் செய்தித்தாளில் வெளியிடப் பட்ட ஓர் அறிக்கையின்படி, பெண்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டது ஏன், என்று அவர் கேள்வி எழுப்பினார். 'அவர்கள் மனிதர்கள் இல்லையா? எமக்கு இருப்பதைப் போல, அதே உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் அருகதை அவர்களுக்கு இல்லையா? உலமாக்கள் இதற்குப் பதில் கூறவேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்'. இதற்குப் பதில் அளித்த சமயத் தலைவர் ஷெய்க் அஸ்ஸதொல்லா, 'இந்தப் பிரச்சினையை நாம் விவாதிக்கக் கூடாது; இது, இஸ்லாமிய பாராளுமன்றத்தின் சம்பிர தாயங்களுக்கு முரணானானது. எனினும் பெண்களை ஒதுக்கி வைப்பதற்கான காரணம், அல்லாஹ் அவர்களுக்கு அரசியலில் பங்கேற்பதற்குத் தேவைப்படும் ஆற்றலை வழங்கவில்லை என்பதாகும்' (Bayat-Philipp 1978 : 301).

அந்தக் காலப்பகுதியின் போது ஈரானியப் பெண்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை வெளிநாட்டுச் செய்தியாளர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். 'பெண்கள் இயக்கம் அதன் குழவிப் பருவத்திலேயே இருக்கின்றது: ஆனால், கல்விப் பிரச்சினைகளை விவாதிப்பதற்காக, சென்ற ஏப்ரல் மாதம் டெஹ்ரானில் மிகப் பெரிய கூட்டத்தைப் பாரசீகப் பெண்கள் முதல் தடவையாக நடத்தியிருக்கிறார்கள் என்பது, பாரசீகத்தின் வருங்காலப் பரிணாமத்தில் ஒரு முக்கியமான பங்கைக் கல்வியே வகிக்கும் என்பதை மறைமுகமாகக் காட்டுகின்றது' (London *Times*, quoted in Bayat-Philipp 1978 : 300). முகத்திரையிட்ட பெண்கள் ஓர் இரவுக்குள்ளாக ஆசிரியர் களாகவும், செய்தித்தாள் எழுத்தாளர்களாகவும் பெண்கள் மன்ற ஸ்தாபகர் களாகவும் மாறி, ஒரு தூரதிருஷ்டி கொண்ட அறப்போராளியின் திடீர் வேகத்துடன் முற்றுமுழுக்கப் புதிய கருத்துகளைத் துரிதமாக ஜீரணித்துக் கொண்டு, அவர்கள் ஆற்றிய பங்குபற்றி ஓர் அமெரிக்க எழுத்தாளர் கருத்துத் தெரிவிக்கின்றார் (Shuster, quoted in Bayat-Philipp 1978 : 300).

1912ஆம் ஆண்டு மஜ்லிஸ் தோற்கடிக்கப்பட்டமையால் மாற்றங்களை





எதிர்க்கும் காலகட்டத்தை அது உருவாக்கியது. எனினும், இக்காலத்தில் நிகழ்ந்த ஆர்ப்பாட்டங்களில் பெண்களின் பங்கேற்புப் பற்றிய படிப்பினை களை வரலாற்றாசிரியர்கள் உதாசீனப்படுத்தினாலுங்கூட, அவை மறக்கப் படவில்லை. ஈரானியப் பெண் அறிஞரான கலாநிதி மங்கோல் பயாத் - பிலிப் இவ்வாறு கூறுகிறார்:

> புரட்சி பற்றிப் பின்னர் வெளியிடப்பட்ட பெரும்பாலான வரலாற்றுப் பதிவுகளில் பெண்களின் பங்கு மிகவும் குறைவாக மதிப்பிடப்பட்டது அல்லது முழுமையாகவே பாராமுகமாக விடப்பட்டது. 1905 - 1911 காலப்பகுதியிலான அரசியல் நிகழ்வுகளில் அவர்களின் பங்கேற்பானது தன்னியல்பான சுயமுயற்சி எனலாம். பெண்களின் பங்கு - சடுதியாக ஒரு புதிய தேசியவாத உணர்வில் அவர்களை அமிழ்த்திச் செயலில் இறங்கத் தூண்டியது மாத்திரமன்றித் தம்மை முறைமையாக அங்கீகரிப்பதற்காக, முளைவிடாதிருக்கும் உறுதியான அபிலாஷையையும் - தெளிவுபடுத்தியது. எனவே, புரட்சியானது பெண்களின் விடுதலைக்கான பரீட்சார்த்தப் போராட்டத்துக்கு நல்ல விளைநிலமாகியது. அது உடனடியாகப் பலன் தராவிட்டாலும் அதற்கான வித்துக்கள் ஊன்றப்பட்டன. (Bayat-Philipp1978 : 305 - 6).

முதலாம் உலகப் போருக்குப் பின்னரான ஆண்டுகளில், பல ஆசிய நாடுகளில் சீர்திருத்தவாத, புரட்சிகர உணர்வு எழுச்சி பெற்றது. சில ஈரானியப் பெண்கள் கூட, தீவிரமான மாற்றங்கள் ஏற்படும் என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தார்கள் எனத் தோன்றுகின்றது.

> 'யுத்தத்திற்குப் பிற்பாடு வெளிநாடுகளில் ஏற்பட்ட மகத்தான மாற்றங்கள் ஈரானிலுள்ள பெண்களின் அந்தஸ்த்தில் எந்தவிதமான வேறுபாட்டையும் ஏற்படுத்தவில்லை என்ற உண்மை மொஹ்தாராம் கனுமுக்கு (ஒரு பெண் வழிகாட்டியாவர்) ஏமாற்றத்தை அளித்தது. தான், இந்தப் போராட்டத்தில் நேரடியாகத் தலையிடுவது தனது கடமை என அவர். உறுதியாகக் கருதினார். அவர், (சிறுதொகையினராயிருந்த) சுதந்திரம் நாடும் ஏனைய பெண்களுடன் தொடர்பு கொண்டு, 1922ஆம் ஆண்டு தேசபக்த பெண்கள் இணைக்குழு என்ற பெயர் கொண்ட அமைப்பை உருவாக்கினார்' (Yeganeh1982 : 30)

## ரெஷாகானின் கொள்கைகள்

அடுத்த வரலாற்றுக் கட்டத்தின் போது, படைவீரனாய் இருந்து 1924 இல் ஷாவாகிய ரெஷாகான், கொடுங்கோலனாக ஆட்சி செய்தார். அவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுக் கருத்துக்கள் வெளியிடுதலை நசுக்கி, 1930களில் இருந்த உள்நாட்டு வர்க்கக் கட்டமைவுகளைப் பேணிக் காத்தார். பிரிட்டன், ரஷ்யா ஆகிய பாரம்பரிய விரோதிகளிலிருந்து விலகிச் செல்லும் நோக்கில் நாட்டைப் பாஸிஸ ஜேர்மனியின் பக்கம் திசை திருப்பினார். அவர் தனது ஆட்சிக் காலத்தின் போது, துருக்கியில் மதச்சார்பின்மை, நவீனமாக்கம் ஆகியன சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த நடவடிக்கைகளால் கவரப்பட்டார். அவர் தனது 16 ஆண்டு கால எதேச்சாதிகார ஆட்சியின் போது, அரசுக்கான இயக்க நுட்பங்களை நவீனமாக்குதல் என்பதைக் கையாண்டு, குறிப்பாக இராணுவச் சீர்திருத்தங்கள் மூலம் படைக்கு ஆள் திரட்டுவதை அறிமுகப்படுத்துவது, இராணுவக் கல்லூரிகள் ஸ்தாபிப்பது, மருத்துவப் படையணி, இராணுவப் பொலிஸ், மற்றும் பிற துணைச் சேவைகளை ஏற்படுத்துவது ஆகியவற்றினால் நாட்டின் மீது தனது பிடியைப் பலப்படுத்திக் கொள்ளும் கொள்கைகளைக் கடைப்பிடித்தார். இராணுவம் மற்றும் பொலிசாரின் துணை கொண்டு, கிளர்ச்சிகளை நசுக்கினார். நாடோடிகளான ஆதிவாசிகளை நிராயுதபாணியாக்கினார். அவர்களைப் பலவந்தமாகக் குடியமர்த்தினார். ஷாவின் சர்வாதிகாரக் கொள்கைகள், அவரது அரசியல் விரோதிகளை, குறிப்பாகக் கம்யூனிஸ்டுகளை அடக்கி ஒடுக்குவதையும் உள்ளடக்கியது.

சோவியத் யூனியனுக்குச் சமீபமாக ஈரான் இருந்தமையாலும், 1920ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் அங்கு ஈரானியர்கள் புலம் பெயர்ந்து தொழிலாளர்களாக வாழ்ந்து வந்தமையாலும், சோவியத் யூனியனில் ஏற்பட்ட நிகழ்வுகள் ஈரானிலும் அதன் செல்வாக்கைச் செலுத்தின. குச்சிக் கானின் தலைமையில் சோவியத் குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்ட ஜிலான் மாகாணத்தில், 1920ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஈரானிய கம்யூனிஸ்ட் கட்சி, மிகவும் முனைப்பாகச் செயல்பட்டது. ஆனால், ஜிலான் குடியரசு அழித்தொழிக்கப்பட்டதால் கம்யூனிஸ்ட் இயக்கம் பலஹீனம் அடைந்ததுடன் அநேகமான கட்சிப் பணியாளர்கள் போராட்டங்களில் உயிர் துறந்தனர். 1922ஆம் ஆண்டு ஹக்கிகாத் (சத்தியம்) என்ற சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட கட்சிச் செய்தித்தாள் ஆரம்பிக்கப்பட்டு, அக்கட்சியை வளர்த்தெடுக்கும் புதியமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவை கணிசமான வெற்றியையும் கண்டன. கம்யூனிஸ்ட்டுகள் பெண்கள், இளைஞர் அமைப்புகள், தொழிற்சங்கங்கள், கலாசாரக் குழுக்கள் என்பனவற்றை அமைத்து, தேசியவாதச் சக்திகளுடன் ஒத்துழைப்பதற்கு முயன்றனர். பெண்கள் பிரிவு, கிளேரா செட்கினின் கம்யூனிஸ்ட் பெண்களின் உலகளாவிய





கூட்டமைப்புடன் (1920 இல் நிறுவப்பட்டது) தொடர்பு வைத்திருந்தது. ஈரானியரான செல்வி ட்சேவாத் - ஸாதே அதன் குழுவில் அங்கம் வகித்தார் (Die Kommunistische Fraueninternationale, 1921-25).

ஆனால் ரெஷா கானின் அடக்குமுறைக் கொள்கைகள் காரணமாக 1925ஆம் ஆண்டின் பின்னர் கட்சி பலஹீனம் அடைந்தது. 1931ஆம் ஆண்டில் கட்சி தடை செய்யப்பட்டு, கடுமையான அடக்குமுறைக் காலகட்டம் ஆரம்பமானது. இக்காலத்தில் சிறையில் அடைக்கப்பட்ட தீவிரவாதிகளுள் அனேகமான பெண்களும் இருந்தார்கள். இவர்களுள் ஜமீலே சாதிக்கியும், ஷோக்கத் ரூஸ்தாவும் அடங்குவர். முன்பு இவர்கள் பெண்களின் முகத்திரையை ஒழித்துக் கட்டுவதற்கு ஆதரவாக வாதாடிய அமைப்பு ஒன்றை ராஷ்ட் நகரில் (ஜிலான் மாகாணத் தலைநகரம்) நிறுவினர் (Roshanak and Faramarz 1982: 159). வெளிநாடுகளில் இருந்த வேளையில் மார்க்ஸியத்தால் ஈர்க்கப்பட்ட தாஹி அராணியும் ஏனைய மாணவர்களும் இணைந்து 1932 இல் புத்திஜீவிகள், எழுத்தாளர்கள் என 53 பேரைக் கொண்ட நுண்ணாய்வுக் குழு ஒன்றை உருவாக்கினர். இவர்கள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். பின்னாளில் இவர்களில் சிலர் கம்யூனிஸ்ட் செயற்பாட்டாளர்களுடன் இணைந்து தூடே கட்சியை உருவாக்கினர்.

ரெஷாகானின் ஆட்சிமுறையின் கீழ் மக்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பொருட்டு கடுமையான அதிகாரப்பாணியிலான அரசபணிகள் மேற்கொள்ளப்பட்டன. நிதி, வரி மற்றும் நீதிச் சீர்திருத்தங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன. பாரியநெடுஞ்சாலைகளும், ஈரானுக்குக் குறுக்கே செல்லும் ரயில் பாதையும் நிர்மாணிக்கப்பட்டன. பாரம்பரியப் பொருளாதாரம் மற்றும் சமுதாயத்தின் மீது புதிய கட்டமைவுகளைத் திணிப்பதன் வாயிலாக நாட்டைக் கைத்தொழில் மயமாக்குவதற்கும், நவீனமாக்குவதற்குமான கொள்கைகள் அமுல் செய்யப்பட்டன. நுகர்வோர் பண்டங்கள் சம்பந்தமான கைத்தொழில் கள் (புடவை, சவர்க்காரம், கண்ணாடிப் பொருள்கள், தீப்பெட்டிகள்) ஆரம்பிக்கப்பட்டன. 1939ஆம் ஆண்டளவில் 650,000 தொழிலாளர்களைக் கொண்ட ஓர் ஊழியர் அணி உருவாகியிருந்தது (Roshanak and Faramarz 1982: 158). மேற்குநாடுகளுடன் மேற்கொண்ட தொடர்புகள், இந்த மாற்றத்தின் திசை மீது சாதகமான தாக்கத்தைச் செலுத்தின. மாற்றங்கள் சார்பாக சிறு நடுத்தர வர்க்கத்தினரின் அழுத்தங்கள் இருந்தபோதிலும் 'ஈரானை ஓர் பலம் பொருந்திய நாடாகவும் சுயமரியாதையுடன் நவீன உலகில் தன் சொந்த நிலைப்பாட்டைப் பேணும் நாடாகவும் இருக்க ஒரேயொரு வழி மேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டத்திலிருந்து வரும் நவீனமயமாக்கம் தான் என்று ரெஷா ஷாவும் அவரைச் சுற்றியிருந்தவா்களும் கண்டு கொண்டனா்' (Keddie 1981 : 93).

சகல எதிா்ப்புக்களையும் அடக்கி ஒடுக்கும் கொள்கையைக் கடைப்பிடித்த ஷா, ஏக காலத்திற் பெண்களை 'விடுவிக்கவும்', அவா்களைத் தனிமைப்பாட்டில் இருந்து வெளியேற்றி, சமுதாயத்திலும் தொழிலாளா் அணியிலும் சோ்த்துக் கொள்ளவதற்கான முயற்சிக்ளை மேற்கொண்டமை ஓா் விசித்திரமான விஷயம் தான். 1934 ஆம் ஆண்டு, துருக்கிக்கு விஜயஞ் செய்த ரெஷா கான், முஸ்தபா கெமாலின் மூலம் உத்வேகம் பெற்று நவீனமாக்கத்திற்கான முயற்சிகளை மேற்கொண்டாா். சமயத்திலிருந்து அரசியல், சட்டம், கல்வி ஆகியவற்றை வெவ்வேறுபடுத்துதல், ஈரானியப் பெண்களின் விமோசனம் சாா்பாக மேல்மட்டத்திலிருந்து வரும் ஒருசில சீா்திருத்தங்களை மேற்கொள்ளல் அவற்றில், பெண்களுக்கான கல்வியை ஊக்குவிப்பது. முகத் திரையைத் தடைசெய்தல் மூலம் உடைச் சீா்திருத்தங்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகியன அடங்கும். முதல்முறையாக, 1935ஆம் ஆண்டு, பன்னிரெண்டு பெண்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றனா். முதலாவது பெண்கள் கல்லூாியில், மாணவிகள் மத்தியில் உரையாற்றிய ஷா பின்வருமாறு கூறினாா். 'இந்த நாட்டுப் பெண்கள் *சமுதாயத்தில் இருந்து தூரத்தில் ஒதுக்கிவைக்கப்பட்டு இருந்தமையால் தமது திறமைகளையும் சுயபண்புகளையும் வெளிக்காட்ட முடியாமல் இருந்தனா். தமது நேசத்திற்குாிய நாட்டைக் கட்டியெழுப்புவதில்* தமது பங்கை வகிக்க முடியாமல் இருந்தனா். இதன் விளைவால், அவா்கள் தமது நாட்டிற்கான கடமையை ஆற்ற முடியாமல் இருந்தது' (Sanghvi et al. 1967 : 25).

பெண்கள் *சதோா்* எனப்படும் முகத்திரையணிவதைக் கைவிடும்படி நிா்ப்பந்தித்த ஷாவின் முயற்சிகள் மதச்சாா்புச் சக்திகள் மத்தியில் குரோதத்தைத் தூண்டியதென்பதில் எதுவித வியப்பும் இல்லை. 1928ஆம் ஆண்டு மகாராணியின் தாயாா் வழமையான கறுப்புநிறச் *சதோருக்குப்* பதிலாக மெல்லிய முகத்திரை அணிந்து கொம் நகாில் உள்ள ஓா் வழிபாட்டு ஸ்தலத்திற்குச் சென்றாா். மதச்சாா்புள்ள உலமா, அவரைக் கடுமையாக எச்சாித்தாா். எனவே, ரெஷா ஷா, பாதணிகளுடனேயே பள்ளிவாசலுக்குச் சென்று உலமாவைத் தாக்கினாா் என்ற ஓா் வதந்தியும் உண்டு. 1934ஆம் ஆண்டில் ஆசிாியைகளும் மாணவிகளும் முகத்திரை இல்லாமலேயே சமூகமளிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. 1936 ஆம் ஆண்டு பெப்ரவாி மாதம் *சதோா்* அணிவது தடை செய்யப்பட்டது. இவ்விதம், பெண்கள் முகத்திரை அணிவதை உத்தியோகபூா்வமாகச் சட்ட விரோதமாக்கிய முதலாவது இஸ்லாமிய நாடாக ஈரான் விளங்கியது. அரசாங்க அதிகாாிகளது மனைவிமாா் *சதோா்* அணிந்திருந்தால், அவ்வதிகாாிகள் திரையரங்குகளுக்கும் பொது இடங்களுக்கும் செல்வதற்கு அனுமதிக்கப் படவில்லை. 'முகத்திரை அணிந்த பெண்களைப் பயணிகளாக ஏற்றிச் சென்ற டாக்சி மற்றும் பஸ்வண்டிகளின் சாரதிகள் மீது அபராதங்கள் விதிக்கப்பட்டன' (Savory 1978 : 98).





1936இல் தான், இப்பிரச்சினையை எடுத்துக் கூறுவதற்காகக் கூட்டாகத் திட்டமிடப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான முன் முயற்சியை அரச மாளிகையே எடுத்தது. இந்த ஆண்டின் ஜனவாி மாதத்தில் டெஹ்ரானின் நோா்மல் பாடசாலையின் பாிசளிப்பு விழாவின் போது, மன்னா் ஷா கலந்து கொண்ட வேளையில் மகாராணியும் இளவரசிகளும் முகத்திரை இல்லாலும், ஐரோப்பிய பாணியிலான உடையணிந்தும் பகிரங்கமாகத் தோன்றினா். இது, பெண்கள் விமோசனத்தின் ஒரு முக்கியமான மைல் கல்லாகப் பிரசித்தி பெற்றது. 500 பெண்கள் மத்தியில் ஷா உரையாற்றினாா், "எமது நாட்டு மக்களில் அரைவாசிப் போ் கணக்கில் எடுத்துக் கொள்ளப் படவில்லை என்பதை ஒருபோதும் மறக்கலாகாது. அதாவது நாட்டின் உழைப்பாளா் அணியில் அரைவாசிப்போ் வாளாவிருக்கின்றனா்'. எனினும் எதிா்வரும் தலைமுறைக்கு நன்மையை அளிப்பதற்கு அவசியமாகத் தேவைப்படுவது பெண்களுக்கான கல்வி என்ற நன்கு பழக்கப்பட்ட தொனிப்பொருளை அவா் அழுத்தமாகக் கூறினாா், 'வருங்கால மகிழ்ச்சி உங்களின் கைகளிலேயே உள்ளது. வளரும் தலைமுறையினருக்குக் கல்வியளிப்பவா் நீங்கள் தான். நல்லாசிாியைகளாகி, நற்பிரஜைகளை உருவாக்கும் வாய்ப்பும் உங்களுக்கு உண்டு' (Elwell - Sutton 1978 :34).

இந்த நிகழ்ச்சி பற்றிய அக்காலத்து விபரத்தின்படி, அதில் கலந்து கொண்ட எல்லாப் பெண்களுமே முகத்திரை இல்லாமல் இருந்தனா். அரச ஊா்வலத்தைப் பாா்ப்பதற்காக வந்திருந்த, முகத்திரை இல்லாத பெண்கள் கூட்டம் வீதிகளில் வாிசையாக நின்றது:

> இந்தச் சம்பவத்தின் எதிரொலி ஈரான் முழுவதிலும் உணா்வலையை எழுப்பியது. உதாரணமாக, ஷா வின் முன்னுதாரணத்தைக் கொண்டு, பெண்கள் பாடசாலைகளில் பெண்களின் முன்னேற்றத்தை ஊக்குவிப்பதற்காகப் பல இடங்களில் பொலிஸ் அதிபா். பாடசாலை அத்தியட்சகா் ஆகியோருடன் இணைந்து. ஆளுனா் கூட்டங்களை நடத்தினாா். மாணவிகள் முகத்திரைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசியெறிந்தனர். விமோசன தினமான 8 ஆம் திகதி ஜனவரி 1936க்குப் பின்னர், ஈரானிய செய்தித்தாள்களில் பல நாட்களாகப் பெண்களின் முன்னேற்றம் பற்றிய செய்திகளும் கட்டுரைகளும், படங்களும் நிரம்பி வழிந்தன. பாடசாலைச் சிறுமிகளின் விளையாட்டுப் போட்டிகள், பெண் சாரணர்கள், பெண்கள் மன்ற நடவடிக்கைகள் ஆகியன முதற் பக்கங்களைப் பிடித்துக் கொண்டன. சமூக முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் வகையில், ஈரானின் பழைய மற்றும் புதிய பெண்ணை எதிர்மறையாகச் சித்திரிக்கும் வகையில் இரண்டு பெண்களால் நடிக்கப்பட்ட இரண்டே கதாபாத்திரங்கள் அடங்கிய விசேஷ நாடகங்கள் வாயிலாகவும் இந்த முற்போக்கான இயக்கம் ஊக்குவிக்கப்பட்டது (Woodsmall 1936 : 44)

1935ஆம் ஆண்டு, ஷாவின் வலியுறுத்தலின் பேரில் பெண்களுக்கென, 'விரிவுரைகள், முதியோர் வகுப்புக்கள், கண்காட்சிகள், விளையாட்டு மன்றங்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்வதற்காகவும் முகத்திரையைக் கைவிடச் செய்தலை ஊக்குவிப்பதற்காகவும் "பெண்கள் நிலையம்" உருவாக்கப்பட்டது' (Yeganeh 1982: 32). தொடரும் வருடங்களில், பெண்கள், தமது பாரம்பரிய உடைகளைப் கைவிடும்படி செய்து, ஐரோப்பிய பாணியிலான ஆடைகளை அணிவதற்கு ஆதரவாக தீவிர பிரசாரம் ஒன்று ஆரம்பமானது. டெஹ்ரானின் தையல் நிலையங்கள் கொள்ளை இலாபம் ஈட்டுவதைத் தவிர்க்குமுகமாக சட்டங்கள் கொண்டு வரும் அளவிற்கு பெண்களுக்கான கோட்டுகள், சட்டைகள், தொப்பிகள் என்பனவற்றிற்கு கிராக்கி ஏற்பட்டது. நவீன பாணியிலான உடைகளுடன் சம்பந்தப்பட்ட நயம்மிகு சமூக ஆசாரமுறை பற்றி செய்தித்தாள்கள் பெண்களுக்குச் 'சரியான' தகவல்கள் வழங்கி வந்தன.

> பொதுக் கூட்டங்களில் பெண்கள் தமது தொப்பிகளை அகற்றலாகாது. ஆனால், தமது மேல் கோட்டுகள், கையுறைகள் போன்றவற்றைக் கழற்றலாம் அல்லது கழற்றாமலும் விடலாம்... கைக்குட்டைகள், சிகரெட்பெட்டிகள் மற்றும் பிற பொருள்களை இதுவரையில் தமது சட்டைக் கையினுள் வைத்திருந்தவர்கள் இனிமேல் அத்தகைய பொருட்களைத் தமது கைப்பைகளில் வைத்துக் கொள்ள வேண்டும்... பழம் அல்லது இனிப்புப் பண்டத்தைக் கையுறை அணிந்தவாறு எடுத்தல் ஆகாது (Woodsmall 1936 : 45).

முகத்திரை சட்டபூர்வமாக ஒழித்துக் கட்டப்பட்டமை ஒரு மேலோட்டமான மாற்றமே என்ற போதிலும், அது சமுதாயத்தில் எந்தவொரு அடிப்படை மாற்றத்தையும் பிரதிபலிக்கவில்லை. ஆனாலும் பெரும்பாலான பெண்களுக்கு இது வரவேற்கத்தக்க சீர்திருத்தமாகவே விளங்கியது. நாட்டின் முன்னணி







1935 ஜூனில் ஈரானின் தவ்றிஸ்இல் நடைபெற்ற முதலாவது பெண்கள் விளையாட்டுப் போட்டியின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்த பெண்கவிஞர் பர்வின் -இ இற்றிசமி (1907 -41), இத்தருணத்தில் 'ஈரானில் பெண்' (*ஸான் டார் ஈரான்*) என்ற ஒரு கவிதையை எழுதினார்:

*இது ஈரானியப்பெண் முன்னொரு போதும் ஈரானியர் அல்லாதவர் போல் இருக்கிறது.*
*துரதிர்ஷ்டமும் அக்கறையின்மையையும் விட அவர்களுக்கு எந்தவித முன்முயற்சியும் இருக்கவில்லை.*
*அவள், ஓர் தனிமையான மூலையில் வளர்ந்து மறைந்தாள்.*
*இந்தப் பெண், அந்த நாட்களில் ஒரு கைதியாக இருந்தாளே அன்றி வேறொருத்தியாகவும் வாழ்ந்ததேயில்லை.*
*பெண்ணைப் போல பல நூறுகாலமாய் இருளில் வாழ்ந்தோர் எவருமில்லை.*
*வஞ்சனை என்ற ஆலயத்தில் பெண்ணைப் போல் பலியிடப்பட்டதில்லை.*

(Bayat-Philipp 1978:306)

ஆயினும், சமூகப் பழக்க வழக்கங்களைப் பாதிக்கும் வகையில் மேல்மட்டத்தில் இருந்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் எதிர்மறையான நீண்டகால விளைவுகளையும் கொண்டிருக்க முடியும். முகத்திரை அணிதலைச் சட்ட விரோதமாக்குவது பற்றி எழுதிய ஈரானியப் பெண் அறிஞர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்: '1941ஆம் ஆண்டு வரையில் இந்தச் சட்டம் குரூரமான முறையில் அமுல் செய்யப்பட்டது. அதன் எதிர்விளைவாக பிற்காலத்தில் முகத்திரை அணிவதற்கான ஆதரவு உருவாவதற்கு அதுவே ஒரு காரணமாய் இருந்தது. சட்டத்தைக் கொண்டு முகத்திரை விவகாரத்தை அணுகுதல் பயனுள்ள முறையா என்று பலரும் சந்தேகிக்கின்றனர்.' இருப்பினும், ரெஷா ஷாவின் ஆட்சிமுறையில் மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகள் மாற்றங்களை அறிமுகப்படுத்தின என அவர் மேலும் கூறுகிறார்:

உண்மையிலேயே. மேல்மட்டத்தினர் மத்தியில் பலதாரத் திருமணங்கள். நவீனமாகிய வகுப்பினர் மத்தியில் திருமணம் மற்றும் விவாகரத்து என்பவற்றில் நிலவிய பாரபட்சநிலை என்பன படிப்படியாகக் குறைந்தது. பெண்களுக்கு சம்பளத்தோடுகூடிய வேலை வாய்ப்பு அதிகரித்தது. இந்தப் போக்குகள் முதற்கண் நடுத்தர மற்றும் மேல்மட்டப் பெண்களிடையேயே தாக்கத்தை ஏற்படுத்தின. ஒரு தசாப்த காலத்தில் இவர்களது முன்னேற்றம் கணிசமான அளவு அதிகரித்த போதிலும், அரசியல் உரிமைகளையோ அல்லது பூரண பொருளாதார, சமூக சமத்துவத்தையோ அவர்கள் பெறவில்லை (Keddie 1981 : 108 - 9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பஹ்லவி வம்சத்தினரின் ஆட்சிக்காலத்தில் பெண்களின் விமோசனம் முற்றிலும் ஒரு பூர்ஷ்வா நகர்ப்புற இயல்நிகழ்வாகவே விளங்கியது. பெண்ணுரிமை பற்றிய விவகாரம் மிகுந்த ஆர்வத்துடன் விவாதிக்கப்பட்டு, மகளிர் ஸ்தாபனங்கள், செய்தித்தாள்கள் என்பன ஆரம்பிக்கப்பட்டு, பகிரங்கமாக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்ட, 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் நிலவிய தீவிர செயற்பாடுகள், துரதிர்ஷ்ட வசமாக ஷா ரெஷா கான் மற்றும் அவரது புதல்வர் ஷா மொகமட் ரெஷா பஹ்லவியின் காலகட்டத்தில் ஏற்பட்ட கருத்துத் தடங்கல்கள் காரணமாக விட்டுக் கொடுக்க நேரிட்டது. 1963இல், மன்னர் ஷா ஈரானியப் பெண்களுக்கு வாக்குரிமை அளித்தார். பலதாரமணம் என்ற காரணத்தின் அடிப்படையில் விவாகரத்துச் சாத்தியப்படலாம் என்பதை 1967ஆம் ஆண்டின் குடும்பப் பாதுகாப்புச் சட்டம், விதித்தது. விவாகரத்துச் சம்பந்தமாக முன்னோடி நடவடிக்கைளை எடுப்பதற்கான கூடுதல் வாய்ப்புக்களைப் பெண்களுக்குக் வழங்கவும் இச் சட்டம் உதவியது. ஏனைய சில உரிமைகளைப் பெண்கள் பெற்றிராத நிலைமையில், வாக்குரிமை கிடைத்தமை என்பது, பெரும்பான்மையான ஈரானியப் பெண்களுக்கு எதுவித அர்த்தமும் அற்ற காரியமாகியது. 1920ஆம் ஆண்டுக்கு முன்னரான வருடங்களில் பெண்ணிய நடவடிக்கை பற்றிய அவர்களது முதலாவது அனுபவம், குறுகிய காலத்தின் பின் முற்றுப்பெற்றது. அதைத் தொடர்ந்த காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் வர்க்க பேதமுடையவையாக இருந்தன. மன்னர் ஷாவின் வெறுப்புக்குரிய அடக்குமுறை ஆட்சியுடன் 'பெண்கள் விமோசன' நடவடிக்கைகள், இணைந்திருந்தன. அதனால், 1979ஆம் ஆண்டு ஷா பதவி கவிழ்க்கப்பட்டதன் பின்னர், புதிய ஆட்சியாளர்களின் நிர்வாகத்தில் பெண்கள் நிலைமை மேலும் மோசமடைந்தது.

# ஆப்கானிஸ்தானில் பெண் விடுதலைக்கான முயற்சிகள் – ஒரு குறிப்பு

துருக்கியும், எகிப்தும் தமது பொருளாதாரங்கள், சமூகக் கட்டமைவுகள் ஆகியவற்றை நவீனமாக்குவதற்கு மேற்கொண்ட முயற்சிகளும், அதைத் தொடர்ந்து பெண்கள் விமோசனத்துக்கான இயக்கமும் ஆப்கானிஸ்தான் உட்பட, இந்தப் பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகள் மீதும் செல்வாக்குச் செலுத்தின. மத்திய ஆசியா, மத்தியகிழக்கு, இந்தியா ஆகியவற்றுக்கிடையே புவியியல் ரீதியில் ஒரு முட்டுச் சந்தியாக விளங்கும் ஆப்கானிஸ்தான், பல நூற்றாண்டுகளாகவே ஒரு யுத்தகளமாக விளங்கி வந்திருக்கின்றது. கி.பி. 10ஆம் நூற்றாண்டில் அங்கு இஸ்லாம் பிரதான சமயமாகியது. ஆனால், ஆப்கானிஸ்தானின் பழங்குடி மக்கள், 18ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே தமது சொந்தத் தனித்துவத்தை உறுதிப்படுத்தவும், தமது தேசிய சுதந்திரத்தை நிலை நிறுத்தவும் முயற்சிகளை ஆரம்பித்தனர். இந்த முயற்சிகளுக்கு, ஒரு கட்டத்தில் துருக்கியர்களும், பாரசீகர்களும் மற்றுமொரு கட்டத்தில் பிரிட்டிஷாரும், ரஷ்யர்களும் என பல்வேறு வெளியார்கள் கொண்டிருந்த ஆர்வங்கள் முட்டுக்கட்டையாக இருந்தன. இந்த வல்லரசுகள் பல்வேறு பழங்குடி மக்கள் குழுக்களுக்கிடையே தொடர்ச்சியாகச் சண்டைகளை ஏற்பாடு செய்து ஊக்குவித்து வந்தன. விசேஷமாக, இந்தியாவிலிருந்து பிரிட்டிஷார் தமது ஆதரவாளர்களுக்குச் சார்பாக அடிக்கடி படைசார்ந்த தூதுக் குழுக்களை அனுப்பி வைத்தனர்.

அமனுல்லா கான் 1919ஆம் ஆண்டில் பல்வேறு பழங்குடி மக்களை ஐக்கியப்படுத்தி, சிம்மாசனத்தைக் கைப்பற்றி மேற்கூறிய நிலைமைக்கு ஓர் முடிவுகட்டினார். உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களில் ஆப்கானிஸ்தானின் பூரண சுதந்திரத்தைப் பிரகடனம் செய்ததே அவரது முதலாவது நடவடிக்கைகளில் ஒன்று. பிரிட்டிஷார் இந்தப் பிரகடனத்தை ஆதரிக்கவில்லை. அதனை ஒழித்துக் கட்டும் பொருட்டு தமது பலத்தைப் பிரயோகிக்க முயன்றனர். ஆயினும், ஆப்கான் இராணுவத்தினரைப் பிரிட்டிஷாரினால் தோற்கடிக்க முடியவில்லை. ராவல்பிண்டியில் கைச்சாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கையின்படி, அவர்கள் ஆப்கானிஸ்தானின் சுதந்திரத்தை ஏற்றுக் கொள்ளும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளானார்கள்.





துருக்கி, எகிப்து ஆகியவற்றைப் போலவே, அமனுல்லா கானும் நாட்டை நவீனமாக்கத் தொடங்கினார். அவர் துருக்கி, ஈரான், சோவியத் யூனியன் ஆகிய நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி, அந்நாடுகளுட்பட ஏனைய நாடுகளுக்கும் விஜயம் செய்தார். அவர், தன்னைத்தானே 'ஒரு புரட்சியாளர்' எனக் குறிப்பிட்டுக் கொண்டார். 'கீழைத்தேய மக்களின் விடுதலையைக்' கோரி, அவர் 1921ஆம் ஆண்டில், சோவியத் யூனியனுடன் ஓர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். சில உள்நாட்டுச் சீர்திருத்தங்களையும் மேற்கொள்ள முயற்சிகள் செய்தார். கட்டாயப் படைத்துறைப் பணிக்குச் சகலரும் பதிவு செய்தல் (பழங்குடியினரின் வரிவிதிப்புமுறைகளுக்குப் பதிலாக), நீதித்துறை சீர்திருத்தங்கள் மற்றும் 1923இல் ஒரு தேசியப் பேரவை ஸ்தாபித்தல் சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட புதிய அரசியல் யாப்பும், பெண்கள் வாக்குரிமை என்பனவும் அவற்றுள் அடங்கும். (இவ்விடயத்தில், முஸ்தபா கெமால், ரெஸா கான் ஆகியோரை விட இவர் முன்னணி வகித்தார்.) 'புதிய ஆப்கானிஸ்தானின் வருங்காலக் கட்டமைவுக்கு அஸ்திவாரமாகப் பெண்களின் விமோசனம் விளங்கும்' என்று கூறிய அவர், பால்ய திருமணத்தைத் தடை செய்யும் குடும்பநெறிக்கோவையை 1921இல் அறிமுகப்படுத்தினார். அவர் பெண்கள் பாடசாலைகளை ஊக்குவித்தார். கல்விக்காக ஆப்கான் பெண்களை துருக்கிக்கு அனுப்பினார். அரசாங்க ஊழியர்கள் பலதார மணம் செய்வதைத் தடை செய்தார். அவர்கள் மேற்கு நாட்டு உடைகளை அணிய வேண்டும் என்று உத்தரவிட்டார். 1928ஆம் ஆண்டில் அவரது மனைவி சுரயா மகாராணியும் முகத்திரையின்றிப் பொது இடங்களிற் தோன்றினார்: எதிர்காலத்தில் பெண்கள் முகத்திரை அணியக் கூடாது என்றும் அவர் ஆணை பிறப்பித்தார் (Halliday 1978).

ஆயினும் ஆப்கான் சமுதாயம் இன்னமும் பழங்குடி மக்களின் பாணியிலேயே ஒழுங்கமைக்கப்பட்டுப் பழமைவாதத்தைப் பேணியது. இந்த நவீனமாக்குதல் மற்றும் சீர்திருத்தங்கள் போன்ற நடவடிக்கைகள் தமது அதிகாரங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துமெனப் பழங்குடி மக்களின் தலைவர்கள் கருதியதால் அவற்றை அவர்கள் கர்ணகடூரமாக எதிர்த்தார்கள். அதனால், உள்நாட்டுப் போர் நடந்து, அமனுல்லா கான் பதவி நீக்கப்பட்டு, அஞ்ஞாதவாசம் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டார். இன்னொரு வகையிற் கூறப்போனால், அவர் சீர்திருத்தங்களை அவசரமாக அமுல் செய்ய முயன்றமையாற் தான், அதன் எதிர்விளைவுகளை நோக்க நேரிட்டது எனலாம். உடை, போன்ற சில சீர்திருத்த அம்சங்கள் பிற்போக்குவாதிகளால் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவியாகப் பிரயோகிக்கப்பட்டன. அமனுல்லா கான், ஐரோப்பிய பாணியி லான உடையணிந்தமையால் மரபுவாதிகள் சினமூட்டப்பட்டனர். அவர், 'நவீன பாணியிலான தொப்பியணிந்து அசார் மசூதிக்குச் சென்று இஸ்லாமிய வழிபாட்டு வணக்க வகையில் முழந்தாளிட்டமையை ஒரு இழிவுக்குரிய செயலாக உலமாக்கள் கருதினர்'. மேலும், கந்தஹார் போன்ற சமய முக்கியத்துவம் வாய்ந்த நிலையங்களில் . 'மகாராணியார் முகத்திரையின்றி ஐரோப்பியப் பாணியிலான மாலை உடையுடுத்தித் தோன்றினார் என்ற செய்தி பெரும் மனக்கசப்பை உண்டாக்கியது என்றும் கூறப்படுகிறது' (Fraser - Tytler 1953 :208, 210). பழங்குடி மக்கள் மத்தியில் மோதல் ஆரம்பமாகிய வேளையில் தனது இராணுவத்தைப் பலமாகக் கட்டியெழுப்ப அமனுல்லா கான் தவறியமையால், 1929ஆம் ஆண்டு அவர் சுலபமாகப் பதவி கவிழ்க்கப்பட்டு நாடு கடத்தப்பட்டார். இதன் விளைவினால், அடுத்தடுத்து வந்த மன்னர்களான நாதிர் ஷா (1929 - 1933), ஷாஹிர் ஷா (1933 - 1973) ஆகியோர் மரபார்ந்த சமயக் கருத்துக்களுக்குத் தலைவணங்கி, பெண் களுக்குச் சாதகமான நடவடிக்கைகளை ரத்துச் செய்தனர். பெண்கள் பாடசாலைகள் மூடப்பட்டன, அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது, முகத்திரை அணிவது கட்டாயமாக்கப்பட்டது. இஸ்லாமியச் சட்டம் உறுதிப்படுத்தப்பட்டு சட்ட முறையில் முல்லாக்களின் அதிகாரம் மேலோங்கியது (Halliday 1978: 10-14). ஆப்கான் பரிசோதனையில் ஏற்பட்ட தோல்வியின் காரணமாக, பெண்களின் அந்தஸ்தைப் பாதிக்கும் விவகாரங்களை சீர்திருத்த முயலும் மற்றைய இஸ்லாமிய நாடுகள் அவதானத்தைக் கடைப்பிடிக்க நேரிட்டது.



## உசாத்துணை நூல்கள் (Bibliography)


**Abadan-Unat, Nermin** (ed.)*Women in Turkish Society* (E.J.Brill,Leiden,1981).

___Social Changes and Turkish Women', in *Women in Turkish Society* (E.J.Brill, Leiden,1981).

**Abdel Kader, Soha** *The Status of Egyptian Women 1900-1973*( The American University of Cairo, Social Research Centre , September 1973).

**Agayev, S.L.and Plastun,V.N.** "The Communist and National Liberation Movement In Iran in the 1920s', in R.A.Ulyanovsky (ed.) *The Comintern and the East: A Crtique of the Crtique* (Progress Publishers, Moscow, 1978).

**Ahmed, Leila** 'Feminism and Feminist Movements in the Middle East ', in *Women's Studies International Forum*, vol.5,no.2, 1982.

**Aksan, Akil** *Citations de Mustapha Kemal* (Ankara, 1981).

**Altiok, Fusun** 'The Image of Women in Turkish Literature', in Abadan-Unat (ed),*Women in Turkish Society* (E.J.Brill, Leiden,1981).

**Ataturk,Kemal Mustapha** *The Turkish Women - Speeches of Kemal Mustapha Ataturk* (Ankara , undated).

**Bayat-Philipp, Mangol** 'Women and Revolution in Iran 1905-1911 ', in Lois Beck and Nikki Keddie (eds),*Women in the Muslim World* (Harvard University Press, Cambridge, Mass., 1980. First edition 1978).

**Bisbee, Eleanor** *The New Turks- Pioneers of the Republic, 1920-1950* (Pennsylvania,1951).

**Cosar, Fatma Mansur** 'Women in Turkish Society ', in Lois Beck and Nikki Keddie (eds),*Women in the Muslim World* (Cambridge, Mass.,1980).

**El-Saadawi, Nawal** *The Hidden Face of Eve--Women in the Arab World* (Zed Press, London, 1980).

**Elwell-Sutton, L.P.** ***Persian*** *Oil . A Study in Power Politics* (London, 1955).

___'Reza Shah the Great : Founder of the Pahlavi Dynasty', in G. Lenczowski(ed.) *Iran under the Pahlavis* (California, 1978).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Fernea, Elizabeth W. and Bezirgan, Basima Quattan** (eds) *Middle Eastern Muslim Women Speak* (Austin University Press, Texas, 1977).

**Fischer, Michael M.J**. 'On Changing the Concept and Position of Persian Women', in Lois Beck and Nikki Keddie (eds)*Women in the Muslim World* (Cambridge, Mass., 1980. First edition 1978).

**Fraser-Tytler, W.K**. *Afghanistan, A Study of Political Developments of Central and South Asia* (Oxford, 1953).

**Halliday, Fred** 'Revolution in Afghanistan', *New Left Review*, no. 112, November-December 1978.

**Hitti, Philip K.** *The Near East in History* (Princeton,1961).

**Jazani, Bizhan** *Capitalism and Revolution in Iran* (Zed Press , London, 1980).

**Keddie**(eds) *Women in the Muslim World* (Harvard University Press , Cambridge, Mass., 1980. First edition 1978).

**Keddie, Nikki** *Roots of Revolution. An Interpretative History of Modern Iran* (Yale,1981).

**Keyder, Cagler** 'The Political Economy of Turkish Democracy ', *New Left Review* , no. 115, May- June 1979.

*Kommunistische Naueninternationale* (in German), journal of the Communist Women's International
1921-5, Stuttgart. Available at the Institute for Social History , Amsterdam.

**Laquer, Walter** *Communism and Nationalism in the Middle East* (London,1956).

**Lenczowski, George** *Iran under the Pahlavis* (California,1978).

**Lewis, Bernard** *The Emergence of Modern Turkey* (Oxford University Press, 1956).

___ *The Muslim Discovery of Europe* (Weidenfeld and Nicolson, London, 1982).

**Little, Tom** *Modern Egypt* (London, 1967).





**Marsot, Afaf Lutfi al-Sayyid** 'The Revolutionary Gentlewomen in Egypt', in Lois Beck and Nikki

**Mies and Kumari Jayawardena** *Feminism in Europe. Liberal and Socialist Strategies,* 1789 - 1990 ( Institute of Social Studies, The Hague, 1981.)

**Minai, Naila** *Women in Islam. Tradition and Transition in the Middle East* (Seaview Books, New York, 1981).

**Öncü, Ayse** 'Turkish Women in the Professions: Why so Many?' in N .Abadan-Unat (ed.) *Women in Turkish Society* (**E.J.Brill, Leiden** 1981).

**Philipp, Thomas** 'Feminism and Nationalism in Egypt', in Lois Beck and Nikki Keddie (eds) *Women in the Muslim World* (Harvard University Press, Cambridge, Mass., 1980. First edition 1978).

**Rodinson, Maxime** *Islam and Capitalism* (Suffolk, 1974 ).

___*Marxism and the Muslim World* (Zed Press, London 1979).

**Roshanak and Faramarz** 'The Veil and the Question of Women in Iran', in A. Tabari and N. Yeganeh (eds) *In the Shadow of Islam* (Zed Press, London, 1982).

**Said , Edward W.** *Orientalism* (Vintage Books, New York, 1979).

**Samin, Ahmet** 'The Tragedy of Turkish Left', *New Left Review* , no. 126, March-April 1981.

**Sanghvi, Ramesh** *Aryamehr: The Shah of Iran* (London, 1968).

**Sanghvi, Ramesh,** Green, Clifford and Missen, David (eds) *The Revolution of the Shah and the People* (London, 1967).

**Savory, Roger M.** ' Social Development in Iran during the Pahlavi Era ' in G. Lenczowski *Iran Under the Pahlavis* (California, 1978).

**Tabari, Azar and Yeganeh, Nahid** *In the Shadow of Islam. The Women's Movement in Iran* (Zed Press , London , 1982).

**Tekeli, Sirin** 'Women in Turkish Politics', in N. Abadan - Unat (ed.) *Women in Turkish Society* (E.J. Brill, Leiden , 1981)

**Toprak, Binnaz Sayari** 'Religion and Turkish Women', in N.Abadan- Unat (ed.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Women in Turkish Society* (E.J. Brrill, Leiden, 1981).

**UNESCO,** *Mustapha Kamal Ataturk* (Paris, 1963).

**Vatikotis, T.J.** *The History of Egypt* (London, 1980).

**Wilber, Donald N.** *Contemporary Iran* (London, 1963).

**Woodsmall, Ruth Frances** *Muslim Women Enter a New World* (New York, 1936).

___ *Women and the New East* (Washington, DC, 1960).

**Wortham, M.E.** *Mustapha Kemal of Turkey* (Boston, 1931).

**Yaganeh, Nahid** 'Women's Struggles in the Islamic Republic of Iran, in A. Tabari and N. Yeganeh (eds) *In the Shadow of Islam* (London, 1982).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது உலகில் மத்திய கிழக்கு பெண்கள்

மூன்றாவது உலகில் பெண்ணியமும் தேசியமும்

குமாரி ஜயவர்தன

19ஆம் நூற்றாண்டு தொடக்கம் ஆசியாவிலும் மத்திய கிழக்கிலும் பெண்களினால் பல அரசியல் போராட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளன. ஆனால், அவற்றின் வரலாறு குறித்து ஓரளவுக்கு மட்டுமே அறியப்பட்டுள்ளது. இந்நூல் அப்போராட்டங்களை விரிவாக எடுத்து விளக்குகின்றது. எகிப்து, துருக்கி, ஈரான், மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட பெண்கள் இயக்கங்கள் குறித்த விரிவான விவரங்களை குமாரி ஜயவர்தன இங்கு முன்வைக்கின்றார்.

பெண்நிலைவாதத்தின் வளர்ச்சி, பெண்களின் எழுச்சிக்கான இயக்கத்தின் வளர்ச்சி, இந்நாடுகளில் இடம் பெற்ற பரவலான தேசிய மற்றும் புரட்சிகரப் போராட்டங்களில் பெண்கள் வகித்த பாத்திரம் போன்ற விடயங்களை அவர் தனித்தனியாக எடுத்து நோக்குகின்றார்.

பெண்நிலைவாதம் என்பது மூன்றாவது உலக நாடுகளின் மீது திணிக்கப்பட்ட ஒரு மேலைத்தேச சித்தாந்தமாக இருந்து வருகின்றது என்ற கருத்துக்கு குமாரி ஜயவர்தன சவால் விடுகிறார். தமது நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டத்திலும் புரட்சிகர இயக்கத்திலும் பங்கேற்ற "வரலாற்றிலிருந்து மறைக்கப்பட்டிருக்கும்" பெண்களை வரலாற்றின் மைய நீரோட்டத்துக்குள் அவர் மீண்டும் எடுத்து வருகின்றார்.

பெண்கள் என்ற முறையில் தமது சொந்த விடுதலையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்கான துணிச்சலைக் கொண்டிருக்கும் மூன்றாவது உலக நாடுகளைச் சேர்ந்த இன்றைய பெண்களின் போராட்டங்களுக்கு அவசியமான நெறிமுறைகள் குறித்த நடைமுறைகள் இந்நூலில் காணப்படுகின்றன.

"மிகவும் விரிவான பெறுமதி மிக்க ஒரு நூல்... நல்ல வாசிப்பு அனுபவத்தைத் தரும் இது" *New Society*

"பெண்களின் விடுதலை தொடர்பான விரிவான ஆழமான ஒரு புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்வதற்கு வாசிக்க வேண்டிய ஒரு நூல்" *Women's Review*

"விரிவான ஆராய்ச்சிகளுடன் எழுதப்பட்ட சுவாரஸ்யமான ஒரு நூல். பயன்மிக்க வாசிப்பு" *Every Women*

"இத்தகைய ஆய்வுகளிலிருந்து பெண்நிலைவாதம் தொடர்ந்து வளர்ச்சியடையும். ஜயவர்த்தனவின் நூல் உலகெங்கிலும் வாழ்ந்து வரும் பெண்களின் வாழ்வின் மீது தாக்கங்களை ஏற்படுத்தி வரும்." *Tribune*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ISBN 955-9102-63-X